விலை ரூபா 20 பக்கங்கள் 36

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 188 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 20, புதன்கிழமை 03.06.2015

# அவசரமாக இன்றையதினம் கூடுகின்றது நாடாளுமன்றம்

## அரசமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்களை அங்கீகரிக்க

கொழும்பு, ஜூன் 3
அரசமைப்புப் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவில் உறுப்பினர் நியமனங்களை அங்கீகரிப்பதற்காக இன்று விசேட நாடாளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது.
அரசமைப்புப் பேரவைக்கான அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டு சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
இதில் பேரவைக்குப் பெயர் குறித்துப் பிரேரிக்கப்பட்டுள்ள மூன்று சிவில் உறுப்பினர்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
17ஆம் திருத்தச்சட்டத்துக்கு அமைய மூன்று பேர் மாத்திரமே நாடாளுமன்ற அங்கத்தவராக இருக்க முடியும். எனினும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட 19ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய அத்தொகை 3லிருந்து 7 ஆக உயர்த்தப்பட்டது.
இதற்கமைய பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பிரதமரால் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட விஜயதாச ராஜபக்ஷ, ஜனாதிபதியால் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட சம்பிக்க ரணவக்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவரால் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்பட்ட ஜோன் செனவிரட்ண மற்றும் சிறுபான்மை சிறு குழுக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் நாடாளுமன்ற 7 உறுப்பினர்களாகத் பக்.24

## சந்தேகநபர்களின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 3
புங்குடுதீவு மாணவியை வன்புணர்ந்து கொலை செய்த குற்றச்சாட்டில் கைதான 9 பேரிடமும் இருந்து இரத்த மாதிரிகள் நேற்று முன்தினம் பெறப்பட்டன.
மாணவியின் உடலில் இருந்து மீட்கப்பட்ட இரத்த மாதிரிகளையும் அதனுடன் தொடர்புடைய சான்றுப் பொருள்களும் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளன. அத்தோடு பக்.24

## வீதியை கடக்க முயன்றவர் ஹைஏஸ் மோதிச் சாவு

கனகராயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு வீதியைக் கடக்க முயன்ற ஒருவர் வவுனியாவில் இருந்து வந்த ஹைஏஸ் ரக வாகனம் மோதியதில் உயிரிழந்தார்.
விபத்தில் காயமடைந்தவரான கொல்ல விளாங்குளத்தைச் சேர்ந்த இரா மச்சந்திரன் - ரவிச்சந்திரன் (வயது-36) கிளிநொச்சி பக்.24

# மாங்குளத்தில் நேற்று பயங்கர விபத்து

## இருவர் சாவு; 18 பேர் காயம், சுக்குநூறானது சொகுசு பஸ்






கிளிநொச்சி, ஜூன் 3
மாங்குளத்துக்கு அருகில் உள்ள கிழவன்குளம் என்ற இடத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற பயங்கர விபத்தில் இருவர் உயிரிழந்தனர். சாரதி, நடத்துநர் உட்பட 18 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட, ஏனையோர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்த தனியார் சொகுசு பஸ்ஸே விபத்துக்குள்ளானது. வீதியில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின் பின்புறத்தில் மோதிய பஸ் நிலை குலைந்து கவிழ்ந்து சுக்குநூறாகியது என்று பொலிஸார் தெரிவித்தனர். ரயர் வெடித்து காற்றுப்போனதால் டிப்பர் வாகனம் வீதியில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
பயணிகளில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெகநாதன் உதய ஜோதி (வயது-50) என்பவரின் உயிரே விபத்து நடந்த இடத்தில் பிரிந்தது.
விபத்து நடந்ததை அறிந்து அவ்விடத்துக்கு விரைந்த பொதுமக்களும் இராணுவத்தினரும் பஸ்ஸினுள் நசியுண்டு கிடந்த பயணிகளை மீட்டு உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.
கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் தோமஸ் நிரைஞ்சன் (வயது-29) பக்.24

## இந்தியர்கள் மூவரும் காயம்

மாங்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்றையதினம் இடம்பெற்ற பேருந்து விபத்தில் காயமடைந்தவர்களில் மூவர் இந்தியக் குடிமக்கள் எனத் தெரியவந்துள்ளது.
கொழும்பில் இருந்து யாழ். நோக்கிப் பயணித்தவேளையில் மாங்குளம் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த டிப்பர் ரக வாகனத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளான பேருந்தில் பயணித்த இவர்கள் மூவரும் காயமடைந்தனர்.
தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு சிகிச்சை பெறுபவர்களான பெருமாள்-கருப்பையா மற்றும் இவரது மனைவியான கருப்பையா- பக்.24

## 14 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 3
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பக்.24

## மனைவியின் கழுத்தை அறுத்து கொன்ற கணவன் தற்கொலை

### செம்பியன்பற்றில் நேற்றுக் கொடூரம்



யாழ்ப்பாணம், ஜூன் 3
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி, செம்பியன்பற்றுப் பகுதியில் நேற்று கழுத்தறுபட்ட நிலையில் மனைவியின் சடலத்தையும் கிணற்றிலிருந்து கணவனின் சடலத்தையும் பொலிஸார் மீட்டனர்.
குடும்பத் தகராறு காரணமாக மனைவியின் கழுத்தை அறுத்துக் கொன்றுவிட்டு கணவன் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். பக்.24

## வேர்ஜினிய தீவு வங்கியில் புதிய நிறுவனம் இரகசிய கணக்கு

பக். 17

## சிரந்தி மீதான விசாரணை மஹிந்தவுக்கு விடுக்கப்பட்ட சவால்

பக். 16

## இளம் பெண்ணின் உயிரை பறித்தது மூடநம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3
மூடநம்பிக்கை காரணமாக நோய்க்கு சிகிச்சைப் பெறாது விட்ட இளம் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். தனக்கு செய்வினை, சூனியம் செய்துள்ளது என அந்தப் பெண் நம்பியதே பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறப்புற நிறைவுற்றது வற்றாப்பளை கண்ணகை ஆலய பொங்கல் உற்சவம்





யாழ்ப்பாணம், ஜூன் 3

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற முல்லைத்தீவு வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வில் அலை அலையாக லட்சக்கணக்கில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிய பொங்கல் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணிக்கு பூசையுடன் ஆரம்பமானபோது ஆரம்பமான பக்தர்களின் பொங்கல் பொங்கி அம்மனுக்குப் படைக்கும் நிகழ்வு நள்ளிரவைத் தாண் டியும் தொடர்ந்து கொண்டிருந்தது.

நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் கூட்டம் வந்திருந்ததனால் அங்கு நெருக்கம் மிக அதிகமாக இருந்தது. காலையிலிருந்தே அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தனர்.

நூற்றுக் கணக்கானவர்களின் பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள் என்பனவற்றுடன் பல வகைகளிலும் அடியவர்கள் தமது நேர்த்திகளை நிறைவேற்றினர். நள்ளிரவு 12 மணிக்கு பிரதான வளந்து வைத்துப் பொங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

சுமார் ஏழு லட்சத்துக்கு அதிகமான பக்தர்கள் பொங்கல் உற்வத்தில் கலந்துகொண்டனர் என்று கூறப்படுகின்றது. இது வழமையை விடவும் அதிக எண்ணிக்கையாகும்.

பக்தர்கள் கூட்டம் நிறைந்திருந்ததனைப் பயன்படுத்தி திருட்டுக் கொள்ளைகளும் தாராளமாக இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். திருடிய குற்றச்சாட்டில் சிறார்கள், பெண்கள் எனப் 15· இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## மு.கா உறுப்பினர் விளக்கமறியலில்

கொழும்பு, ஜூன்3

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாநகர சபை உறுப்பினரான முஹம்மட் அனஸினை ஜூன் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் கொம்பனித் தெரு பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை மற்றும் சட்டவிரோதமாக ஒன்றுகூடல் ஆகிய குற்றச்சாட்டின் கீழ் இவர் கொம்பனித்தெரு பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அன்றே நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவரை ஜூன் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கொழும்பு மாநகர சபை உறுப்பினரான முஹம்மட் அனஸ் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் மன்றில் முன்னிலையாகியிருந்தார். (ற-10)



காரைநகர் சத்திரந்தை ஞானவைரவர் கோவில் வைகாசி விசாகப் பெருவிழாவும் மணவாளக் கோல உற்சவமும் கடந்த திங்கட்கிழமை மிகச் சிறப்பாக இடம்பெற்றன. பகல் சங்காபிஷேகமும் இரவு அழகிய பூந்தண்டிகையில் வைரவப்பெருமான் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சியும் வழங்கினார்.தொடர்ந்து வில்லிசை மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.(ற-250)

## தேசிய மட்ட கட்டுரை போட்டியில் கண்டாவளை ம.வி. மாணவன்

கிளிநொச்சி, ஜூன் 3



போர் முடிவடைந்த பின்னர் முதன் முதலாக கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலய மாணவன் கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுச் சாதனை படைத்துள்ளான்.

கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தி யாலயத்தில் தரம் 7.ல் கல்வி கற்கும் மாணவன் வி.டிலக்சன் மாகாண மட்ட கட்டுரை போட்டி பிரிவு இரண்டில் முதலாம் இடத்தைப் பெற்று – தேசிய மட்டத்தில் நடைபெற இருக்கும் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளான் என கண்டாவளை மகாவித்தியாலய அதிபர் திருமதி மதியழகன் தெரிவித்தார்.

இம்மாணவன் கடந்த ஆண்டு மாகாணமட்டத்தில் இடம்பெற்ற சமூக விஞ்ஞான போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்று தொடர்ந்து விடா முயற்சியாக தற்போது பிரிவு இரண்டு கட்டுரை போட்டியில் மாகாண மட்டத்தில் 1ஆம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கு தகுதி பெற்றது தமது பாடசாலைக்கு பெருமையாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போரால் பாதிக்கப்பட்டு தற்போது மீண்டு வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் மாணவர்கள் தங்களது கல்வி செயற்பாடுகளில் உற்சாகமாக செயற்படும் அதே வேளை இனி வரும் காலங்களில் எமது மாவட்டத்திலும் கல்விமான்கள் அதிகமாக உருவாகுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (ற-21)

## புவனேஸ்வரி அம்பாள் ஆலய தேர் முடி விழுந்ததால் பக்தர்கள் கிலேசம்

வலி.தென்மேற்கு, ஜூன் 3

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்ப்பவனியின் போது பிள்ளையாரின் தேரில் வைக்கப்பட்டிருந்த முடி கழன்று கீழே விழுந்தது. எனினும் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் மேற்படி தேரிலுள்ள நான்கு சில்லுகளில் ஒரு சில்லு சுற்ற மறுத்தது. சில்லைச் சுற்ற வைக்க எடுத்த முயற்சி பயனளிக்காத தனால் சிரமத்தின் மத்தியில் தேரை மெல்ல மெல்ல இருப்பிடத்துக்கு அடியார்கள் இழுத்து வந்தனர்.

அடுத்தடுத்து இடம்பெற்ற துன்பகரமான இந்தச் சம்பவங்களால் அங்கு கூடியிருந்த அடியார்கள் மத்தியில் பீதியும், கவலையும் ஏற்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்றது.

தேர்த்திருவிழா ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான அடியார்கள் இந்தத் திருவிழாவில் கலந்து கொண்டனர். முதலாவதாக பிள்ளையாரின் தேரும், இரண்டாவதாக முருகனின் தேரும், மூன்றாவதாக அம்பாளின் தேரும் ஒன்றன் பின் ஒன்றாக இழுத்துச் செல்லப்பட்டன.

பிள்ளையாரின் தேர் தெற்கு வீதியில் சென்று கொண்டிருக்கும் போது, தேரில் பொருத்தப்பட்டிருந்த பித்தளையிலான முடி கழன்று கீழே விழுந்தது. தேரைச சுற்றி அடியார்கள் சென்று கொண்டிருந்த போதிலும் எவருக் கும் காயம் ஏற்படவில்லை.

இந்த நி லையில் முடி மீண்டும் பொருத்தப்பட்டு தேர் தொடர்ந்து இழுத்துச் செல்லப்பட்டபோது வடக்கு வீதியைத் தேர் அண்மித்ததும் தேரில் பொருத்தப்பட்டிருந்த நான்கு சில்லுகளில் ஒரு சில்லு திடீரென்று சுழல மறுத்துவிட்டது. சில்லைச் சுற்ற வைப்பதற்கு நெடுநேரமாக எடுத்த முயற்சி பயனளிக்காதனால் அடியார்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டது. அடியார்களின் அரோகரா என்ற சத்தத்துடன் தேர் மெதுவாக இருப்பிடத்துக்கு இழுத்து வரப்பட்டது.

பிள்ளையாரின் தேரில் இடம்பெற்ற இரு சம்பவங்களும் அங்கு குழுமியிருந்த அடியார்கள் மத்தியில் பதற்றத்தையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன. (ற-115)

## அக்கராயன் குளத்தின் நீர் வீண் விரயமாவதாக கவலை

கிளிநொச்சி, ஜூன் 3

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் நீர் சிறுபோக செய்கையின் தேவைக்காக தற்போது திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் இடதுகரை வாய்க்கால் ஊடாக வயல் நிலங்களுக்குச் செல்லும் நீர் அக்கராயன் அணைக்கட்டு வீதியில் ஓரிடத்தில் வீதியை குறுக்கறுத்துப் பாய்வதன் காரணமாக குளத்தின் நீர் அக்கராயன் ஆற்றினைச் சென்றடைந்து வீண்விரயமாகின்றது என்று கூறப்படுகின்றது.

அக்கராயன்குளத்தின் கீழ் இவ்வாண்டு 2 ஆயிரத்து 500 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குளத்தின் நீர் நெற்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. அக்கராயன் அணைக்கட்டு வீதியில் அந்தோனியார் ஆலயத்துக்கு முன்பாக வீதியின் குறுக்கறுத்து வாய்க்காலில் செல்லும் நீர் வீணாகப் பாய்வதன் காரணமாக நீர் விரயமாகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளியவளை, மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த பெண் பக்தர் ஒருவர் வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தில் மூன்றாவது ஆண்டாகவும் தூக்குக் காவடி எடுத்துத் தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றினார். ஆண்கள் மட்டுமே தூக்குக் காவடி எடுத்து நேர்த்திக் கடனை நிறைவேற்றலாம் என்று கருதப்பட்ட நிலையில் பெண்களாலும் முடியும் என்பதை அவர் மூன்றாவது ஆண்டாகவும் நிரூபித்துள்ளார். (ந-433)

# உதவிகள் தொடர்பில் ஆராய ஜேர்மன் தூதுவர்கள் யாழில்

## முதலமைச்சரை சந்தித்துப் பேசினர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

ஜேர்மனிய அரசால் எவ்வாறான உதவித் திட்டங்கள் எதிர்காலத்தில் வழங்க முடியும் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக, ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் யாழ். மாவட்டத்திற்கு நேற்று பயணம் மேற்கொண்டு வந்துள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது இல்லத்தில் சந்தித்து, இது தொடர்பில் அவர்கள் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:-

ஜேர்மனிய தூதரக அதிகாரிகள் அடிக்கடி எம்மை வந்து சந்திக்கின்றனர். ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் என்னைச் சந்தித்தனர். அவர்கள் மிக முக்கியமானவர்கள். ஜேர்மனிய அரசினால் இங்கு மேற்கொள்ளப்படும் உதவித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்கள்.

அத்துடன் எமது தேவைகள் என்ன என்பதையும் கேட்டறிந்தார்கள். இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே, எமது தேவைகளை ஜேர்மனிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து எமக்கான உதவித் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்க உதவி செய்யப் போகின்றவர்கள்.

*ஜேர்மனிய தூதரக அதிகாரிகள் அடிக்கடி எம்மை வந்து சந்திக்கின்றனர். ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் என்னைச் சந்தித்தனர். அவர்கள் மிக முக்கியமானவர்கள். ஜேர்மனிய அரசினால் இங்கு மேற்கொள்ளப்படும் உதவித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்கள் என்றார் வடக்கு முதலமைச்சர்*

இந்த வருட இறுதிக்குள் அல்லது அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில், கிளிநொச்சியில் தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளனர். இதன் மூலம் 700 பேர் வரையில் தொழில் கல்வியைக் கற்க முடியும். எதிர்காலத்தில், எங்களுடன் இணைந்து செயற்படுவதாக ஜேர்மனிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்- என்றார். (ந-5,101)

# கடந்த மாதத்தில் 52 பேருக்கு டெங்குத் தொற்று

## சுகாதார அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் 52 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுடன் ஒப்பிடுகின்றபோது குறைவானது என்று தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு ஆயினும் டெங்குத் தொற்று தொடர்ந்த வண்ணம் உள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் ஆயிரத்து 45 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், வடக்கின் ஏனைய மாவட்டங்களில் டெங்குத் தொற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்.மாவட்டத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-4)

# டெங்குக் கட்டுபாட்டு வாரம் நாளை முதல்

தென்மராட்சி, ஜூன் 3

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரம் நாளைமுதல் மூன்று நாள்கள் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதில் மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் அதிகமாகக் காணப்படும் பிரதேசங்களை உள்ளடக்கிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்குத் தாக்கம் அதிகமாக இனங்காணப்பட்ட மூன்று பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் விசேட டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் அந்தந்த உள்ளூராட்சிச் சபைகளின் பங்களிப் புடன் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## வருமான வரி பரிசோதகருக்கு மேலதிக கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் உப அலுவலகத்தில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகருக்கு விடுமுறை நாட்களில் பணிபுரிவதற்கான மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு சபையின் நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

மானிப்பாய் பட்டின உப அலுவலகத்தில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர் ஏனைய உப அலுவலகங்களிலுள்ள நீதிமன்ற வேலைகளைக் கவனிப்பதிலும் அதிகமான ஆதன பெயர் மாற்று விண்ணப்பங்களை நேரடியாகப் பார்வையிட்டு அறிக்கை வழங்க வேண்டி இருப்பதனாலும் வேலைப்பளு அதிகரித்துள்ளது. இதனால் ஐந்து விடுமுறை நாள்களில் கடமையாற்றுவதற்கான அனுமதியையும், அதற்கான மேலதிகக் கொடுப்பனவையும் வழங்குமாறு சபையிடம் வருமானப் பரிசோதகர் கோரியிருந்தார்.

இவரின் கோரிக்கை குறித்து விரிவாக ஆராய்ந்த நிதிக்குழு இது பற்றி பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்குமாறும் பரிந்துரை செய்துள்ளது. இதையடுத்து பொதுச் சபைக் கூட்டத்தில் இது பற்றி ஆராய்வதற்கான நடவடிக்கையை பிரதேச சபையிடம் கோரப்பட்டுள்ளது. (ந-115)

## மன்றில் ஒலித்தது கைபேசி: விதிக்கப்பட்டது அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்ற வேளையில் கைத்தொலைபேசி சத்த மெழுப்பியதை அடுத்து அதன் உரிமையாளருக்கு நீதிவான் கறுப்பையா ஜீவராணி, 1,000 ரூபா அபராதம் விதித் தார்.

வழக்கு விசாரணைக்கு வந்திருந்தவரின் கைத் தொலைபேசி திடீரென அதிக சத்தமாக ஒலித்துள்ளது. இதை அவதானித்த நீதிமன்ற பொலிஸார் அவரைக் கைது செய்து நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர். அவரை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான் அபராதம் விதித்தார். (ந)

# பணியாளர் வீட்டுக்கு நகர்ந்த வைத்தியசாலை தளபாடங்கள்

## உரிய விதிமுறைகள் ஏதுமின்றி

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.போதனா வைத்தியசாலையில் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த சொகுசு ஆசனங்கள் உரிய விதிமுறைகளின்றி வெளியே கொண்டுசெல்லப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் சுமார் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு தளபாடங்களே இவ்வாறு கொண்டு செல்லப்பட்டுள்ளன. வைத்தியசாலை நிதிப் பிரிவுக்குப் பொறுப்பானவர் உட்பட சிலர் அவ்வாறு அதனை எடுத்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

களஞ்சியசாலைக்குப் பொறுப்பானவருக்குத் தெரியாமலேயே அது வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அது தொடர்பில் தெரியவந்ததை அடுத்து அது வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உரிய விதிமுறைகள் ஏதும் இன்றி - திருடும் வகையிலாக - யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஒருவரது வீட்டுக்கு அவை எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருட நடுப்பகுதியில் வைத்திய சாலைக்குப் புதிதாகக் கொண்டு வரப்பட்டிருந்த அந்த சொகுசு ஆசனங்களின் பெறுமதி சுமார் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டதாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளபோதும் அவை சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியுடையது என்று மதிப்பிடப்பட்டே வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

வைத்தியசாலையில் உள்ள சில ... ஏல விற்பனை ... பட்டிருந்தன. ...

வந்திருந்த அதிகாரிகள் அவற்றை விற்பனை செய்திருந்தனர். அவர்கள் அவ்வாறு விற்பனை செய்து விட்டுச் சென்ற பின்னரே குறித்த சொகுசு கதிரைகள் ஏல விற்பனை என்ற அடிப்படையில் ரகசியமாக வெளியே எடுத்துச் செல்லப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

அந்த விடயம் வெளியே தெரிவந்து பணிப்பாளர்கள் வரை சென்றதனால் அதனுடன் தொடர்புடைய பொறுப்பாளர்கள், பணியாளர்கள் அழைக்கப்பட்டு பணிப்பாளர்களால் விசாரிக்கப்பட்டுள்ளனர். நிர்வாகப் பிரிவிலுள்ள ஒருவர் அதனை உறுதிப்படுத்தினார். அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் குறித்த சொகுசு கதிரைகளை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு ஹிலாரிக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 3

அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடத் திட்டமிட்டுள்ள அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவு தெரிவித்து, ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பி யுள்ளது.

2016 ஆம் ஆண்டு நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் ஹிலாரி கிளின்டன் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார்.

இந்த நிலையில், அவருக்கான ஆதரவை உறுதிப்படுத்தி அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் அமைப்பான ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கடிதம் ஒன்றை கடந்த மாதம் 30 ஆம் திகதி ஹிலாரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதில், ஏற்கனவே 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, ஒபாமாவுக்கு ஆதரவு வெளியிட்டதை நினைவுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்த ஆதரவு தொடரும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்குகள்

## பிரதேச புத்திஜீவிகளின் ஒன்றுகூடி முடிவு



தென்மராட்சி, ஜூன் 3
அண்மைக்காலமாக அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த ஒவ்வொரு வாரமும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை தென்மராட்சிப் பிரதேசத்தில் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.
பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள் போன்வற்றிலேயே இவ்வாறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன. இதுகுறித்த முடிவு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிரதேச புத்திஜீவிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் எட்டப்பட்டது.
யாழ்.மாவட்டத்தில் இளம் சமூகத்தினர் போதைப் பொருள்களுக்கு அடிமையாகிவிரும்பத்தகாதசெயல்களில் ஈடுபடுகின்றனர். அவ்வாறான செயல்கள் பாரம்பரியமிக்க கலாசாரப் பின்னணி கொண்ட யாழ். குடாநாட்டுக்கு அபகீர்த்தியை ஏற் படுத்துகின்றது. அதனால் முன்மாதிரியாக தென்மராட்சிப் பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த புத்திஜீவிகள் மூலம் கருத்தரங்குகளை நடத்துவது என அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 'குருந்தம்' மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற்றவர்களையும் இணைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டது.
இந்தக் கருத்தரங்கில் மருத்துவர் சிவசங்கர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி, பளைப் பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ப.முகுந்தன், மருதங்கேணி பிரதேச செயலர் க:கனகேஸ்வரன், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தென்மராட்சிப் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், தென்மராட்சிக் கல்வி வலய அலுவலர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் தலைமையிலான குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. இதன் முதலாவது விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மறுமதினம் டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.
இந்தக் கருத்தரங்கு தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு நடத்தப்படும் எனவும், தென்மராட்சிப் பிரதேச செயலரின் பங்களிப்புடன் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அலுவலர்கள் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும் இதற்கு அழைப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
(ந-9)



# போதைப்பொருள் எதிர்ப்பு செயற்பாடு

## சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் முன்னெடுப்பு

தென்மராட்சி, ஜூன் 3
போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்த னர்.
காலையில் மதுவரி நிலையத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வணிக நிலையங்கள் பொது மக்கள் போன்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வாசகங்கள் அடங்கிய சின்னங்களைஅவர்கள்வழங்கினர். தென்மராட்சி பிரதேச செயலகம் வரை இந்த ஊர்வலம் நடைபெற்றது. அங்கு உதவிப் பிரதேச செயலரிடம் சர்வதேச புகைத்தல் – மது எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி மதுவரி நிலைய உத்தியோகத்தர்கள் ஆகிய நாங்கள் இந்த ஆண்டில் வயது குறைந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் போதைப் பொருள்கள் கிடைப்பதை தடை செய்தல். அதிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் என்னும் செயற்பாட்டைச் செயற்படுத்தவுள்ளோம் என்ற உறுதிமொழி அடங்கிய மனுவை மதுவரி நிலைய பொறுப்பதிகாரி இ.பிரதாபன் கையளித்தார். (ந-9)

# பனை சார் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## பனை சார் உற்பத்திக் கம்பனியின் கூட்டத்தில் ஆராய்வு



தென்மராட்சி, ஜூன் 3
யாழ். மாவட்ட பனை சார் உற்பத்தி நிறுவனத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.
பனை சார் கைப்பணிப் பொருள்கள் உற்பத்தியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கி அவற்றின் ஊடாக தரமான உற்பத்திகளை உருவாக்கி ஏற்றுமதி ஏற்பாடுகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து அதில் ஆராயப்பட்டுள்ளது. அத்துடன் புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கி அங்கத்தவர்களுக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் தலைவி செல்வி பொ.ஐமுனாதேவி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், சட்ட ஆலோசகர் இராசநாயகம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(ந-9)

## போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு வாரம்

தென்மராட்சி, ஜூன் 3
சர்வதேச போதைப் பொருள் பாவனை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சிப் பிரிவினர் கடந்த 31ஆம் திகதி முதல் எதிர்வரும் 10ஆம் திகதிவரை போதைப் பொருள் எதிர்ப்பு வாரத்தைக் கடைப்பிடிக்கவுள்ளனர்.
இவ்வாரத்தில் என்றும் போதையற்ற ஒழுக்கம் நாட்டுக்குத் தேவை என்னும் தொனிப் பொருளில் பிரதேசத்தில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.
(ந-9)

## விபத்தில் மாணவன் காயம்



தென்மராட்சி, ஜூன் 3
தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிய மாணவனை வீதியில் வேகமாக வந்த வாகனம் மோதியது. அதில் மாணவன் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மீசாலை, ஏ–9 வீதியில் நடைபெற்றது. அதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த விஜயசேகரம் மேனன் (வயது–15) என்ற மாணவனே காயமடைந்தார்.
காயமடைந்த மாணவன் சாவ கச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ந-9)

# பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 03
கடந்த சனிக்கிழமை இரவு பொரளை பள்ளிவாசலின் முன்புறமாகவுள்ள நான்கு கண்ணாடிகள் கல்லெறிந்து சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
நொறுக்கப்பட்ட கண்ணாடித் துண்டுகள் ஜன்னலின் வெளிப் புறமாகவே கொட்டிக் கிடப்பதால் இந்தத் தாக்குதல் பள்ளிவாசலின் உள்ளிருந்தே இடம்பெற்றிருக்க வேண்டுமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எனினும் வாகனத்தில் வந்த சிலராலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பிரதேச மக்கள் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.
இது குறித்து விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். தனிப்பட்ட தகராறின் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாகக் கூறிய பொலிஸார். நிலைமை தற்போது கட்டுப்பாட்டிலிருப்பதாகவும் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர.



(ந-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்து சமய ஆசிரியர்கள் அரச சேவையில் இல்லை

*யோகேஸ்வரன் எம்.பி. கவலை*



மட்டக்களப்பு, ஜூன் 3

பௌத்தம் மற்றும் முஸ்லிம் மதப்போதனை ஆசிரியர்கள் அரச ஆசிரிய சேவையினுள் கல்வியமைச்சால் உள்வாங்கப்பட்டபோதிலும், இந்துமதபோதனை ஆசிரியர்கள் எவரும் எந்த நியமனங்களுக்குள்ளும் இதுவரையில் உள்வாங்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன்.

கூழாவடி விபுலானந்தா அறநெறிப் பாடசாலையின் விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினம்திங்கட்கிழமைநடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சுமார் 25 வருடங்களாக இந்து கலாசார திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளை தனது திணைக்களத்தின் கீழ் வைத்து நடத்துகின்றது. ஆனால், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இதுவரையில் நியமனங்களோ, ஊதியமோ வழங்கப்படவில்லை. இலங்கையில் கிட்டத்தட்ட ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலைகள் உள்ளன. இவை போதிய வசதிகளின்றி இயங்குகின்றன. அறநெறிப் பாடசாலைகளை வளப்படுத்துவதற்கு இந்து கலாசார திணைக்களம் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தாலும், இந்தப் பாடசாலைகளில் நியாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் எதுவும் அரசால் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை.– என்றார். (ற)

# சிறுபான்மை மக்களது அதிகாரப் பங்கீட்டுடன் தொடர்புடையதே மாகாண சபை

**கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவிப்பு**

மட்டக்களப்பு, ஜூன் 3

மாகாண சபையானது சிறுபான்மை மக்களின் அதிகாரப் பங்கீட்டோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். வடக்கு, கிழக்கில் அதிகாரப்பங்கீட்டை ஏற்றுக் கொண்டவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்கள், அனுசரித்துப் போகக் கூடியவர்கள் என பலதரப்பட்டோர் காணப்படுகின்றார்கள். இதற்கப்பால் மாகாணசபை முறைமை ஏற்றுக் கொண்டுசெயற்படுவதற்குதமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார் கள்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் எவ்வாறுள்ளது என்பது பற்றிக் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த காலத்தில் நியமனங்கள், நிதியொதுக்கீடுகள், அபிவிருத்திகள் உள்ளிட்ட பல விடயங்களில் தமிழ் மக்கள் கிழக்கு மாகாணசபையால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான புறக்கணிப்புக்கள் இனி மேலும் தொடரக் கூடாதென்பதற்காக கிழக்கு மாகாணசபையில் தமிழர்கள் ஆட்சியாளர்களாக மாற வேண்டும். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூவினத்தவர்களும் வாழ்வதால், மூவினத்தவர்களும் இணைந்து ஆட்சி புரிவதென்பது மக்களின் மனங்களுடன் ஒன்றிணைந்த ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமாகும். இந்த மாகாணத்தில் தற்போது ஆட்சி அமைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் வேலைத் திட்டங்களை வகுக்கவேண்டும்.– என்றார். (ற)

# காணாமற்போனோர் தொடர்பாக போராட்டம் நடத்தியும் பயனில்லை

**கவலை வெளியிடுகின்றார் அரிநேத்திரன் எம்.பி.**

மட்டக்களப்பு, ஜூன் 3

காணாமற்போனோரை மீட்டுத்தரக்கோரிவடக்கு,கிழக்குப் பெண்கள் பல போராட்டங்களை நடத்தியும் அதற்கான எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்காமல் இருப்பது வேதனைக்குரியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மகிழடித்தீவு கண்ணகியம்மன் ஆலய உற்சவத்தையொட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கலை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கண்ணகி தனது கணவனுக்காக நீதி கோரி மதுரை நகரை எரித்து நீதி பெற்ற வரலாறு இருக்கின்றது. ஆனால், இந்த நாட்டில் பெண்கள் தாங்கள் கணவன் மற்றும் பிள்ளைகளை மீட்டுத்தரக் கோரியும் அதற்கான நீதியைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர். பெண்களுக்குத்தான் இன்று சுதந்திரம் இல்லை என்றால் ஆண்களுக்கும் சுதந்திரம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. மண்டூரில் அரச உத்தியோகத்தர் மதிதயான் கொல்லப்பட்டார். இதனைத் தட்டிக்கேட்க பொது அமைப்புக்கள் முன்வரத் தயங்குகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒருகாலவரையறையை கொடுத்து இருக்கின்றனர். அதற்கு பின் மக்களைத்திரட்டி மதிதயானின் கொலைக்கு நீதி கோரி வீதி யில் இறங்கிப் போராட்டம் நடத்த இருக்கின்றோம். அதற்காக எமது மக்கள் முன்வரவேண்டும்–என்றார். (ற)

# முஸ்லிம் காங்கிரஸை மக்கள் மயமாக்குங்கள்

**பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக் தெரிவிப்பு**

திருகோணமலை, ஜூன் 3

கட்சியில் நீண்டகாலம் உழைத்தவர்கள் சோர்ந்துபோயுள்ளார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் புதியவர்கள் பழையவர்களுக்கு முன்னுரிமை வழங்கி முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்சியாக மாற்றி அமைக்கவேண்டும். – இவ்வாறு பிரதியமைச்சர் எம்.எஸ்.தௌபீக்தெரிவித்துள்ளார்.

ஜமாலியா விளையாட்டுக் கழக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பட்டணமும் சூழல் பிரதேசத்துக்கான மு.கா. மத்திய கிளை புனரமைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:–

எனது அரசியல் பிரவேசம் ஒரு விபத்தைப் போன்றது. பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரபின் மறைவுக்கு பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டு செயற்படுகின்றார். முஸ்லிம் காங்கிரஸ் பல தியாகங்களுக்கு மத்தியில் வளர்க்கப்பட்டுள்ளது.

என்து அரசியல் பயணத்தில் பல சவால்களை நான் எதிர்கொண்டுள்ளேன். கட்சித் தலைமைத்துவத்துக்கு பல நெருக்கடிகள் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் என்னை நெறிப்படுத்தி கட்சித் தலைவருக்கு பக்கத் துணையாக இருக்குமாறு அடிக்கடி ஆலோசனை வழங்கியவர்கள் கட்சிக்காக போராடியவர்களே. – என்றார். (ற)

# மாணவர்கள் சிறை செல்வதற்கு சமூகக் குறைபாடுகளே காரணம்

மட்டக்களப்பு, ஜூன் 3

சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளாலேயே மாணவர்கள் சிறைச்சாலைகளுக்கு செல்லும் நிலையேற்படுகின்றது என மட்டக்களப்பு சிறைச்சாலை ஆணையாளர் ஏ.பிரியங்கர தெரிவித்தார்.

மாணவர்கள் நற்பிரஜைகளாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களுக்கு விழிப்புணர் வூட்டும் கருத்தரங்கு மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட புனித மைக்கேல் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தற்போது சிறைச்சாலைகளில் அதிகளவிலான மாணவர்கள் கைதிகளாக உள்ளனர். மாணவர்கள் மத்தியில் சிறைச்சாலைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலைமையைக் கட்டுப்படுத்தி சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் ஓர் அங்கமாக குற்றவாளிகளாக அல்லாமல் நல்ல தலைவர்களாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.– என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார். (ற)

# தேடிச் சென்று மக்கள் குறையை அறியும் காலம் தற்போதுள்ளது

**கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவிப்பு**

மட்டக்களப்பு, ஜூன் 3

நல்லாட்சி அரசில் அரசியல்வாதிகள் மக்களை தேடிச்சென்று அவர்களின் குறைகளைக் கேட்கும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார்.

காத்தான்குடி மீனவர் சங்கங்களுக்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மக்கள் அரசியல்வாதிகளை தேடிச் சென்று தேவைகளை கேட்கும் காலம்முடிந்து, அரசியல்வாதிகள் மக்களை தேடிச்சென்று அவர்களின் தேவைகளை கேட்டறிந்துகொள்ளும் காலம் இன்று உருவாகியுள்ளது. மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆர்வம் காட்டுவதுடன், உரிய தீர்வை பெற்றுக்கொடுக்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளார். கடந்த அரசில் அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாக செயற்பட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அரச உத்தியோகத்தர்களுக்கு அரசியல்வாதிகள் அழுத்தங்களைக் கொடுத்தனர். சில அரசியல்வாதிகள் கடந்த அரசில் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்தார்கள். இன்று அந்த நிலைமை மாற்றப்பட்டுள்ளது. – என்றார். (ற)

# வறுமையை காரணம் காட்டி கல்வியை நிறுத்தாதீர்கள்

**திருக்கோவில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.குணாளன் வேண்டுகோள்**

அம்பாறை, ஜூன் 3

வறுமையைக்காரணம் காட்டி ஒரு சில பெற்றோர் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி தங்களது தொழிலுக்கு உதவியாக வைத்துள்ளனர். அது பெரும்பாலும் பின்தங்கிய பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றன. இந்த நிலையில், பெற்றோர் வறுமையை தாண்டியும் தங்களது பிள்ளைகளின் கல்விக்காக பாடுபடவேண்டும் – இவ்வாறு தெரிவித் தார் திருக்கோவில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.குணாளன்.

சர்வதேச இஸ்லாமிக் ரீலீப், மொறிசியஸ் நாட்டின் உதவியுடன் செயற்படுத்தும் வெள்ள நிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஐந்து பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கல்வி வாழ்க்கையின் முழுமையான சொத்து. கற்றவனாக இரு அல்லது கற்பிப்பவனாக இரு அல்லது கற்பவருக்கு உதவி செய்பவனாக இரு. கல்விக்கு தடையான நான்காவது நபராக இருந்துவிடாதே. இன, மத, மொழி வேறுபாடின்றி நல்ல சிந்தனை கொண்ட அமைப்பாக இஸ்லாமிக் ரீலீப் செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது.

நீர் பெறுவதற்கான உதவிகள், பண உதவிகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரண உதவிகள் என பல்வேறு துறைசார்ந்த உதவிகளை வறிய மக்களுக்காக இவர்கள் வழங்கி வருகின்றனர்.

எமது பிரதேசத்தில் கடந்த கால போர் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் நீங்கி அமைதியான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் வறுமையானது கல்விக்கு தடையாக இருந்து விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்ட இது போன்ற பல்வேறு அமைப்புக்கள் உதவிகளை புரிந்து வருகின்றமை மகிழ்ச்சி தருகின்றது.– என்றார்.

இஸ்லாமிக் ரீலிப் நிவாரண அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி இப்றாகிம் சப்ரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் ஏ.தர்மதாச, பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பணிகளைச் செய்வதில் குறுக்கீடு வரலாம். நண்பரின் ஆலோசனை நல்வழியில் செயல்பட உதவும். வெளியூர் பயணத்தில் மாற்றம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் உண்டு.

**இடபம்:** நண்பர், உறவினர்களுக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பாராத சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் பொறுமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். குடும்ப பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். முக்கிய பிரமுகர் ஒருவரது அறிமுகம் அல்லது பிறவகையில் லாபம் உண்டு.

**கடகம்:** நண்பர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். அதிக உழைப்பால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். சுற்றுச்சூழல் தொந்தரவால் நித்திரை கெடலாம். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்.

**சிங்கம்:** சிரமங்களை தவிர்க்க பொறுமையாக இருக்க வேண்டும். போக்குவரத்தில் கவனம் நல்லது. கணவன், மனைவி கருத்து வேறுபாடு வரலாம். தொழில், வியாபாரத்தில் வழக்கமான லாபம் உண்டு. பெண்களுக்கு சுபச்செலவு கூடும்.

**கன்னி:** இடையூறு செய்தவர்கள் விலகிச் செல்வர். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். யோகமான நாள்.

**துலாம்:** பிறரிடம் கேட்ட உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபாரம் வளர புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். வீட்டுச் செலவுக்காக கடன் பெறுகிற நிலை உண்டு. பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பை பெறுவர்.

**விருச்சிகம்:** குடும்ப நலன் கருதி புதிய திட்டம் தீட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. பெண்களுக்கு புத்தாடை, நகை கிடைக்கும். உடல் நிலையில் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** பணி விடயத்தில் அனுபவசாலிகளின் ஆலோசனை கிடைக்கும். அளவுக்கதிகமான செலவானாலும் வரவு இருக்கும். தியானமும் ஓய்வும் மனதிற்கு அமைதி தரும். தொழில், வியாபாரத்தில் வழக்கமான இலாபம் உண்டு.

**மகரம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. பிள்ளைகள் விடயத்தில் நற்செய்தி தேடி வரும். நல்ல நாள்.

**கும்பம்:** தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேறும். உபரி பணவரவால் சேமிப்பு கூடும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்ததை விட அதிக சம்பள உயர்வு கிடைக்கும். சிறப்பான விடயங்களுக்குரிய நாள்.

**மீனம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் உண்டு. பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். பணவரவைவிட செலவு அதிகம் இருக்கும். கவனமாக இருக்க வேண்டிய நாள்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

நீங்கள் எடுத்த ஆறடி நிலம் என்கிற படத்தை ஏன் பாதி யிலேயே நிறுத்திட்டீங்க?
இனி விக்கிறதுக்கு ஓர் அடி நிலம்கூட என் கிட்டே இல்லீங்க!

அந்த ரெயிலர் கடையில மகளிர் கூட்டம் அலைமோதுதே ஏன்?
ஜன்னல் வைச்சு ஜக்கெட் தச்சா கதவை இலவசமா தைத்துத் தர்றாராம் அதான்?

பிச்சைக்காரங்க எதுக்கு தினமும் என் வீட்டு வாசற்படியில் வந்து நிக்கிறாங்க...
உங்க மனைவிகூட சண்டை போடும்போது, தெருவுல போற பிச்சைக்காரனுக்கு என் பொண்ணைத் தருவேனே தவிர உன் தம்பிக்கு தரமாட்டேன் என்று சொன்னீங்களே...!





## புது ஹெல்மெட்

ஸ்குல்லி என்கிற ஹெல்மெட் நிறுவனம் புதிய ஹெல்மெட்டை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது, இதில் ஜி.பி.எஸ் கருவி, கமரா உள்ளன. ஹெல்மெட்டின் கண்ணாடியில் உள்ள திரையில் செல்ல வேண்டிய இடத்தை பதிவு செய்துவிட்டால் எவ்வளவு தூரம், எது எளிமையான வழி என்பதையும் காட்டும்.

## ரஜினியின் அடுத்த படம் ஓகஸ்ட்டில்





அட்டகத்தி , மெட்ராஸ் ஆகிய படங்களை இயக்கிய ரஞ்சித், ரஜினி நடிப்பில் மூன்றாவது படம் இயக்குகிறார். இதை தயாரிப்பாளர் தாணு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

தாணுவின் வி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் உருவாகும் இப்படத்துக்கு இன்னும் தலைப்பு வைக்கவில்லை. இப்படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். மெட்ராஸ் படத்துக்கு ஒளிப்பதிவு செய்த முரளி ஜி இப்படத்துக்கு ஒளிப்பதிவு செய் கிறார்.

கபிலன், உமாதேவி, கானா பாலா ஆகிய மூவரும் பாடல்களை எழுதுகின்றனர். பிரவீன் கே.எல். படத்தொகுப்புப் பணிகளை கவனித்துக் கொள்கிறார். கதாநாயகி உட்பட படத்தில் நடிக்கும் நடிகர்கள், நடிகைகள் தேர்வு தற்போது நடைபெற்று வருகிறது.

ஓகஸ்ட் மாதம் மலேசியாவில் படப்பிடிப்பு தொடங்கி, 60 நாட்கள் நடைபெறுகின்றன. அதைத் தொடர்ந்து தாய்லாந்து, ஹொங்காக் மற்றும் சென்னையில் 60 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற உள்ளது.

## பாரபட்சம் காட்ட வேண்டாம்



நடிகர் சங்கப் பிரச்சினைகளை பாரபட்சமில்லாமல் அணுகவேண்டும் என்று நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாருக்கு, நடிகர் நாசர் கடிதம் எழுதியுள்ளார்.

நடிகர் விஷால், நடிகர் சங்க கட்டடம் தொடர்பாக பேசிய பேச்சை தொடர்ந்து தாங்கள் எழுதிய அறிக்கையை படிக்க நேர்ந்தது. ஓர் உறுப்பினர் சங்க நிர்வாகிகளின் கருத்துக்கு மாறுபட்டு செயற்பட்டால் அவரிடம் விளக்கம் கேட்டு விசாரித்து நடவடிக்கை எடுப்பதுதான் முறை என்று நான் நினைக்கிறேன். பத்திரிகை அறிக்கை மூலமாக எச்சரிப்பது புதிய அணுகு முறையாக இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் நடந்தேறிய சிறப்பு செயற்குழு கூட்டத்தில், தை மாதத்துக்குள் வழக்கு முடிவுக்கு வரும். அப்படியில்லா விட்டால் போடப் பட்ட ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு எல்லோரையும் கலந்தாலோசித்து நடிகர் சங்கத்துக்கு புதிய கட்டடம் தொடங்கப் படும், என்று அறிவித்தீர்கள்.

இன்று தை கடந்து வைகாசியும் முடியப்போகிறது. எப்போது கூடப்போகிறோம்? எங்கே கலந்தாலோசிக்கப் போகிறோம்?

குழம்பி கிடக்கும் இக்கட்டடப் பிரச்சினை குறித்து மட்டுமே ஒரு சிறப்புக் கூட்டம் கூட்டி உள்ளும் புறமும் தெளிவாகத் தெரியும் வகையில் வெள்ளையறிக்கை ஒன்றை வெளியிட்டாலே போதும் தங்கள் மீதும் மற்ற நிர்வாகிகள் மீதும் பனியென சூழ்ந்திருக்கும் சந்தேகங்கள் மறைந்துவிடும்.

திரையுலகப் பிரச்சினைகளில் நம் தென்னிந்திய நடிகர் சங்கம் தீவிரமாகப் பங்கெடுத்து தீர்வு காண்கிறது என்பதை நான் நன்கறிவேன். அதேபோல் நடிகர் சங்கப் பிரச்சினைகளையும் பார பட்சமற்று அணுக வேண்டும் என்பதுதான் எல்லா சங்க உறுப்பினர்களின் மிகுந்த எதிர்பார்ப்பாகும் என்றுஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிணக்கால் பள்ளிவாசலுக்கு சீல்

## பொத்துவிலில் சம்பவம்

பொத்துவில், ஜூன் 3

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இயங்கி வந்த பள்ளிவாசல் ஒன்று நீதிமன்ற உத்தரவுக்கமைய பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் கிராம சேவகர் பிரிவு–05, சின்ன உல்லை பிரதேசத்தில் ஆர் 1681/ ஓம் /188 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்த மபாஸா பள்ளிவாசலே இவ்வாறு மூடப்பட்டது. மூடப்பட்ட பள்ளிவாசலின் திறப்பு நீதிமன்றால் தீர்ப்பு வழங்கப்பட்ட தாஹீர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் அங்கு நடைபெற்று வந்த தொழுகை உட்பட குர்ஆன் கறுக் கொடுத்தல் போன்ற சகல செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பள்ளிவாசலின் தற்போதைய தலைவர் எம்.பீ.எம். அபுசாலி:–

பள்ளிவாசல் அமைந்திருக்கும் காணி பள்ளிக்கு வக்பு செய்யப்பட்டதாக உறுதி இருக்கின்றது. குறித்த உறுதியை வைத்துத்தான் பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. யாருடைய காணியிலும் பள்ளி கட்டப்படவில்லை. பள்ளிவாசல் கட்டிய பிற்பாடுதான் பள்ளிவாசல் காணிக்கு உரிமை கோரி வந்துள்ளார் வைத்தியர் லாபீரின் சகோதரரான தாஹீர். அதன் பிற்பாடு வழக்கு தொடுக்கப்பட்டு தாஹீருக்கு பள்ளிக் காணி சொந்தமானது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் ஸ்தலத்துக்கு வந்த பொலிஸார் பள்ளிவாசலுக்குரிய பொருள்களை அப்புறப்படுத்துமாறு கோரினர்.

பொருள்கள் ஒன்றும் தேவையில்லை. பள்ளிவாசல் உட்பட இதர பொருள்களை உரிய நபருக்கு கொடுக்குமாறு நான் கூறிவிட்டு பள்ளிவாசலின் திறப்பை கொடுத்துவிட்டேன். தற்போது தாஹீர் பள்ளிவாசலை வைத்துக்கொண்டு பேரம் பேசுகின்றார். பள்ளிவாசலை விடுவிப்பதற்கு 40 இலட்ச ரூபா தருமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார். குறித்த தொகையை இரண்டு கிழமைக்குள் தருவதாக எழுத்து மூல ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பள்ளிவாசலை மீளத்திறப்பதற்கு நாம் கேட்டோம். ஆனால் அவர் அதற்கு அனுமதிக்கவில்லை'– என்றார்.

(ந–10)

# அண்ணாநகர் பாடசாலையின் வெள்ளிவிழா


வவுனியா, ஜூன் 3

வவுனியா அண்ணாநகர் பாடசாலையின் வெள்ளி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் எஸ் உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், மதியாக ராசா, இ.இந்திராஜா, எம்.பி.நடராஜ், த.சித்தார்தன் மற்றும் வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.அன்ரன் சோமராஜா மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் கல்வியியலாளர்கள், நலன் விரும்பிகள் உட்படப் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(ந–402)

# மின்னலால் மின்மானிகள் சேதம்



மட்டக்களப்பு, ஜூன் 3

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை ஏற்பட்ட இடி, மின்னலால் 26 வீடுகளின் மின்மானிகள் பழுதடைந்துள்ளன. இந்தத் தகவலை இலங்கை மின்சார சபையின் காத்தான்குடி மின்சார அலுவலக பொறுப்பதிகாரி பொறியியலாளர் ஏம்.ஏ.சி.எம். நௌபர் தெரிவித்தார்.

ஒரு வீட்டின் மின்மானி தீப்பற்றி எரிந்துள்ளது என்றும் ஆறு வீடுகளின் மின்மானிகள் வெடித்துள்ளன என்றும் தெரிவித்துள்ள அவர், ஏனையவை பழுதடைந்துள்ளன என்றும் குறிப்பிட்டார். (ந)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 3

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப் பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் மோட்டார்சைக்கிளில் மறைத்து கஞ்சாவை கொண்டுவந்த போது கைது செய்யப்பட்டார் என்று மட்டக்களப்பு போதைப் பொருள் தடுப்புப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் மோட்டார் சைக்கிள் கைப்பிடிக்குள் மறைத்துக் கொண்டுவரப்பட்ட 195 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் கூறினர்.



இது குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ந–10)


**ஸ்ரீ பருத்தியான் திருமணசேவை மணமகன் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 1974, கேட்டை, செவ்வாய் இல்லை, 51 ¼ கிரக பாவம், கனடா (P.R) உள்ள அரசசேவையில் பணியாற்றும் மணமகளுக்கு நற்குணமுடைய படித்த மணமகனை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிர்பார்க்கின்றோம்.

பதிவு இலவசம்

தொ.பே: 077 321 8675

email: Paruththiyan40@gmail.com

Facebook: Sriparuththiyan paruththiyan

(60382) (45.3.7)

**JCB BACKHOE சாரதி தேவை**

அனுபவம் வாய்ந்த JCB BACKHOE இயந்திரம் ஓடக்கூடிய சாரதி (Operater) தேவை. கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 722 2715

USAID FROM THE AMERICAN PEOPLE "Civil Society Initiatives to Promote the Rule of Law in Sri Lanka"

**மகளிர் அபிவிருத்தி நிலையம் வன்முறைகளால் பாதிக்கப்படும் மக்களுக்கு இலவச சட்ட சேவைகளை நடத்தி வருகிறது**

தொடர்புகளுக்கு:

இலவச சட்ட சேவை பிரிவு
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
இல.07, இரட்ணம் லேன்,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.இல.:- 021 222 4398, 021 321 5144

மேலதிக இலவச சட்ட சேவை பிரிவுகள் - வவுனியா,மட்டக்களப்பு மாவட்டங்களில்

1592591 (45.3.7)


## வலிகாமம் வடக்குபிரதேசசபை காங்கேசன்துறை.(மல்லாகம்)

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2015

சபை நிதி மூலம் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ்க் குறித்த வேலைகளுக்கான கேள்விவைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

- கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி **03.06.2015–16.06.2015** பி.ப 03.00 மணிவரை.
- கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி **17.06.2015** ந.ப 12.00 மணிவரை.
- கேள்விகள் திறக்கப்படும் திகதி **17.06.2015** பி.ப 02.00 மணிக்கு.

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் (Original ,Duplicate)தயாரிக்கப்பட்டு இரண்டு பிரதிகளையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு **"தவிசாளர்,வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை.(மல்லாகம்)"** என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.

1. இக்ராட் (ICTAD)வழிகாட்டல்களின் பிரகாரம் கனக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியகணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
2. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD)பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) ரூபா | இருக்கவேண்டிய ஆகக் குறைந்த (ICTAD) தரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | பள்ளியவத்தை வீதிப் புனரமைப்பு வேலை அளவெட்டி மத்தி | 0.96 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 14,000.00 | 1,000.00 |
| 02 | சீனெட்டிப்பாய் வீதிப் புனரமைப்பு வேலை அளவெட்டி கிழக்கு | 0.57 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 8,000.00 | 1,000.00 |
| 03 | தம்மளை காட்டுப்புல இணைப்பு வீதிப் புனரமைப்பு வேலை - அளவெட்டி மேற்கு | 0.76 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 11,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் காளி கோவிலடி குறுக்கு வீதிப் புனரமைப்பு வேலை – மல்லாகம் | 0.21 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 3,000.00 | 1,000.00 |
| 05 | தெல்லிப்பளை சைவப்பிரகாச வீதிப் புனரமைப்பு வேலை தெல்லிப்பளை | 0.39 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 5,000.00 | 1,000.00 |
| 06 | வித்தகபுரம் குருநாதர்சாமி கோவில் வீதிப் புனரமைப்பு வேலை – வித்தகபுரம் | 0.95 | C9அல்லது அதற்குமேல் | மூன்று மாதங்கள் | 13,000.00 | 1,000.00 |

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
திரு.சோமசுந்தரம் சுகிர்தன்
காங்கேசன்துறை(மல்லாகம்)
03.06.2015.

தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 30.05.2015 சிவபதமடைந்த

**சுப்பையாஐயர் கார்த்திகேசஐயர்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.உமாபதீஸ்வரக் குருக்கள்
ஸ்ரீமகாமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
கீரிமலை. (சி60394)(3.7.9)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
19.01.1958

மறைவு
30.04.2015

**திருமதி பரமவதி (கனி) பரமேஸ்வரன் (வரன்)**

கடந்த 30.04.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவி பரமவதி பரமேஸ்வரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (03.06.2015) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசிமூலமும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
சு.பரமேஸ்வரன்
(வரன், வரதர்)

வட்டு வடக்கு, சித்தன்கேணி (60364)(45.3.7)

## கீரிமலையில் நந்தவனம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

வரலாற்று சிறப்பு மிக்க கீரிமலைப் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியில் மலர்க் கன்றுகள் கொண்ட நந்தவனம் ஒன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை சிவபூமி அறக்கட்டளை நிதியம்மேற் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான காணியை ஆஸ்திரேலியாவில் வாழும் மூவர் தமது தாய் தந்தையர்களின் நினைவாக வழங்கியுள்ளதாகவும், இந்த நந்தவனத்துக்கு வேண்டிய மலர் கன்றுகள் யாவும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு நடப்படவுள்ளன என்றும் கூறப்பட்டது.

அதேவேளை குறிப்பிட்ட நந்தவனம் அமைப்பதற்கு வேண்டிய ஆரம்ப நடவடிக்கையாக குறிப்பிட்ட திட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக இந்தியாவின் இலங்கைக்கான துணைத் தூதரகத்தில் உள்ள துணைத் தூதருடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் இதற்கு வேண்டிய தொழில்நுட்ப உதவிகள் உட்பட ஏனைய உதவிகளையும் வழங்க தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்களில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளுக்கு வேண்டிய பூக்கள் இந்தியாவில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் கொண்டு வரப்படும் நிலைமை காணப்படுகின்றது. அதனால் சிறந்த நந்தவனத்தை உருவாக்குவதன் மூலம் பொது மக்களும் பொழுது போக்காக மனதுக்கு இனிய காட்சிகளை காண்பதுடன் ஆலயத் தேவைக்கு வேண்டிய பூக்களையும் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-86)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க ஸ்தாபகரும்
முன்னாள் தலைவியும் வாழ்நாள்
போசகருமாக இருந்த

**திருமதி புவனேஸ்வரி கனகரட்ணம்**

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு நாம் மிகுந்த கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

உரும்பிராய் கற்பக விநாயகர்
ம.சி.க.கூ.சங்க நிர்வாக சபை உறுப்பினர்களும்,
அங்கத்தவர்களும். (60396)(10.1.3)

## வருடாந்த மஹோற்சவம்

காரைநகர், ஜூன் 3

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. மஹோற்சவம் பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ந-250)

## டிராக்டர் விபத்தில் 21 பேர் காயம்

அம்பாறை, ஜூன் 3


அம்பாறை, பொத்துவில் பிரதான வீதிச் சுற்று வட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை டிராக்டர் பெட்டியொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 21பேர் காயமடைந்துள்ளனர் என்று பொத்துவில் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்த 21பேரும் உடனடியாக பொத்துவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனைய 16 பேர் பொத்துவில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளனர் என்றும் சிறுவனொருவன் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொஸன் விடுமுறையை கழிப்பதற்காக மொனறாகலை, சியம்பலாண்டுவ பிரதேசத்திலிருந்து பொத்துவில், அறுகம்பைக்கு டிராக்டரில் வந்தவர்களே விபத்தில் சிக்கியுள்ளனர்.

பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்று மற்றும் சியம்பலாண்டுவ ஆகிய வீதிகளுக்கான சுற்று வட்டத்திலுள்ள வளைவில் வேகமாக வந்து கொண்டிருந்த டிராக்டர் திரும்பியபோதே பின்புறப்பெட்டி கவிழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்து தொடர்பில் பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.05.1960

மறைவு
18.05.2011

**அமரர் இராமனாதன் லோகநாதன்**

(முன்னாள் செயலாளர் - காரைநகர் பிரதேச சபை)

திதி: பிரதமை (03.06.2015)

நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
என் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது
மறு ஜென்மம் துளிர் விடுமா? என் ஜென்ம
கனவெல்லாம் நனவாக.........

ஓம் சாந்தி

உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்:
அன்புமனைவி
லோ. ரதீஸ்வரி

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (60303)(45.6.3)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
23 . 08 . 1944

மறைவு
03 . 06 . 2013

**அமரர் அகஸ்ரின் வேதானந்தம்**

**(A.V. ஆனந்தன்)**

(ஈழத்தின் புகழ்பூத்த சிற்பக்கலைஞரும், பிரபல தொழிலதிபரும், தெல்லிப்பழை, ஆனந்தி & கோ. நிறுவனத்தின் உரிமையாளரும், தெல்லிப்பழை சிற்பாலயத்தின் நிறுவுநரும், யாழ். திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், மல்லாகம்/தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும், சமூக சேவகரும்)

*ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறவில்லை நம் துயரம்*
*விழிகளில் வழியும் காயாத கண்ணீர்த் துளிகளாய்*
*உங்களின் அன்பு முகம் என்றும் - எம் மனதில் நீங்காத நிழல்களாய்*
*மாசற்ற பிறவியாய் பாரினிலே வந்துதித்தீர்-ஏங்கியே தவிக்கின்றோம்.*
*பாசக் கயிறதனை பாதியிலே விட்டதற்காய்*
*கலைக்காக தன்னை அர்ப்பணித்த அற்புதச் சிற்பியே!*
*ஆண்டுகள் ஆனாலும் - உங்களின்*
*புகழும், கலைப்படைப்புக்களும்- என்றுமே*
*காலத்தால் அழியாத கலைச் சின்னங்களே!*
*ஞாலத்தால் உயர்ந்த உழைப்பின் உன்னதரே - உங்களின்*
*நினைவுகளும் உணர்வுகளும் காலமெல்லாம் எங்களின்*
*நீங்காத நினைவுகளில் ....*

உங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

சிற்பாலயம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் இருவர் காயம்

சுன்னாகம் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாகக் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சகோதரிகள் இருவர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரத்தியப் பயிற்சிக் கல்லூரி ஒன்றில் சாரத்தியப் பயிற்சி தொடர்பாக நடந்த வகுப்பில் கலந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு சகோதரிகளான றாஜீவ் மேரி ஆஷா (வயது – 26), றொனி ஜோனஸ் மேரி பமிலா (வயது–23) ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த வேளை திடீரென வீதிக்கு குறுக்காக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–36)

## வெருகலில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் அகழ்வுக்கு தற்காலிகத் தடை

### பிரதேச செயலாளர் எம். தயாபரன் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 3

வெருகல் பிரதேசத்தில் நீண்டகாலமாக இடம்பெற்று வந்த சட்டவிரோத ஆற்று மணல் அகழ்வுக்கு இந்த வாரம் முதல் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெருகல் பிரதேச செயலாளர் எம். தயாபரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் தேவைகளுக்காக பெறப்பட்ட ஆற்று மணல் அகழ்வு அனுமதியைப் பயன்படுத்தி அளவுக்கதிகமான அளவில் சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்வு இடம்பெற்றிருப்பது தெரியவந்திருக்கிறது. இந்த விடயம் திருகோணமலை மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுக்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.– என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வழங்கப்பட்ட அனுமதியின்படி நாளொன்று 2 உழவு இயந்திரப் பெட்டிகளிலேயே உள்ளூர்த் தேவைகளுக்காக மணலை அகழ முடியும். 0.6 கியூப் (ஒரு உழவு இயந்திரப் பெட்டி கொள்ளும் அளவு) நாளொன்றுக்கு 1.2 கியூப் (2 உழவு இயந்திரப் பெட்டி மணல்) அகழ முடியும். ஆனால், இந்த அனுமதியைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு சுமார் 20க்கு மேற்பட்ட உழவு இயந்திரப் பெட்டிகளில் திருட்டுத்தனமாக ஆற்று மணல் அகழ்வது தெரியவந்ததை அடுத்து ஆற்று மணல் அகழ்வதற்குத் தடை விதிக்கப்பட்டுவிட்டது.

இது ஒருபுறமிருக்க வெருகல் பிரதேசத்தில் மணலைக் களஞ்சியப்படுத்தி வைத்து விற்பனை செய்வதற்கான அனுமதி எவருக்கும் வழங்கப்பட்டிருக்காத போதும் நீண்டகாலமாக அவ்வாறு களஞ்சியப்படுத்தி விற்பனை செய்வதும் தெரியவந்ததையடுத்து அந்த செயற்பாடும் உடனடியாகத் தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

இவ்விதம் திருகோணமலை மட்டக்களப்பு நெடுஞ்சாலைக்கு அருகிலேயே நீண்ட காலமாக ஆற்று மணல் களஞ்சியப்படுத்தி விற்பனை செய்தல் இடம்பெற்று வந்திருக்கின்றது. வெளி மாவட்டங்களான பொலன்னறுவை, அம்பாறை மட்டக்களப்பிலிருந்து வரும் மணல் வியாபாரிகளுக்கு இவ்விதம் மணல் விற்பனை இடம்பெற்று வந்திருக்கின்றது. குறித்த சட்ட விரோத மண் களஞ்சியங்கள் கைப்பற்றப்பட்டதோடு அரச அதிபரின் உத்தரவுக்கமைய இத்தகைய மணல் அகழ்வும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த அளவுக்கதிகமான ஆற்று மணல் அகழ்வின் காரணமாக நாதன் ஓடை அணைக்கட்டு உடைப்பெடுத்து பிரதான வீதியையும், மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளையும் ஊடறுத்து வெள்ளம் கரைபுரண்டோடி பாதிப்புக்களை ஏற்படுத்தும் விடயத்தையும் மக்கள் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். தனிப்பட்ட ஓரிரு மணல் வியாபாரிகளின் சுயலாபத்திற்காக இந்தப் பிரதேச செயலாளர் பிரிவின் அனைத்துக் கிராமங்களுமே ஆபத்தைச் சந்திக்க வேண்டிய நிலைமையைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரியதற்கிணங்க இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் உள்ளூர் தேவைகளுக் காக மணல் அகழ்வதற்கு ஆறு பேருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இதன்படி, மாதமொன்றுக்கு 35 கியூப் மணலை அகழ்ந்து கொள்ள முடியும். ஆனால், ஒரு மாதத்துக்கான மணல் அகழ்வு அளவை அவர்கள் ஒரு நாளிலேயே 35 கியூப் ஆற்று மணல் சட்டவிரோதமாக அகழப்பட்டிருப்பது தெரியவந்திருக் கின்றது. இது ஒரு புறமிருக்க இந்த ஆற்று மணல் அகழ்வு வேலைகளுக்கு சிறுவர்களும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதும் தெரியவந்ததை அடுத்து அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.– என்று தெரிவித்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை



வட்டு கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணார்பண்ணை 35, B.A தம்பி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அற்புதம் சிதம்பரப்பிள்ளை 01.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சிதம்பரப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும் , ஜெயம் , விஜயன், பாலேந்திரன் , சிவராசா, யோகநாதன், ஜெயச்சந்திரன், ஜெயகௌரி, ஜெயகாந்தி, சந்திரபாபு, ஜெயதேவி, ஜெயரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயலக்ஷ்மி, கமலசாந்தினி , சீதாதேவி, தர்மலக்ஷ்மி, கிருஷ்ணமூர்த்தி, மணிவண்ணன், குவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், யசோதா, மயூரன், அஞ்சலீனா, கஜன், செந்தூரன், வினித், அகல்யா, அபிஷா, ருஷாலினி, சயுர்சன், அபிராமி, காயத்திரி, பிரதாயினி, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2015) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, B.A தம்பி ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தொடர்புக்கு:
021 320 2165, 077 846 4029, 076 855 0280



## விபத்தில் ஒருவர் சாவு

அம்பாறை, ஜூன் 3

அம்பாறை, சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவிலுள்ள வளத்தாப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தின திங்கட்கிழமை நள்ளிரவு இடம்பெற்ற வீதி விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார் என சம்மாந்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை அம்பாறை வீதி வளத்தாப்பிட்டிப் பிரதேசத்தில் இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதி மருங்கிலிருந்த பாறாங்கல்லுடன் மோதியுள்ளது. மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது. மரணமடைந்தவர் வளத்தாப்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த எஸ். ரவீந்திரன் (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கல்முனை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணம் குறித்து சம்மாந்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, அக்கரைப்பற்று –பொத்துவில் பிரதான வீதியில் தம்பட்டைப் பிரதேசத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இருவரில் சின்ன பனங்காட்டைச் சேர்ந்த வல்லிபுரம் சோதிநாயகம் (வயது 61) நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார். தம்பட்டைப் பகுதியிலிருந்து அக்கரைப் பற்று நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் எதிரே வந்த சைக்கிளும் மோதியது. இந்த விபத்து இடம்பெற்ற தினத்தன்று சம்பவ இடத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார். இதில் படுகாயமடைந்த ஏனைய இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்த நிலையிலேயே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### அருமைநாதன் கிருஷ்ணஜெகன் (குட்டி)



சாவகச்சேரி மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அருமைநாதன் கிருஷ்ணஜெகன்(குட்டி) 15.05.2015 வெள்ளிக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - காசிப்பிள்ளை, யோசப் - பெற்றம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அருமைநாதன் மற்றும் சுசிலாவதி தம்பதியரின் பாசமிகு மகனும் றெக்ஸ்(இத்தாலி), கிருஷ்ணபவானி, கிருஷ்ணகுகன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோபாலகிருஷ்ணன் - மஞ்சு, தமிழ்ச்செல்வன் - தரணிகா (லண்டன்) ஆகியோரினதும் சின்னக்கிளி, பெரியகிளி, பேபி (யாழ்ப்பாணம்), தங்கமணி(நீர்கொழும்பு), செல்லமணி(ஊர்காவற்றுறை), ஜெயரூபி(பாவற்குளம்) தவமணி (நாரம்பன) ஆகியோரினது அன்பு மருமகனும் அஞ்சலா (இத்தாலி), துஷ்யந்தி(பிரான்ஸ்), கிருபாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தமிழ்ச்செல்வி உதயகுமார்(விசுவமடு), ஜோர்ஜ் அல்பிரட்மெசியோ (வவுனியா), டேவிற்(கௌதாரிமுனை), செல்வரத்தினம் (நீர்கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும் அன்றீற்ரா றோசான், றொபின் ஆகியோரின் அன்புச்சித்தப்பாவும் கேதாயினி, திவாகரன், டிலக்ஸன், டிலுக்ஸன் ஆகியோரின் அன்பு மாமாவும் லக்ஸி, பவித்திரன், சாலினி ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும் சிந்து , பாருலன் (பிரான்ஸ்), ரஞ்சிதா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2015) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு பிரான்ஸில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமானந்தா வீதி,
மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 494 9796, 077 982 2930,
077 389 8635

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நமஹ

## மரண அறிவித்தல்

### இராசையா திருநாவுக்கரசு

(மோகன்)



சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இராசையா திருநாவுக்கரசு (மோகன்) 01.06.2015 திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், சத்திய மூர்த்தியின் (டென்மார்க்) மைத்துனரும், ரகுராம், றஜீவன், நிறோஜன், பானுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், பவித்திராவின் அன்பு மாமனும், சிவானியின் அன்புப் பேரனும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற தர்மதுரை, ஜெகசோதி, இராஜகோபால், மங்கையர்க்கரசி, இரத்தினகோபால் தேவகி, இரத்தினபூபதி, இராசபூபதி, தெய்வேந்திரன் (இந்திரன்), நாகேந்திரம், இராகவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருஞானசுந்தரம் யோகாம்பாள், தர்மலிங்கம், காலஞ்சென்ற விவேகானந்தம், பாலச்சந்திரன், கனகராஜா, சின்னராசா, செல்வராணி ரஜனி, தனலட்சுமி, றஞ்சினி, சறோஜாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 0049 2016 170 404
விலாசம்: DRUGES HOF
ST,15
(60393) 45143 ESSEN
(45.7.3) GERMANY.

தகவல்:
இராசையா - தெய்வேந்திரன்,
(சகோதரன்)
இந்திரன் ஜுவலர்ஸ், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆளணி வழங்குமாறுகோரி தொடர்கின்றது போராட்டம்

### மூதூர் தள வைத்தியசாலையில்

திருகோணமலை, ஜூன் 3

திருகோணமலை, மூதூர் தள வைத்தியசாலையில் நீண்டகாலமாக நிலவும் ஆளணி மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறைகளை நிவர்த்திக் கோரி, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்தது.

வைத்தியசாலை 2006ஆம் ஆண்டு தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டபோதும் போதுமான வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் பற்றாக்குறையுடன் பௌதிக வளங்களுமின்றி இயங்கி வருவதாக வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ்.எம். தஸ்லீம் தெரிவித்தார்.

மூதூர், வெருகல் மற்றும் சேருவில ஆகிய மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மூவின மக்களும் இந்த வைத்தியசாலையை சிகிச்சைக்காக நம்பியிருக்கின்றார்கள். நாளாந்தம் சுமார் 500 இற்கும் 600 இற்கும் இடைப்பட்ட நோயாளிகள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில்சிகிச்சைபெறவருகின்றார்கள்.

வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற வரும்போது அவர்கள் நிற்பதற்குக் கூட இடவசதியில்லாத சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வைத்தியசாலையில் 26 வைத்தியர்களுக்கான தேவை இருந்தும் 9 வைத்தியர்களே கடமை புரிகின்றார்கள். மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரேனும் இவ்வைத்தியசாலையில் கடமையில் இல்லை.

இவ்வாறானகுறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கோரியே எமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இவை தொடர்பில் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கும்வரை எமது போராட்டம் தொடரும் என வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் எஸ்.எம். தஸ்லீம் மேலும் தெரிவித்தார். வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரோடு இணைந்து பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கிராமியமட்ட சமூக அமைப்புக்களும் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுகின்றன. (ற-40)

## அரசியல்வாதிகளின் கையாலாகாத் தனமே அம்பாறை தண்ணீர் பிரச்சினைக்கு காரணம்

### குற்றஞ்சாட்டுகின்றது உலமாக் கட்சி

அம்பாறை, ஜூன் 3

அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் காணப்படும் குடி தண்ணீர் பிரச்சினைக்கு மக்கள் வாக்குகள் பெற்ற அரசியல்வாதிகளின் கையாலாகாத் தனமே காரணம் என உலமா கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மழைகாலத்தில் கிட்டங்கி ஆறு நிறைந்து ஊருக்குள் வெள்ளம் புகுவதும் கோடைகாலத்தில் நீர்வற்றுவதும் சுமார் நாற்பது வருட கால பிரச்சினையாகும். இங்கினியாகலையிலிருந்து வரும் நீர் கிட்டங்கி வழியாக கடலை சென்றடைகிறது. இந்த நீர் மழை காலங்களில் வயல்களில் பரவுவதால் இரு போகம் நெற்செய்கை பண்ணக்கூடிய காணிகள் ஒரு போகமே செய்யப்படுகின்றன. அதேபோல் அந்த நீர் ஊர்களுக்குள் செல்வதால் நிந்தவூர் சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை போன்ற பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. அதேபோல் மாவடிப்பள்ளி பாலமும் நிறைந்து மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை உருவாகும். - என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

இதுதொடர்பில் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்ததாவது:-

சம்மாந்துறை, கல்முனை தொகுதிகளில் கடந்த 25 வருடங்களாக முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திலும், மாகாணசபையிலும் இருந்தும்கூட இப்பிரச்சினை தொடர்கிறது என்றால் இதற்கு இத்தகைய மக்கள் பிரதிநிதிகளின் கையாலாகாத் தனமும் தொடர்ந்தும் தம்மை ஏமாற்றும் கட்சியினருக்கு வாக்குப் போடும் மக்களின் ஏமாளித்தனமுமே காரணமாகும்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்கென கடந்த அரசில் பசில் ராஜபக்ஷவால் வழங்கப்பட்ட 250 கோடி ரூபாவில் ஒரு சதம் கூட இப்பிரச்சினைக்கு செலவிடப் படவில்லை என்பதன் மூலம் மக்கள் எந்தளவுக்கு மோசமாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும். தற்போது முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே அம்பாறை மாவட்டத்தின் ஆளுநங்கட்சியாக உள்ளது. அதன் தலைவர் நீர்ப்பாசன மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சராக இருந்தும் மக்களின் நீர்ப்பிரச்சினை தீரவில்லை என்றால் தமது பிரதேசம் பற்றித் தெரியாத, அதற்கு கொஞ்சமும் தொடர்பற்ற ஒரு தலைமையைக் கொண்ட கட்சிக்கு மக்கள் வாக்களிப்பதும் காரணமாகும். கல்முனை தலைமை கொண்ட முஸ்லிம் கட்சி நாடாளுமன்றத்தில் இருக்குமாயின் இத்தகைய பிரச்சினைகளை நாமாகவே தீர்த்திருக்க முடியும்.

மக்கள் எதிர்நோக்கும் குடி தண்ணீர், வெள்ள பிரச்சினை களை தீர்க்க ஆளுநங் கட்சியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் ஒரே கட்சியான முஸ் லிம் காங்கிரஸ் முன் வரவேண்டும். இதனை எவ்வாறு தீர்க்கலாம் என்பதற்கான கருத்தரங்குகள் ஆளணி மற்றும்பண பலம் உள்ள கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்தால் அதில் உலமா கட்சியின் திட்டத்தை முன்வைக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். அப்படியும் இல்லா விட்டால் எதிர் வரும் தேர்தல்களில் இவர்களுக்கு பாடம் படிப்பிக்கு முகமாக கல்முனை தலைமை கொண்ட முஸ்லிம் கட்சியை ஆதரிக்க மக்கள் முன்வர வேண்டும். இல்லாவிடில் மக்களின் புலம்பல் தொடர் கதையாவது தவிர வேறு வழியில்லை- என்றார். (ற-10)

# எட்டு வயதுச் சிறுமியை கடத்திச் சென்று துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர் கைது

### ஊர்மக்கள் திரண்டு பிடித்தனர்: புத்தளத்தில் சம்பவம்



கொழும்பு, ஜூன் 3

புத்தளம் தில்லையடி பகுதியில் எட்டு வயது சிறுமி ஒருவரை காட்டுக்குள் பலவந்தமாக கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த நபர் ஒருவர் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு சரமாரியாக தாக்குதலுக்குள்ளான நிலையில் பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். குறித்த நபரை புத்தளம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியபோது சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

புத்தளம், தில்லையடி பகுதியில் அநகாரிக்க தர்மபால ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் குறித்த சிறுமி பாடசாலை விட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது, சந்தேக நபர் ஒருவர் குறித்த சிறுமியை பலவந்தமாக காட்டுக்குள் தூக்கிச் செல்வதை சிலர் அவதானித்துள்ளனர்.

குறித்த நபர் சிறுமியை கடத்திச் சென்று காட்டிற்கு மறைத்து வைத்திருந்த நிலையில், புத்தளம் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து நடத்திய தேடுதலை அடுத்து சுமார் இரண்டு மணிநேரத்திற்குப் பின்னர் சிறுமி பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன் சிறுமியை கடத்திச் சென்ற நபர் காட்டில் பதுங்கியிருந்த நிலையில், பிடிக்க முடிந்ததாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சிறுமி புத்தளம் தில்லையடி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் இரட்டை பிள்ளைகளில் ஒருவர் எனவும் மற்றைய பிள்ளை ஆண் பிள்ளை எனவும் கூறப்படுகிறது.

சிறுமி தினமும் தனது சகோதரனுடன் முச்சக்கர வண்டியில் பாடசாலைக்கு சென்று வீட்டிற்கு திரும்புவது வழமை. எனினும் நேற்று முன்தினம் சந்தேகநபர் சிறுமியை தந்திரமாக ஏமாற்றி தில்லையடி வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு அருகில்உள்ள அடர்ந்தகாட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பிரதேசவாசிகளும் புத்தளம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து அதிகாரிகளுடன் இணைந்து சிறுமியை தேடும் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

தேடுதல் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டு மணிநேரத்திற்கு பின்னர் சிறுமி காட்டிற்குள் இருந்து அழும் சத்தம் கேட்டுள்ளது. அழுகை சத்தம் கேட்ட திசையை நோக்கி பிரதேச வாசிகள் சென்ற போது சிறுமி அவர்களை நோக்கி ஓடி வந்துள்ளார். பிரதேசவாசிகளுடன் சென்ற சிறுமியின் தந்தை சிறுமியைத் தூக்கி கொண்டு அருகில் உள்ள ரயில் பாதைக்கு ஓடி வந்துள்ளார். சிறுமியை தாயுடன் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி விட்டு, அங்கு கூடியிருந்த சுமார் 2 ஆயிரம் பிரதேசவாசிகளும் பொலிஸாரும் இணைந்து மீண்டும் காட்டில் தேடுதலை மேற்கொண்டனர். கடும் முயற்சிக்கு பின்னர் சிறுமியை கடத்திச் சென்ற நபரை பிடித்தனர்.

பிரதேசவாசிகள் ஆத்திரமடைந்து செயற்பட்டதன் காரணமாக பிடித்த நபரை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்ல மேலும் ஒரு மணிநேரம் தாமதமானது. பிரதேசவாசிகள் சந்தேகநபரை கடுமையாக தாக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் காரணமாக புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் தில்லையடி வேளாங்கண்ணி தேவாலயத்திற்கு அருகில் இருந்து ரயில் கடவை வரை பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் புத்தளம் பாலாவி பிரதேசத்தை சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரால் கடத்திச் செல்லப்பட்ட சிறுமியை புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (ற)


**போன் திருத்துநர் தேவை**

யாழ் செரண்டிப் என்ரப்பிறைசஸ் நிறுவனத்தின் கொழும்பு கிளைக்கு போன் திருத்துநர் உடனடியாகத் தேவை.
தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். (60391) (5.7.3)
தொடர்பு: 071 664 7692

**தவறிவிட்டது**

பாலம் கோட்டை இறக்குவானைச் சேர்ந்த முனுசாமி சிவநேசன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (840371573 V) வாகனசாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் A.T.M வங்கி அட்டைகள் என்பன அடங்கிய பேர்ஸ் 29.05.2015 யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 222 5531

**மணமகள் தேவை**

யாழ் இந்து ,மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மணமகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.
தொடர்பு: pnmal1@yahoo.co.uk
T.P: 006 012 2822 117 (9ஆம் திகதிக்குப் பின்புதொடர்பு கொள்ளவும்)
076 591 2520

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகரில் கடத்தப்பட்ட மாடுகள் மடக்கிப் பிடிப்பு



காரைநகர், ஜூன் 3

காரைநகர் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் கடத்தப் படவிருந்த ஒரு தொகை மாடுகள் அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக காரைநகரில் இருந்து பெருமளவு மாடுகள் களவாடப்பட்டுக் கடத்தப்படுகின்றன என்றும், அதைத்தடுப்பதற்கு இளைஞர்கள் நடவடிக்கைகளை எடுத்து வந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை பொன்னாலை ஊடாகச் சென்ற வாகனம் ஒன்றை மறித்து இளைஞர்கள் சோதனையிட்டபோது அதற்குள் சுமார் 15 மாடுகள் அடைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அதையடுத்து குறித்த வாகனத்தையும், மாடுகளையும் வாகனத்தில் இருந்த இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் கூறப்பட்டது.

காரைநகரில் பொலிஸ் நிலையம் இல்லாத காரணத்தால் தினமும் பனை மரங்கள், கால்நடைகள் என்பன இரவு வேளைகளில் கடத்தப்படுகின்றன என்று கூறும் அந்தப் பகுதி மக்கள், இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-250)

# உள்ளூர் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் நடவடிக்கை

## வலி.தென்மேற்குப் பிரதேச சபை முன்னெடுக்கின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 3

உள்ளூர் படைப்பாளிகளை ஊக்குவிக்க முன்வந்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபை, உள்ளூர் படைப்பாளிகளால் எழுதி வெளியிடப்பட்டுள்ள தரமான நூல்களைக் கொள்முதல் செய்து சபையின் கீழுள்ள நூலகங்களில் வைத்துள்ளது.

படைப்பாளிகளிடமிருந்து நூல்களை கொள்வனவு செய்வதற்கான நிதியை பிரதேச சபையின் நிதிக்குழு வழங்கியதையடுத்து இந்த நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது குடாநாட்டிலுள்ள பல எழுத்தாளர்கள் சுதந்திரமான முறையில் தங்கள் மனதில்படும் நல்ல கருத்துக்களை மக்களுக்குப் ப்யன்படும் வகையில் நூல் வடிவமாக எழுதி வெளியிட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் நல்ல சிந்தனைகளையும், கருத்துக்களையும் பதிய வைக்கும் வகையிலும் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையிலும் பிரதேச சபை தரமான நூல்களைக் கொள்வனவு செய்து பிரதேச சபையின் கீழுள்ள நூலகங்களில் வைத்துள்ளது.

இந்த நூல்களுக்கான பணத்தை உரியவர்களுக்கு வழங்குவதற்கு நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளதை அடுத்து பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கையையும் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது. (ற-115)

## வருத்தப்படாத வாலிபர் சங்க அலுவலக திறப்பு விழாவும், மாணவர் கௌரவிப்பும்



யாழ்ப்பாணம், ஜூன் 3

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்துக்கான புதிய தலைமைக் காரியாலயம் திறக்கப்பட்டதுடன், ஜீ.சி.ஈ. சாதாரண தர மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு ஆரம்பமாகி தலைமைக் காரியாலய பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள், விருந்தினர்கள் உரை என்பன இடம் பெற்றன. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பேராசிரியர் சிவலிங்கராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவகரன் கலந்து கொண்டார்.

சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' என்ற செயற்றிட்டத்தின் கீழ் 2 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் தேசியமட்ட உயரம் பாய்தலுக்கு தெரிவான மாணவி ஒருவருக்கு உயரம் பாய்தலுக்கான காலணிகளும் வழங்கப்பட்டன.

கிராம ரீதியாக சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற முதல் 10 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ற-4)

## மட்டக்களப்பு மண்முனையில் போதைப்பொருள் விழிப்புணர்வு



மட்டக்களப்பு, ஜூன் 3

சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தின கொடி விற்பனை ஆரம்ப நிகழ்வு மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வு வாழ்வின் எழுச்சித் திணைக்கள சமூக அபிவிருத்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் ஆரம்ப நிகழ்வின்போது சமுர்த்தி சங்கங்கள் மற்றும் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் களால் கொடி விற்பனை செய்யப்பட்டது. இதில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின கொடியை பிரதேச செயலாளர் எஸ்.சுதாகருக்கு வழங்கினர்.

இந்தக் கொடி விற்பனை நிகழ்வு தொடர்ச்சியாக 10 நாள்களுக்கு நடைபெறவுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் நிதி வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் உதவிகளுக்காகவும் மற்றும் வருமானம் குறைந்தவர்களின் பெரும் நோய்களின் சிகிச்சைக்காகவும், வீடுகள் திருத்தும் பணிகளுக்காகவும் ஏனைய உதவிகளுக்காகவும் பயன்படுத்தப் படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, கணக்காளர் ஜெகதீஸ்வரன் மற்றும் வாழ்வின் எழுச்சி முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி.எம்.தமயந்தி, தலை மையக முகாமையாளர் த.சத்தியசீலன் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு தின நிகழ்வு இலங்கையில் பல பாகங்களிலும் வாழ்வின் எழுச்சி திணைக்களத் தினால் முன்னெடுக்கப்பட்டுள் ளது. (ற-10)

## விதிமுறை மீறிய குற்றம்: 3 ஆயிரம் வழக்குகள் பதிவு

மட்டக்களப்பு, ஜூன் 3

கிண்ணியா பிரதேசத்தில் கடந்த எட்டு மாத காலப்பகுதிக்குள் போக்குவரத்துச் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றத்திற்காக 3 ஆயிரத்து 895 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று கிண்ணியா பொலிஸ் நிலைய வீதி போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விதிமுறைகளை பின்பற்றாமை குற்றத்திற்காக 4 வழக்குகளும் மது பாவனையில் வாகனங்களை செலுத்திய குற்றத்துக்காக 5 வழக்குகளும் பொலிஸாரின் கட்டளைகளை மீறிய குற்றத்திற்காக 38 வழக்குகளும் வாகன அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களை செலுத்திய குற்றத்துக்காக 45 வழக்குகளும் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றத்துக்காக 894 வழக்குகளும் வேறு குற்றங்களுக்காக 2 ஆயிரத்து 909 வழக்குகளும் பதியப்பட்டுள்ளன. – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய பச்சை கட்டு திருச்சடங்கு





கொக்கட்டிச்சோலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு உற்சவத்தின் பச்சை கட்டு திருச்சடங்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன் போது கண்ணகை அம்மனுடைய சிலம்பு ஏந்தி மயில், அன்னம், கூத்துக்கள் போன்ற பல பாரம்பரிய ஆடல்களுடன் பூசைக்குரிய பொருள்களை பெண்கள் தலையில் ஏந்தியவாறு ஊர்வலம் நடைபெற்றது.

குறித்த ஊர்வலம் கொக்கட்டிச் சோலை நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து கொக்கட்டிச் சோலை கண்ணகை அம்மனை சென்றடைந்து பகல் பூசை ஆராதனைகள் சிறப்புற நடைபெற்றன.

அத்துடன் அன்றைய தினம் இரவு [illegible] வும் நடைபெற்றது. (ற-10)

## ஏறாவூர் வாவிக் கரையோரம் சிரமதானம் மூலம் துப்புரவு



மட்டக்களப்பு, ஜூன் 3

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏறாவூர் வாவிக்கரையோரப் பூங்கா ஏறாவூர் நகர சபை உத்தியோகத்தர்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நகர சபைச் செயலாளர் எம்.எம்.எம். ஹமீம், "வீட்டையும் சூழலையும் சுத்தமாகப் பேணி இயற்கை எழிலை நிலைபேறானதாக வைத்திருக்கும் தொடர் நடவடிக்கையாக இந்தத் துப்புரவு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த சிரமதானப் பணிகளில் நகர சபை அலுவலர்கள் சகலரும் ஈடுபட்டனர். இந்த செயற்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் திட்டச் செயலகம் அனுசரணையை வழங்கியிருந்தது." – என்றார்.

குறித்த செயற்திட்டத்தில் வாவிக்கரையோரப் பூங்காத் திடல் முழுமையாக துப்புரவு செய்யப்பட்டதுடன் அங்கு சுற்றாடலைப் பேணும் வகையில் மரநடுகையும் நடைபெற்றது. (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசுர வேகத்தில் வளரும் குழந்தை



லண்டன்,ஜூன் 3
பிரிட்டனில் பிறந்து சில வாரமே ஆன குழந்தை ஒன்று அசுர வேகத்தில் வளர்வதைக் கண்டு அதன் பெற்றோர்கள் ஆச்சரியம் அடைந்துள்ளனர்.
பிரிட்டனின் கென்டில் உள்ள கென்டர்பரி பகுதியைச் சேர்ந்த பென் கேஸ்டில் தம்பதினருக்கு கடந்த பெப்ரவரி மாதம் குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தை பிறந்து 10 வாரங்கள் ஆனவுடன் அதன் நிறை 7 கிலோவும், 63 செ.மீ உயரமும் இருந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். (14)

# நைஜீரியாவில் கோர விபத்து

## 70 பேர் உடல் கருகி சாவு



லாகோஸ்,ஜூன் 3
நைஜீரியாவின் வர்த்தக நகரமான அனம்பிராவில் ஒனிட்ஷா என்ற இடத்தில் போக்குவரத்து அதிகம் உள்ள பஸ் நிலையம் உள்ளது. அந்த வழியாக வந்த பெற்றோல் லொறி ஒன்று திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து அந்த பஸ் நிலையத்துக்குள் புகுந்து பஸ்கள் மீது மோதித் தீப்பிடித்தது. அதில் அங்கு இருந்த 70 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர். 12 பேர் காயம் அடைந்தனர். சுமார் 12 பஸ்களும், ஏராளமான மோட்டார் சைக்கிள்களும் நாசமாகின.
பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது, பெற்றோல் லொறி கட்டுப்பாட்டை இழந்ததற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. ஆனால் அதில் தவறான நோக்கம் எதுவும் இல்லை. உடல்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு உள்ளதால், உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிவித்தார். (14)

## மோடியை கைது செய்வோருக்கு 100 கோடி ரூபா பரிசுத் தொகை

### பாகிஸ்தான் தலைவர் அறிவிப்பு



டில்லி,ஜூன் 3
காஷ்மீர் மற்றும் குஜராத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட காரணமாக இருந்த வர் மோடி என்று பாகிஸ்தானைச் சேர்ந்த ஜமாத் இ இஸ்லாமி கட்சி தலைவர் சிராஜுல் ஹக் தெரிவித்துள்ளார்.
காஷ்மீர் பாகிஸ்தானின் ஒரு பகுதி ஆகும். இந்தியாவுடன் நட்புறவு பாராட்டும் எந்த பாகிஸ்தான் அரசியல் தலைவரும் பாகிஸ்தானுக்கும், காஷ்மீர் மக்களுக்கும் துரோகி ஆவார்.
இந்துஸ்தானுடன் நட்பு வேண்டும் எனில் இந்துஸ்தான், டில்லி, மும்பைக்கு சென்றுவிடுங்கள். உங்களுக்கு இஸ்லாமாபாத்தில் இடம் இல்லை. ஜம்மு காஷ்மீரில் இந்தியர்கள் செய்யும் அட்டூழியத்தை பாகிஸ்தான் தலைவர்கள் கண்டும் காணாமலும் உள்ளனர். மேலும், ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைவர் செய்யது சலாஹுத்தீனை கைது செய்ய உதவி செய்பவர்களுக்கு 50 கோடி ரூபா (இந்திய) பரிசை இந்திய அரசு அறிவித்துள்ளது. அவ்வாறே மோடியை கைது செய்பவர்களுக்கு 100 கோடி ரூபா (இந்திய) பரிசு அளிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (14)

## யேமனில் சவூதிக் கூட்டுப்படை தாக்குதல்

மேயன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி கூட்டுப்படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தநிலையில் ஈரான் ஆதரவு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் செலுத்தும் வடக்கு சாடா பகுதியில் சவூதி கூட்டுப்படையினர் போர் விமானங்கள் மூலமாக நேற்று முன்தினம் குண்டுகளை வீசி எறிந்து தாக்குதல் நடத்தினர். இதேபோன்று அரேபிய கடலில் உள்ள ஏடன் துறைமுகத்தின் புறநகர் பகுதியிலும் இந்த தாக்குதல் நடந்தது. இந்த வான்வழித் தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து உடனடித் தகவல்கள் இல்லை. இதுகுறித்து தாக்குதல் நடந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் கூறுகையில், இரவு முழுவதும் வெடிகுண்டுச் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வசிக்கும் ஏடன் புறநகர் பகுதியில் இந்த தாக்குதல் நடந்தது எனத் தெரிவித்தனர். (14)



சீனாவில் ஹெனான் மாகாணத்தில் பாடசாலைக்கு செல்லும் ஊரக பகுதி மாணவர்கள் இடிபாடிகளுக்குள் சிக்கியுள்ள கட்டிடங்களின் அருகாமையால் பாடசாலைக்குச் செல்லும் காட்சி



## சொத்துக் குவிப்பு வழக்கு கர்நாடகா மேன்முறையீடு

### தலைவர்கள் வரவேற்பு

சென்னை,ஜூன் 3
சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூர் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப் போவதாக கர்நாடக அரசு அறிவித்துள்ளதைக் கட்சி தலைவர்கள் சிலர் வரவேற்றுள்ளனர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், பாமக நிறுவுனர் ராமதாஸ் உள்ளிட்டோர் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளனர்.
பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 வருடங்கள் சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டது. பின்னர் நடந்த மேல்முறையீட்டில், கர்நாடக உயர் நீதிமன்றம் 4 வருடத் தண்டனையை ரத்து செய்து தீர்ப்பளித்தது. இதை யடுத்து கடந்த மாதம் தமிழக முதல்வராக அதிமுக பொது செயலாளர் ஜெயலலிதா 5 ஆவது முறையாக பொறுப்பேற்றார்.
இந்த நிலையில் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கணக்கியல் தவறுகள் இருப்பதை கண்டறிந்த எதிர்க் கட்சிகள் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வலியுறுத்தினர். மேலும் ஜெயலலிதா வழக்கில் அரசு வழக்கறிஞராக முன்னிலையான ஆச்சார்யா மேல்முறையீடு செய்ய கர்நாடக அரசை வலியுறுத்தியிருந்தார். தற்போது அனைத்துத் தரப்புக் கோரிக்கையை ஏற்று மேல்முறையீட்டுக்கு கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

# புலம்பெயர்ந்தோர் முகாமில் கலவரம்



பாரிஸ்,ஜூன் 3
பிரான்ஸில் தற்காலிக முகாம்கள் அமைத்து தங்கியுள்ள புலம்பெயர்ந்தவர்கள் மத்தியில் திடீர்க் கலவரம் ஏற்பட்டதில் பல பேர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
பிரான்ஸின் துறைமுக பகுதிக்கு அருகில் உள்ள நகரின் ஒதுக்குப்புறத்தில் சிரியா, எரித்தியா, சூடன் நாடுகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 300 புலம்பெயர்ந்த வர்கள் தற்காலிக முகாம்கள் அமைத்து தங்கியுள்ளனர்.
இந்த நிலையில் நேற்று அதிகாலை நேரத்தில் அங்குள்ள முகாம்களில் ஒன்றுக்கு மர்ம நபர்கள் தீவைத்ததாக கூறப்படுகிறது. இந்தச் செயலுக்கு காரணமாக அங்குள்ள நபர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டதில், அவர்களுக்குள் திடீர் கலவரம் ஏற்பட்டுள்ளது.
இரண்டு பிரிவினர்களாக கலவரத்தில் ஈடுபட்ட நபர்கள் ஒவ்வொருவரும் இரும்புக்கம்பிகளை எடுத்துத் தாக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச் சண்டையில் சுமார் 24 பேர் காயமுற்றனர். இவர்களில் 14 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டதால் அவர்களை மருத்துமனையில் அனுமதித்துள்ளனர்.
கடந்த வாரம் புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் கடத்தல்காரர்களுக்கு இடையே துப்பாக்கிச் சண்டை நடந்ததைத் தொடர்ந்து தற்போது கலவரமும் நடந்துள்ளதால் அப்பகுதி முழுவதும் பரபரப்பாகக் காணப்படுகிறது.
தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள இவர்கள் பிரான்ஸ் நாட்டை விட்டு பிரிட்டனுக்கு செல்வதற்காக நீண்ட நாள்களாக போராடி வருகின்றனர். சில சமயங்களில், அந்தப் பகுதியிலிருந்து பிரிட்டனுக்கு செல்லும் வாகனங்கள் மூலம் சட்டவிரோதமாக வெளியேறுவதற்கு [illegible] முயற்சிகள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (14)

## கருணைக் கொலைக்கு பெற்றோர் வேண்டுகோள்

டில்லி,ஜூன் 3
டில்லியில் நரம்புத் தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டுள்ள தங்களின் 6 பிள்ளைகளையும் கருணைக் கொலை செய்ய பெற்றோர் அனுமதி கேட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
ஆக்ராவைச் சேர்ந்த மொகமத் நசீர் தம்பதியினர் தமது 6 பிள்ளைகளும் நரம்பு தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டு நடக்கமுடியாத நிலையிலும், தங்களைத் தாங்களே கவனித்து கொள்ள இயலாத மனநிலையோடும் உள்ளனர். 6 வயது முதல் 18 வயது வரை உள்ள தமது பிள்ளைகளை கருணைக்கொலை செய்ய அனுமதி கேட்டு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு கடிதம் எழுதியுள்ளனர். மேலும் பிள்ளைகளின் மருத்துவச் செலவுக்கு உதவி செய்ய பிரதமர் மோடியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூழ்கிய சீன கப்பல் 458 பேர் மாயம்

## 20 பேர் மட்டும் உயிருடன் மீட்பு

பீஜிங்,ஜூன் 3
சீனாவில் வீசிய கடும் புயலில் சிக்கிய பயணிகள் கப்பல் 458 பேருடன் ஆற்றில் மூழ்கியது. இது குறித்த தகவல் கிடைத்தவுடன் அந்தப்பகுதிக்கு விரைந்த மீட்புப் படை யினர் 20 பேரை உயிருடன் மீட்டுள்ளனர்.
ஈஸ்டர்ன்ஸ்டார் என்றழைக்கப்படும் அந்தப் பயணிகள் கப்பல் ஜியாங்சு மாகாணத்தின் தலை நகரான நான் ஜிங்கிலிருந்து, தென் மேற்கு சீனா வில் உள்ள சாங்கிங் குக்குச் சென்று கொண்டிருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ஹுபேய் மாகாணம், ஜியான்லி பகுதியில் உள்ள யாங்ட்சே நதியில் அந்தக் கப்பல் சென்று கொண்டிருந்த போது, கடும் புயலில் சிக்கி ஆற்றில் மூழ்கி யதாக யாங்ட்சே நதியில் வழிநடத்தும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.
இதையடுத்து அங்கு விரைந்த மீட்பு படையினர் ஆற்றில் தத்தளித்த 20 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். இந்தத் தகவலை அறிந்த சீன ஜனாதிபதி ஜின்பிங், அனைத்து விதமான மீட்பு நடவடிக்கைகளையும் விரைந்து செயல்படுத்து மாறு உத்தரவிட்டுள்ளார். மேலும் இதை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.





அந்த நாட்டின் பிரதமர் கெக்கியாங் மற்றும் துணை பிரதமர் மா கய் ஆகியோரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை வழிநடத்தி வருகின்றனர். (14)

## சுரங்க வெடி விபத்தில் 4 பேர் சாவு: 10 பேர் காயம்

இஸ்லாமாபாத்,ஜூன் 3
பாகிஸ்தானின் முசாபராபாத் பகுதியில் மின்உற்பத்திக்கான நீலும்–ஜீலும் ஹைடெல் மின் திட்ட சுரங்கத்தில் சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அதன் போது திடீரென அங்கு பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. உடனே சுரங் கத்தில் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 5 கிலோ மீற்றர் தூரத் துக்கு 50 மீற்றர் ஆழத்தில் சுரங்கம் முழுமையாக சேதம் அடைந்தது.
சுரங்கத்தில் வாயு அழுத்தம் காரணமாக இந்த வெடி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் 4 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். 10 பேர் படு காயம் அடைந்தனர். மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (14)

## மனைவி மிகவும் அற்புதமானவர்

### கூறுகிறார் டேவிட் கமரூன்

லண்டன்,ஜூன் 3
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் சமந்தா மாதிரி ஒரு அற்புதமான மனைவி கிடைத்தமை அதிர்ஷ்டம் என்று தனது மனைவியைப் புகழ்ந்து பேசியுள்ளார்.
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் ஐரோப்பிய ஒன்றியத்தில் மேற் கொள்ள வேண்டிய சீர்திருத்தங் கள் தொடர்பாக ஐரோப்பியாவில் உள்ள நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில் அவரது மனைவி சமந்தா கமரூன் பிள்ளைகளுடன் ஸ்பெயின் நாட்டில் உள்ள தீவுகளில் சுற்றுலா சென்றுள்ளார். இந்த நிலையில் இபிசா தீவில் பிக்னிக் உடையுடன் சமந்தா இருப் பது போன்ற புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. இதற்குப் பதிலளித்த கமரூன், சமந்தா போன்று ஒரு அற்புதமான வர் மனைவியாக கிடைத்தமை எனது அதிர்ஷ்டம். மேலும் உடலை கச்சிதமாக வைத்துகொள் வதற்கு சமந்தாவை விட தான் அதிகம் ஆசைப்படுவதாகவும் ஆனால் உணவு விடயத்தில் அவரைப் போன்று கட்டுப்பாடாக இருக்க முடியவில்லை என்றும் தெரிவித்துள் ளார். தான் மேற்கொள்ளும் பயணத் தின் போது ஐரோப்பிய நாடுகளில் சிறந்த உணவுகள் வழங்கப்படு வதால் உணவுக்கட்டுப்பாட்டைச் கடைப்பிடிக்கமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (14)

# 129 பேர் சாவு

## 42 பேருக்கு வழக்கு



பங்களாதேஷ் நாட்டில் கட்டடம் இடிந்து விழுந்ததில் சுமார் ஆயிரத்து 129 தொழிலாளர்கள் சாவடைவதற்குக் காரணமான 42 பேர் மீது அந்த நாட்டின் பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர்.
டாக்கா நகரில் கடந்த 2013 ஆம் ஆம் ஆண்டில் புதிதாக தொடங் கப்பட்ட வர்த்தக நிறுவனம் ஒன்றை கட்டும் பணிகள் நடைபெற்று வந்துள்ளன. 8 மாடிகள் கொண்ட அந்த கட்டுமானப் பணிகளை ஆராய்ந்த அந்த நாட்டின் அதிகாரிகள், கட்டடம் பலவீனமாக இருக்கிறது என்றும் அதற்குள் தொழிலாளர் களை அனுப்ப வேண்டாம் எனவும் கட்டடத்தின் உரிமையாளர் மற் றும் நிர்வாகிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.
ஆனால், அதிகாரிகளின் எச்சரிக் கையை அலட்சியம் செய்த கட்டட உரிமையாளர், சுமார் 3 ஆயிரத்து 122 தொழிலாளர்களை கொண்டு கட்டடப் பணியை மீண்டும் தொடங் கியுள்ளார். அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்ததற்கு மறுநாள் அந்தக் கோர விபத்து ஏற்பட்டது.
பூகம்பம் ஏற்பட்டது போன்று ஒட்டுமொத்த கட்டடமும் இடிந்து விழுந்து அத்தனை பணியாளர் களையும் மண்ணில் புதைத்தது.
உலகையே அதிர்ச்சி அடைய வைத்த அந்த விபத்தில் சிக்கி இருந்தவர் களை மீட்க சுமார் 17 நாள்கள் போராடியுள்ளனர். கட்டடம் இடிந்து விழுந்ததில் சுமார் ஆயிரத்து 129 பேர் சாவடைந்ததாக அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது. மேலும் 2 ஆயிரத்து 515 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டனர்.
இந்த விபத்து தொடர்பாக சுமார் இரண்டு வருடங்களாக விசாரணை செய்து வந்த வங்கதேச பொலிஸார், கட்டட விபத்துக்கு காரணமாக கட்டடத்தின் உரிமை யாளர், பத்துக்கும் மேற்பட்ட அதிகாரிகள் உள்ளிட்ட 42 பேர் மீது நேற்று கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த வழக்குத் தொடர்பான நீதிமன்ற விசாரணை எதிர்வரும் 28 ஆம் திகதி தொடங்கவுள்ளது. மேலும், இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால் 42 பேருக்கும் சாவுத் தண் டனைகிடைக்கவாய்ப்புள்ளதாகத்தக வல்கள் வெளியாகியுள்ளன. (14)

# அகதிகளுக்கு அனுமதி ஒதுக்கீட்டில் திருத்தம்

## ஐரோப்பிய ஆணையத்துக்கு கோரிக்கை

வெளிநாடுகளிலிருந்து தஞ்சம் கோரி வருபவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக ஐரோப் பிய ஆணையம் வரையறுத்துள்ள ஒதுக்கீட்டில் திருத்தம் வேண்டும் என ஜேர்மனி கோரிக்கை விடுத் துள்ளது.
மத்திய கிழக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஐரோப்பா நாடுகளில் தஞ்சம் கோரி வரும் வெளிநாட்டவர்கள் பல இன்னல்களை சந்தித்து வரு கின்றனர்.
ஆபிரிக்க நாடுகளிலிருந்து கடந்த மாதத்தில் இத்தாலிக்கு தஞ்சம் கோர கடல் மார்க்கமாக வந்தவர் களில் சுமார் ஆயிரத்து 800 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னர், அகதிகளுக்கு குடியேற்ற அனுமதி வழங்குவது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு புதிய ஒதுக்கீட்டை ஐரோப்பிய ஆணை யம் வரையறுத்தது. இதன் அடிப் படையில், அடுத்த இரண்டு வருடங் களில் சுமார் 60 ஆயிரம் அகதி களுக்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அளிக்க வேண்டும் என ஐரோப்பிய ஆணையம் வலியுறுத் திருந்தது.
இதற்கு, இத்தாலி, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்புத்தெரிவித்திருந்தநிலையில், தற்போது ஜேர்மனி நாடும் இந்த ஒதுக்கீட்டில் திருத்தம் கொண்டு வர வேண்டும் என ஐரோப்பிய ஆணையத்துக்கு வலியுறுத்தியுள் ளது.
ஐரோப்பிய ஆணையத்தின் ஒதுக் கீட்டின் படி, அடுத்த இரண்டு வருடங்களுக்கு 11 ஆயிரத்து 849 அகதிகளுக்கு குடியேற்ற அனு மதியை ஜேர்மனி அரசு வழங்க வேண்டும். அதாவது, 60 ஆயிரம் அகதிகளில் சுமார் 20 சதவிகிதத் தினரை ஜேர்மனி அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஐரோப் பிய அரசு வலியுறுத்தியுள்ளது.
ஆனால், ஜேர்மனியில் அகதி களுக்கு குடியேற்ற அனுமதி வழங்கு வது தொடர்பாக ஏற்கனவே எண் ணற்ற விண்ணப்பங்கள் நிலுவை யில் உள்ள நிலையில், தற்போது ஐரோப்பிய ஆணையம் சமநிலை இல்லாத ஒதுக்கீட்டை வரையறுத் துள்ளதாக விமர்சனம் செய்துள் ளது.
எனவே அகதிகளுக்கு குடியேற்ற அனுமதி வழங்குவது தொடர்பான ஒதுக்கீட்டில் உடனடி திருத்தம் செய்ய வேண்டும் என ஜேர்மனி அரசு ஐரோப்பிய ஆணையத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது. (14)

# மியன்மார் அரசுக்கு ஒபாமா வேண்டுகோள்

வொஷிங்டன்,ஜூன் 3
மியன்மார் நாட்டில் பல இன்னல் களுக்கு உள்ளாகிவரும் ரொஹிங்யா சிறுபான்மையின மக்களிடம் பாரபட்சம் காட்டுவதை நிறுத்துங் கள் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அந்த நாட்டின் அரசை வலியுறுத்தியுள்ளார்.
மியன்மார் நாட்டில் பிறந்து வளர்ந்த ரொஹிங்யா இஸ்லா மியர்களுக்கு குடியுரிமை வழங்க மறுத்துள்ள மியன்மாரின் பௌத்த மத அரசு, அவர்களை மறைமுக மாக நாட்டை விட்டு வெளியேற் றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.
ஆதரவற்ற சூழலில் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஆயிரக் கணக்கான ரொஹிங்யா மக்கள் கும்பல் கும்பலாக கடல் மார்க்க மாக ஆபத்து நிறைந்த பயணங் களில் ஈடுபட்டுவருவதால், மியன் மார் அரசுக்கு சர்வ தேச அளவில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.
மியன்மார் அரசின் நடவடிக்கை குறித்து அமெரிக்க ஜனாதிப ஒபாமா, பல வருடங்கள் ஜூண்ட ஆட்சியிலிருந்து விலகி ஜனநாய மாற்றத்தை ஏற்படுத்த விரும் னால், ரொஹிங்யா மக்களிட காட்டும் பாரபட்சத்தை மியன்மா அரசு நிறுத்த வேண்டும் என வ யுறுத்தியுள்ளார். வடக்கு மிய மாரில் வசித்து வரும் சுமார் 1. மில்லியன் ரொஹிங்யா இஸ்லாமிய களுக்கு குடியுரிமை வழங்க மிய மார் அரசு மறுத்து வருகிறது. (14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சேவைச் சந்தைப்படுத்தல்

இ.சசிகரன், 3ஆம் வருடம்,
முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.




சேவை என்பது ஒரு தரப்பினரால் மற்றுமொரு தரப்பினருக்கு அளிக்கப்படும் கட்புலனாகாத பொருளியல் நடவடிக்கைகளினைக் குறிக்கும். சந்தைப்படுத்தலின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் கொட்லர் சேவையை ஒரு தரப்பினரால் இன்னுமொரு தரப்பினருக்கு அளிக்கப்படும் செயல் நிறைவேற்றம் தொடர்பான நடத்தை" என வரைவிலக்கணப்படுத்தினார். பல்வேறு வகையான சிக்கலான பண்புகளினையுடைய சேவையை வாடிக்கையாளரது தேவையையும், விருப்பத்தையும் பூர்த்தி செய்யும் நோக்குடன் சந்தைக்கு அளிப்புச் செய்யப்படும் செயற்பாடு சேவைச் சந்தைப்படுத்தல் எனப்படும்.

மேலும் சேவையானது பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாகவும், நுகர்வோனது நுகர்வுக்கேற்ப பல்வேறு வழிகளில் பெறுமதியை சேர்ப்பதாகவும் அமைகின்றது. சேவைகளானது விரும்பிய நேரத்தில் பெறக்கூடியதாகவும் இன்பமளிக்கக் கூடியதாகவும் பொழுது போக்காகவும் காணப்படுவதால் இதன் பெறுமதி தற்கால உலகில் மிகவும் உயர்வாக மதிக்கப்படுகின்றது. பொருள்களுடன் சேவையை ஒப்பிடும் போது சிறப்பான பண்புகளின் காரணமாக சாதகமான நிலைமைகளையும் சவால்களையும் சேவை வழங்கும் நிலையங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளன.

சேவைகளின் பிரதான பண்புகளாக உருவமற்றவை, பிரிக்க முடியாதவை, வேறுபடும் தன்மை கொண்டவை, சேமிக்க முடியாதவை என்பன காணப்படுகின்றன. சேவைகளின் பண்புகளில் ஒன்றான உருவமற்றவையின் காரணமாக பொருள்களை விற்பனை செய்வது போன்று இலகுவில் விற்பனையை மேற்கொள்வது கடினம். சேவை வழங்குநர்கள் முடிந்த வரை எப்படிப் பொருள்களுக்கு உருவம் இருக்கின்றதோ அவ்வாறே சேவையைக் காண்பிக்க முயற்சிக்கின்றார்கள். அத்தோடு வாடிக்கையாளர்களை கவருவதிலும் வெற்றி காண்கின்றார்கள்.

சேவையின் பிரிபடாத்தன்மையின் காரணமாக வாடிக்கையாளரை குறித்த சேவை வழங்கும் போது சமுகமளிக்க வேண்டிய பெரிய சவாலை சேவைத்துறை எதிர்நோக்குகின்றது. உதாரணமாக சாரதிப் பயிற்சி வழங்கும் சேவை நிறுவனங்களாயின் வாடிக்கையாளர் சமுகமளித்தால் மாத்திரமே சாரதிப் பயிற்சியை மேற்கொள்ள முடியும் என்ற நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக சேவை வழங்குநர்கள் வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதற்காக உயர்ந்த தொழில்நுட்பங்களையும் , மறைமுகத்தொடர்பையும் பேணுவதோடு சிறந்த தரமான கட்டுப்பாட்டு முறைமையுடன் கூடிய வலையமைப்பை பேணி வருகின்றனர்.

வெவ்வேறு தன்மையான சேவைத் துறையை நோக்கும் போது உதாரணமாக வைத்தியர் ஒருவர் நோயாளியை அணுகும் முறையானது ஒரு வைத்தியரிலிருந்து இன்னொரு வைத்தியருக்கிடையில் வேறுபடும். அவ்வாறு வேறுபடும் தன்மையின் சவாலை எதிர்கொள்ள சேவை வழங்குநர்கள் தங்களின் சேவைத்தரத்தின் மீது உயரிய கவனத்தையும் மேலும் தங்களது சேவையை வளர்த்துக்கொள்வதற்கான ஆய்வுப் பணிகளையும் உறுதியான புத்தாக்க ம்யற்சியையும் மேற்கொள்கின்றார்கள்.

சேமிப்பது என்பது சேவையைப் பொறுத்தவரையில் சாத்தியமற்ற ஒன்றாகும். இங்கு காலமென்பது விற்பனையை மேற்கொள்வதற்கு மிகவும் அழுத்தமாக உள்ளது. அதாவது சிற்றூண்டிச்சாலையை எடுத்துக் கொண்டால் சில உணவுப்பொருள்கள் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின் பழுதடைந்து விடும். இதனால் குறிப்பிட்ட காலத்துக்குள் விற்பனை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை களை சிற்றூண்டிச் சாலை சேவை வழங்குநர்கள் எதிர்நோக்குகின்றார்கள். இவ்வாறான சேவை வழங்கும் நிறுவனங்கள் கேள்வி முகாமைத்துவம், கொள்ளளவு முகாமைத்துவம் தந்திரோபாய அணுகுமுறைகளை பின்பற்றுவதன் மூலம் சேமிக்க முடியாமை என்பதனால், எதிர்நோக்கும் குறைபாட்டை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

சேவைச் சந்தைப்படுத்தலில் வாடிக்கையாளரை கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் ஒவ்வொரு படிநிலையிலும் சேவையின் தரத்தை மதிப்பீடு செய்கின்றார் கள். மேலும் சிறந்த வாடிக்கையாளர் சார்ந்த நெருங்கிய உறவு முறையே சேவைச் சந்தைப்படுத் தலுக்கு உகந்ததாகும். ஏனெனில் பொருள்களை போன்று அல்லா மல் மனிதனுக்கு சேவை வழங் கும் போது எல்லா நேரமும் வாடிக்கையாளர்கள் ஒரே மன நிலையில் காணப்படமாட்டார்கள். ஆகவே அவர்களின் நிலைமைகளை அறிந்து அவர்களின் தேவையை உணர்ந்து செயற்பட்டால் மாத்திரமே வாடிக்கை யாளரை நிறுவனத்தில் நீண்ட காலத்துக்குத் தக்க வைத்துக் கொள்ளலாம். இந்த நவீன காலத் தில் இலாபம் உழைத்தால் மட்டும் போதாது. கடுமையான சந்தை போட்டி, வாடிக்கையாளர் அறிவு வளர்ச்சி, ஊடகங்களின் சிறந்த விழிப்புணர்வு பங்களிப்பின் கார ணமாக வாடிக்கையாளரை நீண்ட காலத்துக்குள் தங்களது விசுவாச வாடிக்கையாளராக மாற்றுவதையே பெரும்பாலான நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. எனினும் இது அவ்வளவு இலகுவான காரியமல்ல. எனினும் எட் டக் கூடியது ஒன்றே, சேவைத் துறையானது சமூக மாற்றங்கள் மற்றும் புத்தாக்க விருத்தியின் காரணமாக சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளது.

எனவே சேவை வழங்குநர்கள் இந்தச் சாதக நிலைமையை கருத்தில் கொண்டு சேவை வழங்குதலின் போது வாடிக்கையாளர் திருப்தி அவர்களது விசுவாசத்தை மதிக்கும் முகமாக செயற்படும் பட்சத்தில் சேவை சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் தங்களது நீண்டகால, குறுங் கால இலக்குகளை முறையாக அடையலாம் என்பதில் நிச்சயம் எவ்வித ஐயமுமில்லை.

# கொடிகாமம் மக்கள் வங்கி புதிய கட்டடம் திறப்பு




கொடிகாமம் பிரதேச மக்கள் வங்கியின் புதிய கட்டடம் அதனோடு இணைந்த பீப்பிள் லீசிங் பிரிவு என்பன நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு வங்கியின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோவினால் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப் [illegible] சகல வசதிகளையும் அடங்கியதாக [illegible] இந்தக் கட்டடம் [illegible] வங்கியின் சொந்தக் கட்டடமாகும். நிகழ்வின் ஆரம்பித்தில் வங்கியின் தலைவர் உட்பட்ட பிரதான விருந்தாளிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். வங்கியின் இந்த நிக்ழ்வில் வங்கியின் பொது முகாமையாளர் என். வசந்த குமார், பீ.எல்.சி பிரிவு பொது முகாமையாளர் [illegible] பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள், வாடிக்கையாளர் சேவை மேலதிக பொது முகாமையாளர், பாதுகாப்புத் தரப்பின் வட பகுதியின் பொறுப்பதிகாரிகள், புகையிரத திணைக்கள மேலதிக பொது முகாமையாளர், நிதி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். பிரதேச பாடசாலைகளின் அதிபர் [illegible] வாடிக்கையாளர்கள் , வர்த்தகர்கள் பொது மக்கள் ஆகி யோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கு பாட சாலை உபகரணங்கள் தொப்பி கள், உணவுப் பாசல்கள் என்பன வும் வழங்கப்பட்டன.

இந்த கட்டடம் புகையிர நிலையத்தின் அருகாக குறித்த திணைக்களத்தின் காணியில் கட்டப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## டி.எம்.ஐ. நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

டி.எம்.ஐ. நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கல் விழா நாளை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டி.எம்.ஐ. நிறுவனத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய பயிற்சி மையங் கள் ஊடாக கணினி மற்றும் ஆங்கிலக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த ஏராளமான மாணவர்க ளுக்கு இந்த விருதுகள் வழங்கி வைக்கப்படவுள்ளதுடன் குறித்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத்துறை இணைப்பாளர் இ.ஆர்னல்ட் மற்றும் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் எஸ்கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது அந்த நிறுவனத்தில் கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன், விருதுகளும் வழங்கி மாணவர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

தரமிக்க கணினிக் கற்கை நெறிகளை மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் டி.எம்.ஐ. நிறுவனம் மிகச் சிறப்பான முறையில் தொடர்ந்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்தைக் கட்டுப்படுத்தல் ஒவ்வொருவரதும் பெரும் கடமை

போதைப்பாவனையை வடக்கில் திட்டமிட்டே அறிமுகம் செய்தார்கள் எனமகுடமிட்டுமுதலமைச்சர் உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் போது ஆற்றிய உரையை பிரசுரித் துள்ளீர்கள். அதுமட்டுமன்றி இன்றைய (02.06.15) இதழில் போதைப் பொருள் வேரறுக் கப்பட வேண்டும் என்றவொரு கட்டுரையையும் வெளியிட்டுள்ளீர்கள்.

போதைப்பொருள், நமது பிரதேசத்தில் முன்னெப் பொழுதும் இல்லாத அளவிற்கு பரவியுள்ளது. மாணவர்களும் ஏனைய வாலிபர்களும் இதற்கு அடிமையாகி வருகின்றனர்.

கனடா, அமெரிக்கா போன்ற செவ்விந்தியர் வாழ்ந்த நாடுகளில் வெள்ளையர்கள் அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்து அவர்களை சதா தூங்கு மூஞ்சிகளாக இருக்கச் செய்தார்கள். அவர்கள் மதுவுக்கு அடிமையாகி தமதுஉரிமைகளைமறந்துவிட்டனர். செவ்விந்தியர் வீரமும் திடகாத்திரமான உடலமைப்பும் கொண்ட உழைப்பாளிகள், பூர்வ குடிகள் என்ற பேச்சையே அவர்கள் மறந்து விட்டனர்.

இன்று நமது புதிய தலைமுறையினர் தமது வரலாற்றுப் பெருமையையும் உயர்ந்த இலட்சியங்களையும் மறந்து வருகின்றனர். இன்ப நாட்டம் ஒன்றே அவர்களின் நோக்கமாகவுள்ளது.

நாம் வெளிநாடுகளில் இருந்து திரும்பி கட்டுநாயக்கா விமான நிலையத்துள் வந்து விட்டால் நம்மை வரவேற்கின்ற வாசகம் போதைவஸ்து கடத்தலுக்கு தண்டனை மரணம் என்பதாகும். (The penalty for Drug trafficking is death)

தென்னிலங்கையில் போதை வஸ்துவை ஓரளவு கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். வடக்கில் இதனைக் கட்டுப்படுத்த எழுச்சி ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். பத்திரிகைகள், கல்லூரிகள், அரச அலுவலகங்கள் என்பன இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

நோய்வாய்ப்பட்ட சமுதாயத்தைக் குணப்படுத்துவது ஒவ்வொருவர் மீதும் விழுந்துள்ள மிகப்பெரும் கடமையாகும்.

**வண.எஸ்.ஜெபநேசன்,**
முன்னாள் ஆயர்,
தென்னிந்தியத் திருச்சபை.

# அறுபது வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளாகிய நோயாளருக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்

யாழ் போதனா வைத்தியசாலை கிளினிக் மருந்தகத்தில் நோயாளிகள் நீண்ட வரிசையில் நிற்க வேண்டியதாக உள்ளது. அதிலும் என்னைப் போன்ற அறுபது வயதுக்கு மேற்பட்ட வயோதிப நோயாளிகள் கஷ்டப்படுகின்றார்கள். மருந்தகத்தில் ஐந்து கவுண்டர்கள் மூலம் மருந்து வழங்குகின்றார்கள். தொடர்ந்தும் வரிசையில் நிற்க முடியாத என்னைப்போன்ற அறுபது வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளை இனங்கண்டு அவர்களுக்கு தனியாக ஒரு கவுண்டர்

**வாசகர் திருமுகம்**

மூலம் மருந்தை வழங்கலாமே இந்த விடயம் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் கவனமெடுத்து மருந்தகத்தின் முன் கடமையிலுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு இதனை நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை வழங்கலாம். இதனைப் பரிசீலனை செய்து ஆவன செய்யுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளரைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

என்றும் உண்மையுள்ள
**இ.இராஜேந்திரா,**
சமாதான நீதிவான்.

# டச்சு வீதியூடான யாழ். - காரை பஸ் சேவை

மேற்படி பஸ் சேவை தினமும் மூன்று தடவைகள் (இரு வழி 6 சேவைகள்) நடைபெற்று வருகின்றது. இந்த சேவையினால் வேலைகளுக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள், தமது தனிப்பட்ட தேவைகள் மற்றும் வைத்திய சாலைகளுக்குச் செல்வோர் எனப் பல்வேறு வகையானோரும் பயன் அடைந்துவருகின்றனர். நீண்ட தூரம் நடந்தோ, சைக்கிளிலோ, வாடகை ஓட்டோக்களிலோ சென்று பிரதான வீதியை அடைந்தே தமது வழித்தட பஸ் சேவையைப் பெற முடிந்த டச்சு வீதி வாசிகளுக்கு இந்த 785/1 வழித் தட பஸ் சேவை பெரும் வரப்பிர சாதமாகும்.

இந்தச் சேவையை ஏற்பாடு செய்து தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இ.போ.ச அதிகாரிகள் ஆகியோரும், இதற்கு அழுக்கக் குழுக்களாக செயற்பட்ட சித்தன் கேணியில் இருந்து மூளாய் பிள்ளையார் கோயிலடி வரையான டச்சு வீதிப் பிரதேசத்தில் செயற்பட்டு வரும் சமூக, சமய மற்றும் பொது நிறுவனங்களும் நன்றியுடன் நினைவு கூர வேண்டியவர்கள்.

இந்த பஸ்ஸில் கடமையாற்றி வரும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பஸ் பிரயாணிகளுடன் பண்பாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்வதும் விசேடமாகும். ஆனாலும் எந்தப் பிரதேச மக்களின் நலனுக்காக சேவை ஆரம்பிக்கப்பட்டதோ அதில் கூடிய கரிசனை கொள்ள வேண்டியதுதான் அவசியம்.

குறித்த டச்சு வீதியூடாக வரும்போது கொஞ்சம் வேகத்தைக் குறைத்து வருவார்களானால் மிகவும் நல்லது. கண்ணை மூடி முழிப்பதற்குள் விரைந்து செல்வது தவிர்க்கப்பட்டால் தமக்கு மிகவும் நலமாக இருக்கும் என்பதுடன் விபத்துக்கள் ஏற்படுவதையும் அதனால் எதிர்காலங்களில் எழும் பிரச்சினைகளையும் தவிர்க்க முடியும் என்பது இந்தப் பகுதி பிரயாணிகளின் கருத்தாகும். உரிய பகுதியினர் கவனம் செலுத்துவார்களா?

கேணியடியான், டச்சு வீதி.

கேலிச் சித்திரம்



# இன, மத முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு சதியா?

பொரளை, ஜும்மா பள்ளிவாசல் கடந்த சனிக்கிழமை இரவு தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. தம்மை எவரும் அடையாளம் காண முடியாதவாறு முகத்தை மூடிக்கட்டிக்கொண்டு வந்த நான்கைந்துபேர் கல்வீச்சு நடத்தி பள்ளி வாசலின் கண்ணாடியையும் ஜன்னல்களையும் சேதமாக்கிவிட்டு பேஸ் லைன் வீதியில் தயாராக நின்ற காரில் தப்பித்துச் சென்று விட்டனர். தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இப்படியான சம்பவங்கள் இனியும் தொடரக் கூடாது.

மஹிந்த ஆட்சியின்போது இடம்பெற்ற பள்ளி வாசல்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது பொரளை ஜும்மா பள்ளி வாசல் தாக்குதல் சம்பவம் பெரிய சம்பவம் அல்ல. ஆனால் இன்னும் ஒரு சில மாதங்களில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள சமயம் இது இடம்பெற்றிருப்பதால் இதனை சிறிய சம்பவமாக நாம் கருத முடியாது. இதன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த முஸ்லிம்களின் வாக்குகளைத் திருப்பும் நோக்கம் கொண்டதாகவும் இருக்கலாம். இப்பள்ளிவாசல் நிர்வாகத்தில் அதிருப்தி கொண்டவர்களை அரசியல் நோக்கம் கொண்ட தீய சக்திகள் பயன்படுத்தியும் இருக்கலாம். ஆகவே அரசு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து உண்மையை வெளிக் கொணர வேண்டும்.

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. முஸ்லிம் பெண்களின் உடை கள் விமர்சனத்துக்குள்ளாகின. ஹலால் பிரச்சினையை முன்வைத்து முஸ்லிம் மக்கள் பல வழிகளிலும் துன்புறுத்தப்பட்டனர். முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன. தொலைக்காட்சிகளில் பள்ளிவாசல் தாக்குதல் காரர்களை அனைவரும் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. எவரும் கைதுசெய்யப் படாததால் மஹிந்த அரசும் இதற்கு ஆதரவு என்பதே வெளிப் படையான உண்மை. இதற்கான அறுவடையைத்தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த பெற்றுக்கொண்டார்.

தற்பொழுது மைத்திரி ஆட்சியில் இடம்பெற்ற முதலாவது சம்பவம் பொரளை ஜும்மாப் பள்ளிவாசல் மீதான தாக்குதல். இத்தாக்குதலுக்கு இரு விடயங்கள் காரணமாக இருக்கலாம். ஒன்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பொதுத் தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகளைத் திசை திருப்பும் நோக்கம் கொண்டதாக இருக்கலாம். அடுத்தது, மியன்மார் முஸ்லிம்களுக்கு ஆதரவு தெரிவித்து கடந்த வெள்ளிக் கிழமை ஜும்மாத் தொழுகையின் பின்னர் கிழக்கு மாகாணத்திலும் தலைநகரிலும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களுக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாக இருக்கலாம். மியன்மாரின் 969 அமைப்பின் தலைவர் விராது தேரர் பொதுபலசேனாவுடன் மிகவும் நெருக்கமானவர். முஸ்லிம் மக்களின் பரம எதிரி. மியன்மாரில் உள்ள பங்களாதேஷ் வம்சாவளியினரான றோஹிங்யா முஸ்லிம் களை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கத்துடன் செயற்படுபவர். அதனால் தான் பௌத்த கடும் போக்குச் சக்திகள் குறித்தும் சந்தேகம் எழுப் பப்படுகிறது.

நாட்டில் தற்போது இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் குறித்து புதிய அரசிடம் அதிகம் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. புதிய அரசின் அனுகுமுறையால் சிறப்பாக இடம்பெற்றுவரும் சிவில் செயற் பாடுகளைக் குழப்பியடித்து குளிர் காய்வதற்கு தீய சக்தி ஒன்று புறப்பட்டிருக்கிறது. இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் புதிய அரசுக்கு எதிரான தோற்றப்பாட்டை உண்டு பண்ணி, அதன் மூலம் அந்த அரசைப் பதவியில் இருந்து கவிழ்த்து, தாம் ஆட்சிபீடம் ஏறுவதற்கு சில இனவாதத் தலைமைகள் கங்கணம்கட்டிச் செயற்பட்டுவருகின்றன. இதற்காக மக்களிடையே இன, மத வன்முறைகளைத் தூண்டிவிட்டு மோதல்களை உருவாக்கி அதன்மூலம் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதைப் பார்ப்பதற்குச் சிலர் ஆசைப்படுகின்றனர். அவ்வாறானவர்களின் செயற்பாடே இந்தப் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களின் பின்னணி என்பது பலருக்கும் தெரியாத தொன்றல்ல.

கடந்த மஹிந்த அரசின் ஆட்சிக்காலத்திலும் இவ்வாறு பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் உக்கிரமடைந்திருந்திருந்த போதிலும்அது தொடர்பில் ஆட்சியில் இருந்த அரசு அக்கறை எதனையும் காட்டவில்லை. இதன்மூலம் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் அந்த அரசே செயற்படுகின்றது என்பது மக்களுக்குத் தெளிவாக விளங்கியது. சிங்கள பேரினவாத அமைப்புக்களை சிறுபான்மையினருக்கு எதிரான சம்பவங்களுக்கு தூண்டிவிட்டு, அதில் தாம் அரசியல் நடத்துவதற்குக் கடந்தகால ஆட்சியாளர்கள் பல்வேறு தந் திரோபாயங்களைக் கையாண்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதே நிலைமையைத் தற்போதுள்ள புதிய அரசின் காலத்திலும் உண்டுபண்ணி, அதன்மூலம் தாம் ஆட்சிக் கதிரையைப் பிடிப்பதற்கு இவ்வாறான குறுக்குவழிகளைச் சில சிங்கள அரசியல் தலைமைகள் இப்போதும் கையாண்டு வருகின்றன.

கொழும்பில் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். பொரளை பள்ளிவாசல் தாக்குதல் சம்பவம் அனைத்து முஸ்லிம்கள் மீதான தாக்குதல் சம்பவத்துக்குச் சமனானது. மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் மஹிந்தவின் ஆட்சிக்கு ஆதரவாக இருந்தன. முஸ்லிம் அமைச்சர்களும் இருந்தனர். தாக்குதலை பகிரங்கமாக நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததுதான் அப்பொழுது மஹிந்த ஆட்சி செய்த பெரிய தவறு. பொரளை ஜும்மா பள்ளிவாசல் சம்பவம் இரவில் நடந்த சம்பவம்.

இதனை முன்னைய சம்பவங்களுடன் ஒப்பிட முடியாது. எனினும் தாக்குதல் நடத்தியவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்துவது புதிய ஆட்சியாளர்களின் முக்கிய கடமையாகும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமல்போனோர் குறித்த மர்மம் துலக்கப்பட வேண்டியது அவசியமே!

நாட்டில் புதிய அரசு ஆட்சிபீடத்தில் "ஜொலிப்பாக" அமர்ந்து, ஐந்து மாதங்கள் கடந்தேறிவிட்டன. ஆனால், தமிழ் அரசியல் கைதிகள், காணாமற்போன தமிழர்கள் குறித்த தகவலை மைத்திரி அரசினால் கண்டறிய இயலவில்லை! அதனால் எந்த ஒரு விவரத்தையும் வெளியிட வக்கில்லாமல் ஒளித்து விளையாடுகிறது!!

போர் முடிவுற்று ஆறு வருடங்கள் உருண்டு ஓடிவிட்ட போதிலும், அது நடைபெற்ற வேளையில் போரில் கொலையுண்ட மக்களின் விவரங்களையோ, கொலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையையோ கண்டறிய முடியாது புதிய அரசு சாக்குப் போக்குக் காட்டும் அரசியல் "தந்திரத்தை"க் கைக்கொண்டு வருகிறது. அந்த வகை சார்ந்த தோற்றமே வெளிச்சமாகத் தெரிகிறது.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் நிபுணர் யஸ்மின் சூகா, போரின்போது காணாமற்போன, அல்லது கொல்லப்பட்ட நூற்றுப்பத்துப் பேரின் விவரங்களை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி - மூன் நியமித்த குழுவின் அங்கத்தவர்களில் அவரும் ஒருவர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம், பதினெட்டாம் திகதியன்று இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களை நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட ஒன்றாக அவரது அந்தத் தகவல் கருதப்படுகின்றது.

இன்னொரு புறத்தில், போரின்போது வடக்கு, கிழக்கில் காணாமற்போனோர் -- காணாமற்போகச் செய்யப்பட்டோர் -- குறித்து விசாரணை செய்வதற்கு, இந்த நாட்டு (மஹிந்த) அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் செயற்பாடு, தகிங்கிணத்தோம் போடுவதாகவே கருதப்படும் நிலை மேலெழுந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட, ஜனாதிபதி விசாரணைக்குழு நலிந்த வேகத்தில் செயற்பட்டது. இடைக்கால அறிக்கையையும் சமர்ப்பித்திருந்தது.

ஆனால், ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் இன்னமும் விசாரிக்கப்பட வேண்டியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை இப்போது ஐந்தாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய வேகத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டால், விவரங்கள் வெளிவருவதற்கு பதினைந்து ஆண்டுகள் கடந்து கரைந்துவிடுமோ யார் அறிவார்?

இதே சந்தேகத்தை, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் வெளியிட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் உறவினர்கள் புதிய அரசின் ஏற்பாட்டில், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதற்கு உந்துசக்தியாக விளங்கியவர் பொதுமக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க.

ஆனால், காணாமற்போன எவரும் அங்கு இல்லை என்று எவ்வித உறுதிப்படுத்தலும் இன்றி புதிய அரசால் மேலெழுந்தவாரியாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, போர் நடைபெற்ற வேளை காயமுற்ற நிலையில் பதினான்கு ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றனர். அவர்களின் விவரம், காணாமற் போனவர்கள் பட்டியல் வரிசையில் இல்லை என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும், அது குறித்து தொடர்ந்து ஆராயப்படும் என்று புதிய அரசு சார்பில் வெறுமனே வாய்ச் சொல்லோடு அந்த விடயம் தரிக்கப்பட்டுவிட்டது.

அதன் தொடரியாக எதுவும் இடம்பெற்றதாக உறுதியான தகவல் எதுவும் இல்லை.

மேல் தெரிவிக்கப்பட்டமைக்கு மேலதிகமாக அரசால் எதுவும் செய்ய இயலாது என்று "படம் காட்டப்"படுகிறதா என்ன?


நல்லாட்சி என்று சங்கு ஊதிக்கொண்டு, போரின் போதும், அதன் பின்னரும், அரச படைகளிடம் சரண் அடைந்தவர்கள், கையளிக்கப்பட்டவர்களின் பட்டியல் இல்லை என்று கைவிரித்துவிட முடியாது, கைவிரிக்கக் கூடாது.

அதற்கான இருப்புக் குறித்த பூரணமான பட்டியல் சீர்செய்யப்பட வேண்டும். வாக்கு வாங்கும் வரைக்கும்தான் அண்ணன் தம்பி, அதன் பின்னர் சகலருக்கும் "பேப் பே" என்ற நாடகம் வேண்டாமே....!

# சிரந்தி மீதான விசாரணை மஹிந்தவுக்கு விடுக்கப்பட்ட சவால்

சேரலாதன்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினரின் முன்னால் வாக்கு மூலம் அளிக்கச் சென்ற தமது மனைவியுடன் கூடவே சென்றதைக் காட்டும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.



> மஹிந்தவின் குடும்பத்தினர் தொடர்பான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் எந்த வகையிலும் விலக்கிக்கொள்ளப்படமாட்டாது என்பதை சிரந்தி மீதான விசாரணைகள் உறுதி செய்கின்றன. ஒரு ஜனநாயக நாட்டில் சட்டமும் நீதியும் அனைவருக்கும் சமம் என்பதே பொதுவான விதியாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் இந்த நியதி எப்போதோ தூக்கி எறியப்பட்டுவிட்டது.

திருமதி சிரந்தி ராஜபக்ஷவிடம் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் இரண்டு மணித்தியாலங்களாக வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது. கார்ல்டன் சிரிலிய பவுண்டேசன் என்ற அமைப்பின் வங்கிக் கணக்குத் தொடர்பாக அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வாக்கு மூலமும் பெறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் ஆனால் முன்னர் குறிப்பிடப்பட்ட இடத்தை விட்டு வேறொரு இடத்தில் சிரந்தியிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. மஹிந்தவின் குடும்பத்தினர் தொடர்பான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் எந்த வகையிலும் விலக்கிக்கொள்ளப்படமாட்டாது என்பதை சிரந்தி மீதான விசாரணைகள் உறுதி செய்கின்றன.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டமும் நீதியும் அனைவருக்கும் சமம் என்பதே பொதுவான விதியாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்த வரையில் இந்த நியதி எப்போதோ தூக்கி எறியப்பட்டுவிட்டது. நீதியை நிலைநாட்ட வேண்டிய சில நீதியரசர்கள் கூட தரம் தாழ்ந்து செயற்பட்டமை இப்போது தெரியவந்துள்ளது.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை வழக்கில் தாம் மஹிந்த ராஜபக்ஷவை விடுவித்திருக்காதிருந்தால் அவரால் ஜனாதிபதியாக வந்திருக்க முடியாதென முன்னாள் பிரதம நீதியரசர் சரத்.என்.சில்வா பகிரங்கமாக கூறியுள்ளார்.

இதன் மூலமாக இவரது நீதி வழங்கும் நம்பகத்தன்மை கேள்விக் குறியாக மாறிவிட்டது. இவர் போன்றவர்கள் நீதித்துறையின் உயர் பதவியில் அமர்ந்திருக்கும் வரை நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?


தற்போது நீதித்துறை மீதான நம்பிக்கை மக்களிடம் அதிகளவில் காணப்படுகின்றது. மைத்திரி தலைமையில் ஆட்சி மாற்றமொன்று நிகழ்ந்ததே இதற்கான பிரதான காரணமாகும். மஹிந்த ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும் மோசமான நிலையில் காணப்பட்டது. எங்கு பார்த்தாலும் அராஜகம் மலிந்து காணப்பட்டது. நீதி கேட்டுப் போராடியவர்களின் குரல்வளை நசித்து ஒடுக்கப்பட்டது. ஒரு காட்டாட்சி என்று கூறும் அளவுக்கு நிலைமை மோசமாகக் காணப்பட்டது. ஆட்சியில் இருந்தவர்கள் தமது இஷ்டத்துக்கு ஏற்ற வகையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டனர். இதனால் நாட்டின் வளம் சூறையாடப்பட்டது. மஹிந்த குடும்பத்தினர், உறவினர்கள், தெரிந்தவர்கள் எனப் பலர் தற்போது குற்றம் சாட்டப்பட்ட நிலையில் விசாரணையை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வகையில்தான் சிரந்தியிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அவருடன் அவரது கணவரான முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் கூடச் சென்றுள்ளார். அவரது பத்து வருட ஆட்சியில் இங்கு என்ன நடந்தது என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள். மஹிந்தவின் ஆணவமும் செருக்கும் நிறைந்த ஒரு சர்வாதிகார ஆட்சியைத்தான் அன்று காண முடிந்தது. அவரது மொத்தக் குடும்பமுமே ஆட்சியில் பங்கு கொண்டிருந்தது. அவர்களைத் தட்டிக்கேட்பதற்கான துணிவு எவரிடத்திலும் இருக்கவில்லை. நீதிமன்றங்களைக் கூட இவர்கள் துச்சமாக மதித்தனர். மேலும் அப்போதைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் இவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி வந்தன. தற்போது நிலைமையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. நீதி கேட்டு மக்கள் போராடுகின்ற அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் குற்றமிழைத்தவர்களும் இதை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. சிரந்தியை விசாரணைக்கு அழைத்த போது ஒரு பிரிவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்குத் துணிந்ததும் அரசின் மெத்தனப் போக்கான செயற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றது.

மஹிந்த தரப்பினர் கௌரவமானவர்களாக இருந்தால் எந்தவிதமான விசாரணைகளுக்கும் முகம் கொடுப்பதற்குத் துணிய வேண்டும். தாம் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். இதற்கு நீதித்துறையுடன் ஒத்துழைக்கும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால் தாம் குற்றமற்றவர்கள் எனவும் மைத்திரி அரசு தம்மைப் பழிவாங்குவதற்குத் துடிப்பதாகவும் அவர்கள் திரும்பத் திரும்ப கூறி வருகின்றமை சலிப்பை ஏற்படுத்துகின்றது.

முன்னாள் முதற் பெண்மணியான சிரந்தி, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டமை சாதாரணமானதொரு விடயமல்ல. அது இந்த நாட்டின் கௌரவத்துக்கே சவால் விடக்கூடியது. ஆகவே குறுக்கு வழியில் ஏத வது செய்து அவரை விசாரணைகளிலிருந்து விடுவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் மஹிந்த தரப்பினரின் கௌரவத்திற்கு இழுக்கையே தேடித்தரப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேர்ஜினிய தீவு வங்கியில் புதிய நிறுவனம் இரகசிய கணக்கு

## மிக் விமானக் கொள்வனவு ஊழல் மோசடிக்குத் தொடர்பு?

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து
ரெங்கன்

முன்னைய அரசுத் தலைவர்களின் மறைத்து வைக்கப்பட்டுள்ள சொத்துக்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான தேடுதலானது உச்சத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. அதேசமயம் பொதுத் தேர்தலும் விரைவில் நடைபெறுவதற்கான சூழ்நிலையும் தென்படுகின்றது.
இந்தப் பணியில் உள்ளூர் விசாரணை முகவர் அமைப்புக்களுக்கு உதவுவதற்காக அமெரிக்க உள்துறை பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் நீதித்துறை திணைக்களத்தையும் சேர்ந்த அதிகாரிகள் கடந்தவாரம் இலங்கை வந்திருந்தார்கள். அமெரிக்க இராஜாங்க அமைச்சின் செயலர் ஜோன் கெரி மே மாதம் இலங்கைக்கு வந்திருந்ததன் நேரடி விளைவாகும் இது. வெளிநாட்டிலுள்ள சொத்துக்களைக் கண்டுபிடிப்பதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்ளக விசாரணைகளுக்கு உதவிகள் புரிவதாகவும் ஜோன் கெரி அமெரிக்க அரசின் சார்பில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அப்பொழுது வாக்களித்துச் சென்றிருந்தார்.
இலங்கை வந்திருந்த அமெரிக்க அதிகாரிகள் நிதித்துறை குற்றவியல் புலனாய்வுப் பிரிவினதும் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினதும் உயர்நிலை அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியிருந்தார்கள். உள்ளக விசாரணையாளர்களிடமிருந்து தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்நிலை விசாரணைகள் தொடர்பான விவரங்களை அமெரிக்க அதிகாரிகள் கேட்டுவிளங்கிக் கொண்டதுடன் இலங்கைக்கு வெளியில் குறிப்பாக அமெரிக்காவுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்கு பதில் கண்டுபிடிப்பதற்கு உதவுவதாகவும் உறுதியளித்துள்ளனர். மறைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விடயம் ஒருபுறமிருக்க அமெரிக்க அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது அமெரிக்காவிலுள்ள இலங்கை ராஜதந்திரி ஒருவரின் செயற்பாடுகள் குறித்து குறிப்பாக கவனம் செலுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அவர் ராஜதந்திர வரைமுறைகளுக்கு மாறாக மேற்கொண்டிருந்த நிதிச் செயற்பாடுகள் தொடர்பான விவரங்களை அவர்கள் கையளிக்கச் சம்மதித்திருப்பதாகத் தெரிகின்றது. தனது ராஜதந்திரப் பணிகளுக்கு அப்பால் பெரும் அளவில் பணம் சம்பாதித்திருப்பது தொடர்பாக அவர் மீது சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு இலங்கை அதிகாரிகளுக்கு உதவுவதாக இது இருக்கும் என்று கருதப்படுகின்றது. கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டுப்பாடற்ற விதத்தில் அதிகாரங்களைப் பயன்படுத்தியவரான உள்ளூர் அரசியல்வாதியைப் பற்றியும் நிதித்துறை குற்றவியல் விசாரணைப் பிரிவினர் விவரங்களைத் தெரிந்து கொண்டுள்ளனர். அவர் லொஸ் ஏஞ்சல்ஸ், ஆர்விங்ரன், வேர்ஜினியா மற்றும் வோஷிங்டன் டி.சி போன்ற இடங்களில் பெரும் எடுப்பிலான குடியிருப்பு வளாகங்களை வாங்கியிருக்கிறார். சர்ச்சைக்குரிய இந்தப் பேர்வழி அமெரிக்காவில் இலங்கையின் நலன்களை விஸ்தரிப்பதற்கான பல திட்டங்களை முன்னெடுத்தவர் என்ற முறையிலும் பிரபல்யமானவர். அவரது வேறு முதலீடுகள் –அவைகளுக்கு எவ்வாறு பணம் சம்பாதித்தார் என்பவை பற்றியும் புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

### விமானப்படைக்கு மிக் வாங்கிய வகையில் ஊழல்

உள்ளக விசாரணைகளில் குறிப்பாக நிதிக் குற்ற புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் வெளியாகியுள்ள உண்மைகளின் காரணமாகவே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஒரு விடயம்தான் இலங்கை விமானப் படைக்கென மிக் – 27 சண்டை ஜெற் விமானங்கள் வாங்கப் பெற்றது தொடர்பாக நடத்தப்பட்டு வரும் புலனாய்வுகள். இந்தக் கொள்வனவு அரசுக்கு – அரசு என்ற வகையிலான வர்த்தகம் என்றவாறே ஆவணங்களில் காணப்படுகின்றது. ஆனால் பணம் செலுத்துவது லண்டனிலுள்ள பெலிமிஸா ஹோல்டிங் லிமிட்டெட் என்ற நிறுவனத்தின் பெயரில் நடைபெற்றுள்ளது. சமீப வாரங்கள் வரை இந்த நிறுவனம் இருக்கின்றதா என்பது தெரியாமல் இருந்து வந்தது. ஆனால் புலனாய்வுகளில் இந்தக் கம்பனியின் பெயரில் வங்கிக் கணக்கொன்று பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளிலுள்ள ஒரு வங்கியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் கரிசனைக்குரிய விடயம் என்னவென்றால் 2006 ஆம் ஆண்டுதான் இந்தக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது 2006 ஜூலை 26 ஆம் திகதி மிக் – 27 க்கான ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக ஆவணங்களின் படி அந்த நிறுவனம்கூட கணக்கு ஆரம்பிக்கப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்பே உருவாக்கப்பட்டுள்ளது. இவைபற்றிய மேல்விவரங்களை நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினர் வெளியிட மறுத்து விட்டார்கள். புலன்விசாரணைகள் தொடர்கின்றன என்பது மட்டுமே அவர்களால் கூற முடிந்தது.
இருந்தபோதும் உக்ரேன் தலைநகர் கீவ் இற்கு சென்றுள்ள நான்கு பேர் கொண்ட விசாரணைக்குழுவினர் இந்த நிறுவனம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது. அதன் பணிப்பாளர்கள் யார் மற்றும் அதன் தொடர்புகள் போன்றவை குறித்து துருவி ஆராய விருப்பதாக வேறுவட்டாரங்களிலி ருந்து அறிய முடிகின்றது. இந்த மிக் விமானக் கொள்வனவு ஒப்பந்தத்துக்கு ஏற்பாடு செய்தவரான ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத்தூதுவர் உதயங்க வீரதுங்கவை விசாரணைக்கு உட்படுத்தவும் புலனாய்வாளர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அவருக்கு இதில் நேரடித் தொடர்பு இருந்துள்ளதாக இலங்கை விமானப்படை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள் ளனர்.
கடந்த வாரம் ஈரானிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு தொடர்பு கொண்டு தனது தனிப்பட்ட உடைமைகள் கொண்ட கொள்கலன் ஒன்று கொழும்புக்கு வரவிருக்கிறதென்பதை வெளியுறவு அமைச்சருக்கு தகவல் கொடுக்குமாறு அவர் கேட்டதிலிருந்து அவர் அந்த நாட்டில் இருப்பது நிதிக்குற்ற விசாரணை பிரிவினருக்கு தெரிய வந்தது. இந்த வாரம் விசாரணைப் பிரிவுக்கு கிடைத்துள்ள செய்தியில் அவர் இப்போது டுபாயில் மாரியட் என்ற ஹோட்டலில் தங்கியிருக்கிறார் என்பது தெரிய வந்திருக்கிறது.
முன்னாள் இலங்கைத் தூதுவரான அவரது உத்தியோக கடவுச்சீட்டு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையிலும் அவரால் எவ்வாறு பயணங்கள் மேற்கொள்ள முடிகிறது என்பதை உறுதி செய்து கொள்ள ஆய்வாளர்கள் விரும்புகிறார்கள். ஒருவேளை அவர் வழமையான பொதுக் கடவுச்சீட்டொன்றைப் பயன்படுத்தக்கூடும் என்று கருதப்படுகின்றது.
பிரிட்டிஷ் வேர்ஜின் தீவுகளில் இரகசிய வங்கிக்கணக்குகள் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறது. கரபியன் தீவுகளில் பொருளாதாரம் மிகவும் ஸ்திர நிலையில் காணப்படும் பகுதியாக அது காணப்படுகிறது. இதற்கு அது அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதும் காரணமாக இருக்கலாம். பெரிய பிரித்தானியாவின் கடல் கடந்த பிரதேசமாக கருதப்பட்டாலும் அங்கே அமெரிக்க டொலர் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதும் இன்னொரு காரணமாக இருக்கலாம். வீரதுங்கவை விசாரணைக்குட்படுத்தினால் அந்த நிறுவனம் பற்றிய மேலும்பல விவரங்களை கண்டுபிடிக்கலாம் என்று புலனாய்வாளர்கள் கருதுகிறார்கள்.
இவ்வளவுக்கும் இப்பொழுது நடைபெற்று வரும் அனைத்து விசாரணைகளின் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது சாத்தியமாகுமா என்ற கேள்வி இப்பொழுது மேல்எழுந்திருக்கின்றது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று நிதிக் குற்ற விசாரணை பிரிவின் சட்டவலு தொடர்பான விசாரணையொன்று உயர் நீதிமன்றத்தில் இப்போது நடைபெற்று வருவதாகும். விசாரணைகளின் மீதான செயற்பாடுகளை அது தாமதமாக்காவிட்டாலும் அதன் எதிர்கால செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது சொல்ல முடியாமலே இருக்கிறது. அது தெரிவு செய்யப்படவிருக்கும் புதிய அரசைப் பொறுத்தே அமையும்.

“ உள்ளக விசாரணைகளில் குறிப்பாக நிதிக் குற்ற புலனாய்வுப் பிரிவினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் வெளியாகியுள்ள உண் மைகளின் காரணமாகவே இந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஒரு விடயம்தான் இலங்கை விமானப் படைக்கென மிக் 27 சண்டை ஜெற் விமானங்கள் வாங்கப் பெற்றது தொடர்பாக நடத்தப்பட்டு வரும் புலனாய்வுகள். இந்தக் கொள் வனவு அரசுக்கு அரசு என்ற வகையிலான வர்த்தகம் என்றவாறே ஆவணங்களில் காணப்படுகின்றது. ஆனால் பணம் செலுத் துவது லண்டனிலுள்ள பெலிமிஸா ஹோல் டிங் லிமிட்டெட் என்ற நிறுவனத்தின் பெயரில் நடைபெற்றுள்ளது.


### மைத்திரியின் மூலோபாயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவைப் பொறுத்தவரை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகபாடிகளின் தேர்தல் பரப்புரைகளை பலவீனப்படுத்துவது முக்கிய தேவையாக இருக்கிறது. இப்போது நடத்தப்பட்டு வரும் விசாரணைகளின் முக்கிய நோக்கமும் அவர்களின் தவறான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதும் அதன் மூலம் தனது பரம எதிரிகளின் நம்பகத்தன்மையை சேதப்படுத்துவதுமாகும். அந்த வகையில் தான் 20 ஆவது தேர்தல் சீர் அமைப்பு அரசமைப்பு திருத்தமும் இப்போது முதன்மைப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அமைச்சரவைக்கு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட தேர்தல் சீரமைப்பு யோசனைகளில் ஓர் உபாயம் காணப்படுவதாக அவருக்கு நெருக்கமான ஆலோசகர்கள் கூறுகின்றார்கள்.
ராஜபக் ஷவும் அவரது பங்காளிகளும் பல மாவட்டங்களில் போட்டியிடுவதை அது தடுப்பதோடு தேர்தல் தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுமாறு அது நிர்ப்பந்தித்திருப்பதாக இருக்கும். தற்போதிருக்கும் முறைப்படி முழு மாவட்ட வாக்குகளையும் தமது கட்சியின் சார்பில் கணக்கிடுவதை அது தடுப்பதாய் இருக்குமாம். அதனால்தான் 196 உறுப்பினர்கள் தேர்தல்தொகுதி அடிப்படையிலும் எஞ்சியிருக்கும் 59 உறுப்பினர்களும் தேசிய பட்டியல் அடிப்படையிலும் விகிதாசார முறையில் தெரிவு செய்யப் படுவதாக இருக்கும் முறை கொண்டுவரப்பட இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பிலையின் பயன்கள்

பித்தப் பிரச்சினை மற்றும் கிருமியால் அவதிப்படுபவர்கள் வேப்பம் பூவை ரசம் வைத்து சாப்பிடுவது மிகவும் நல்லது. அவ்வாறு சாப்பிட்டால் உடலில் ஏற்படும் அதிகப்படியான பித்தம் குறைந்துவிடும். உடலில் உள்ள ஒருசில கிருமிகளும் அழிந்து விடும். வேப்பம் பூவை உலர்த்தி பொடியாக்கி மஞ்சள் தூளுடன் கலந்து தேய்த்துக் குளித்து வந்தால் தோல் வியாதி நீங்கிவிடும். அந்தப் பொடியை தணலில் போட்டு வீடு முழுவதும் புகையைப் பரவ விட்டால் விப்பூச்சிகள், கொசு, மூட்டைப்பூச்சி தொல்லைகள் ஒழிந்து விடும். தினமும் வேப்பமிலைகளை நீரில்போட்டுவைத்து விட்டு ஓரிரு மணி நேரம் கழித்து குளிக்க தோல் வியாதியே வராமல் இருக்கும். வேப்பமிலை கொத்துகள் நான்கை எடுத்து தண்டு மட்டும் வெந்நீரில் படுமாறு செய்து கால்மணி நேரம் ஊறவையுங்கள். பிறகு அந்த சாற்றை இரண்டு நாட்கள் குடித்து வர வயிற்று எரிச்சல் நிற்கும். வேப்பிலைச் சாற்றை எடுத்து மோருடன் கலந்து சாப்பிட வயிற்று பூச்சிகள் ஒழியும். வேப்பம் பூவை லேசாக வாட்டி தலையில் கட்டிக் கொண்டால் பேன், பொடுகு, ஈறு போன்றவை அகன்று விடும். வேப்பிலைக் கொழுந்தை தினமும் பச்சையாகச் சிறிதளவு மென்று வந்தால் வயிறு சம்பந்தமான தொல்லைகள் வரவே வராது. வேப்பிலைக் கொழுந்தை இடித்து சாறு பிழிந்து அதில் சிறிது தேனைச் சேர்த்து இரவு உணவுக்குப் பின் சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள பூச்சிகள் இறந்தோ உயிருடனோ உடலை விட்டு வெளியேறிவிடும். வேப்பங்கொழுந்தை பசுமோர் விட்டு அரைத்து தீப்பட்ட புண்ணில் பூசினால் சீக்கிரம் காயம் ஆறும். வேப்பங் கொழுந்து இலையை அரைத்து ஒரு கோலி அளவு எருமை தயிரில் மூன்று நாள்கள் உள்ளுக்குள் உட்கொண்டு வந்தால்தொண்டைக்கறமல் குணமாகும். வேப்பம் பூ, மிளகு, இவை இரண்டையும் சேர்த்து பவுடராக்கி சாப்பிட்டு வந்தால் கர்ப்பப்பை கோளாறு நீங்கும். வேப்பிலையை தண்ணீருடன் சேர்த்து கொதிக்க வைத்து அந்த நீரில் முகம் கழுவி வந்தால் முகம் பளபளப்பு அடையும். மழைக் காலங்களில் ஈக்கள் தொல்லை அதிகமாகும். ஈக்கள் தொல் லையை விரட்ட வேப்பிலையை சசக்கிடை விங்டேபிளில் வைத்து விட்டால் ஈக்கள் வராது. மாத விலக்கின் போது வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் 3 கொத்து வேப்பிலையை எடுத்து தண்ணீரில் கொதிக்க வைத்து கொதிக்கும் முன்னர் மஞ்சள் சேர்த்து குடித்தால் வயிற்று வலி குணமாகும். தலையில் நீர் கோர்த்து தலைவலியால் அவதிபடுபவர்கள் இந்த வேப்பிலை மஞ்சளை நன்கு கொதிக்க வைத்து ஆவிபிடித்தால் தலை வலி குணமாகும்.



## நாளை

**வைகாசி—21 வியாழக்கிழமை 04.06.2015**

திதி: துதியை மு.இ. 08.45 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.08.25 வரை
சுபநேரம்: 05.52-07.22 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஒவ்வொரு உயிரிலும் கடவுள்

சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் செல்வந்தனாக வாழ்ந்தபோதும் சுயநலம் இல்லாதவனாக இருந்தால் அவனிடம் கடவுள் இருக்கிறார். ஒரு நல்ல லட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்குங்கள். மனிதனாக பிறந்ததற்கு வாழ்ந்து சென்றபின்னும் ஏதாவது அடையாளத்தை விட்டுச் செல்லுங்கள். உங்களுடைய நரம்புகளை முறுக்கேற்றுங்கள். காலம் எல்லாம் அழுது கொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக்கூடாது. சுயவலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள். தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை
செய்வதும் தான் எல்லாவழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் இறைவனைக் காண்பவனே உண்மையான வழிபாடு செய்பவன் ஆவான். கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு கடவுள் ஒருவர் உலகில் இல்லை.

## மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 50 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 90 | 100 | 120 | 100 | 130 | 80 | 80 | 40 |
| கரட் | 160 | 150 | 180 | 140–200 | 130 | 320 | 200 | 150 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50–60 | 80 | 60 | 40 |
| பயிற்றை | 140 | 120 | 200 | 100 | 120 | 80 | 140 | 60 |
| பாகல் | 160 | 140 | 120 | 120 | 120–140 | 160 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 90 | 100 | 120 | – | 100–120 | 160 | 120 | 75 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 110 | 100 | 120 | 120 | 120 | 90 |
| சி.வெங்காயம் | 100 | 100–140 | 120 | 120 | 100 | 160 | 120 | 85 |
| பூசணி | 30 | 25 | 40 | – | 20–30 | 50 | 60 | 15 |
| தக்காளி | 70 | 90 | 70 | 60 | 60–70 | 120 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40–60 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 50 | 50 | 15 | 30 | 50 | 35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50 | 50 | 40 | 60 | 50–60 | 80 | 120 | 20 |
| புடோல் | 70 | 80 | 100 | 90 | 80–100 | 90 | 120 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 40 |
| வெண்டி | 120 | 100 | 120 | 70 | 80–100 | 80 | 100 | 40 |
| போஞ்சி | 160 | 200 | 240 | 160 | 150–200 | 180 | 200 | 120 |
| லீக்ஸ் | 160 | 180 | 160 | 160 | 220 | 120 | 200 | 170 |
| தேங்காய் | 50 | 30–40 | 50 | 40 – 50 | 40–50 | 40 | 35–45 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 90 | 100–120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 160 | 120 | 180 | 120 | 140 | 140 | 140 | 140 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 70 | 140 | 160 | 140 | 110–120 | 200 | 100 | 80 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 80 | 100–120 | 260 | 180 | – |
| மு.காய் | 450 | 320 | 600 | 200 | 300–400 | 400 | 250 | 200 |

## கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 800 | 800 | 700 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 400 | 500 | 700 | 450 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 500 | 400 |
| சுறா | 550 | 500 | – | 650 | – | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 500 | – |
| விளை | 600 | 400 | 400 | 500 | 500 | 300 |
| முரல் | 300 | 400 | 350 | 350 | 400 | 250 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 450 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 350 | 400 | 300 |
| திரளி | 200 | 250 | 200 | 300 | 200 | 150 |
| நகரை | 200 | 300 | – | 300 | 200 | 200 |
| சூடை | 150 | 200 | 150 | 120 | 120 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 300 | 250 | 200 | 140 |
| பாலை | 400 | 300 | – | 500 | 500 | 350 |
| வாளை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 150 | 100 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | – | 250 | 400 | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | | 4 | | 6 | 5 | 2 |
| | | | | 1 | | 4 | | |
| | | 6 | 5 | 9 | 2 | | 7 | |
| 1 | | | | 7 | | 2 | 9 | |
| | 2 | 9 | | | | 5 | 4 | |
| | 6 | 4 | | 2 | | | | 1 |
| | 9 | | 4 | 5 | 7 | 8 | | |
| | | 5 | | 3 | | | | |
| 3 | 4 | 7 | | 8 | | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 3 | 2 | 5 | 4 | 6 | 8 | 1 |
| 1 | 4 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 2 |
| 2 | 5 | 8 | 1 | 9 | 6 | 7 | 4 | 3 |
| 6 | 3 | 9 | 4 | 7 | 2 | 8 | 1 | 5 |
| 4 | 2 | 5 | 9 | 1 | 8 | 3 | 6 | 7 |
| 7 | 8 | 1 | 6 | 3 | 5 | 9 | 2 | 4 |
| 5 | 6 | 2 | 8 | 4 | 7 | 1 | 3 | 9 |
| 8 | 9 | 7 | 3 | 2 | 1 | 4 | 5 | 6 |
| 3 | 1 | 4 | 5 | 6 | 9 | 2 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாத இராசி பலன்கள்

## மிதுனம்



இந்த மாதம் 2 இல் இருக்கும் குருவால் நன்மை தொடர்ந்து கிடைக்கும். சுக்கிரன் கடந்த வாரத்திலிருந்து கடகத்துக்கு இடம் மாறினாலும் மாதம் முழுவதும் நற்பலன் அளிப்பார். வக்கிரம் நிவர்த்தி அடைந்து, ராசிக்கு 11 ஆம் இடமான மேடத்துக்கு மாறிய பின்னர் நன்மை ஏற்படும். ராசிக்கு 12 இல் இணைந்திருக்கும் சூரியன், செவ்வாய் , 4 இல் உள்ள ராகு, 10 இல் உள்ள கேது ஆகியோரால். ஓரளவு பலன் கிடைக்கும். சனி பகவான் ஜூன் 12 முதல் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருகிறார். அதன்பினனர்; குடும்பத்தில் குழப்பத்தை உருவாக்கலாம். குடும்பத்தில் பெண்களால் சுகம் கிடைக்கும். பொன், பொருள் சேரும். விருந்து விழா என சென்று மகிழ்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும். பண வரவு சிறப்பாக இருக்கும். உறவினர் வகையில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**தொழில், வியாபாரத்தில்:** அமோக லாபம் கிடைக்கும். பணியாளர்களின் மீது அதிகாரிகளின் கருணை பார்வை கிடைக்கும். சூரியன் ராசிக்கு 12 இல் இருப்பதால் திடீர் இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

**கலைஞர்கள்:** ரசிகர்களின் மத்தியில் புகழ் பெறுவர்.

**அரசியல்வாதிகள்:** அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

**மாணவர்கள்:** முன்னேற்றம் காண்பர். ஜூன் 24 ஆம்; திகதிக்குப் பின்னர் மேல் படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்கும். ஆசிரியர்களின் ஆலோசனை பயன் உள்ளதாக அமையும்.

**விவசாயிகள்:** நல்ல விளைச்சலும், வருமான மும் கிடைக்கப் பெறுவர். புதிய சொத்து வாங்க பொறுத்திருக்க நேரிடலாம்.

**பெண்கள்:** கணவன் மற்றும் குடும்பத்தாரிடம் நற்பெயர் கிடைக்கப் பெறுவர். புத்தாடை அணிகலன்கள் வாங்கலாம். உடல்நலம் செவ்வாயால் பித்தம், மயக்கம் போன்ற உபாதைகள் வரலாம். பொருள் விரயம் ஏற்படலாம். முதல் வாரத்தில் சுதந்திரமற்ற நிலையில் இருப்பீர்கள். பிறருக்கு கட்டுப்பட்டு போகும் நிலை உருவாகும்.

**நல்ல நாள்:** ஜூன் 4, 5, 10, 11; 12, 13, 14

**கவன நாள்:** ஜூன் 6, 7 சந்திராஷ்டமம்

**அதிர்ஷ்ட எண்:** 3, 9

**நிறம்:** மஞ்சள்,வெள்ளை

**பரிகாரம்:** கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை வழிபாடு நடத்துங்கள். ராகு கால பைரவர் பூஜையில் ஈடு படுங்கள். நாக தேவதையை வணங்கி வாருங்கள்.



# புதிதாக போகும் மணப்பெண்ணுக்கு...



உங்கள் திருமணத்துக்கு நாள் குறித்தாகிவிட்டது. நீங்கள் மாப்பிள்ளையாகின், சற்று வீரமாக, பொறுப்பானவனாக உணர்வீர்கள். ஏனெனில், இதுவரை பெற்றோர், அவர்களது பெற்றோர், ஆசிரியர்கள் சொற்படி நடந்த உங்களுக்கு, இப்போது நம் அதிகாரத்தைப் பிரயோகிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் என்ற பெருமை எழக்கூடும்.

புது மனைவியிடம், உனக்கு சிவப்புப் புடவைதான் அழகாக இருக்கிறது. பச்சை வேண்டாமே எனும்போது, கணவருக்குத்தான் நம்மீது எவ்வளவு ஆழ்ந்த அன்பு என்று அவளும் உங்கள் விருப்பப்படியே நடக்கிறாள்.

தான் சொல்வதை மந்திரமாக ஏற்று நடக்கும் மனைவியால் உங்கள் சுயமதிப்பு கூடுகிறது. அவளை இன்னும் அதிகமாக அடக்க முயற்சிக்கிறீர்கள். அதைப்பற்றி நண்பர்களிடமும் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறீர்கள். அவளும் விட்டுக்கொடுத்துக் கொண்டே போகிறாளா? பத்திரம்! ஒட்டகத்தின் மேல் சுமத்தப்பட்ட கடைசி இழை வைக்கோலைப்போல் அவள் முதுகு உடையும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

ஒரு பெண் சுரத்தின்றி, எதிர்ப்பேச்சு பேசாது அடங்கிவிட்டால், அவள் கலகலப்பாக இல்லையே என்ற குறை கணவனுக்கு எழும். வெளியுலகில் பார்க்கும் பிற சுதந்திரமான பெண்களைப் பார்த்து, எனக்கு ஏன் இப்படி ஒரு ஜடம் வாய்த்தது என்று குறைப் படுகிறான்.

தனது பேச்சுக்கு மறுபேச்சே இருக்கக்கூடாது என்பதுபோல் நடக்கும் ஆண்களின் நிலை இதுதான்.

தனது ஆண்மையைத் தானே மெச்சி, மனைவியை நாலு பேர் முன்னிலையில் முட்டாள் என்று திட்டி, அல்லது காரணமில்லாமல் பலத்த குரலில் திட்டி, அல்லது அவள் செய்த முட்டாள்தனமான காரியம் எதையாவது தண்டோரா போட்டுச் சொல்லும் ஆண்கள் சற்று யோசிக்க வேண்டும். இப்படிச் செய்வதால், நீங்கள் உயர்ந்துவிட்டதாக யாரும் எண்ணப் போவதில்லை உங்களைத் தவிர்த்து.

பரிதாபத்துக்குரிய மனைவியோ, முகத்தில் எந்த சலனமும் இல்லாது உட்கார்ந்திருப்பாள். அவளுக்கு அவருடைய ஏச்சுப்பேச்சு பழகிவிட்டது. எனக்கு வருத்தமாக இருக்கிறது. இப்படி என்னை மட்டம் தட்டிப் பேசாதீர்கள் என்று கெஞ்சினாலும் அவர் மாற மாட்டார் என்பதை நடைமுறையில் கண்ட பெண்களும் உள்ளனர்.

பெண் மட்டும் தானா மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்? யோசியுங்கள்!

நீங்கள் பெண்ணானால்:

பெண்பார்க்கும் வைபவம் முடிந்து, உங்களை மணக்கவும் சம்மதம் தெரிவித்துவிட்டார் ஒருவர். மூன்று மாதங்களுக்குப் பின்னர் திருமணம் நீங்கள் ஆவலோடு காத்திருந்த நன்னாள். நிம்மதியுடன், இனி என்ன வேண்டுமானாலும், எவ்வளவு வேண்டு மானாலும் சாப்பிடலாம் என்ற நிம்மதி ஏற்படுகிறதா? (நீ இப்படி குண்டா, வாயாடியா இருந்தா, ஒருத்தனும் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டான். இது நமது பெண்களுக்கு அடிக்கடி வழங்கப்படும் இலவச போதனை).

ஓர் ஆண்மகனை வளைத்துப் போடவா இத்தனை வருடங்களும் நீங்கள் உங்கள் மேனியழகைப் பாதுகாத்து வந்தீர்கள்? இல்லை, பிற ஆண்கள் உங்கள் அழகை ரசித்தால், கணவருக்குப் பிடிக்காதோ என்ற அச்சமா?

எதுவாக இருந்தாலும், உங்கள் போக்கு சரியல்ல. உடம்பைச் சரிவர பராமரிப்பது வெளிய ழகுக்காக மட்டுமல்ல. ஆரோக் கியம் என்று ஒன்று இருக்கிறதே, தெரியாதா? அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு, நாற்பத்தைந்து வயதிலேயே சர்க்கரை வியாதி, ஓயாத கால்வலி, ரத்த அழுத்தம் என்றெல்லாம் நீங்கள் புலம்ப ஆரம்பித்தால், யாருக்கும் சுகமில்லை.

கல்யாணமான முதல் கொஞ்ச நாள்கள் கணவர், அவருக்குப் பிடித்தமாதிரியே நீங்கள் எப்போதும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தால், ஒரேயடியாகப் பணிந்து போகாதீர்கள். உங்கள் தனித்தன்மையை இழந்து விடுவீர்கள். பிறர் என்ன சொல்வார்களோ என்று பயந்தே வாழ்க்கையைக் கழிப் பது நமக்கு நாமே அளித்துக் கொள்ளும் தண்டனை. எந்த ஒரு பந்தத்திலும், சந்தோஷம் அல்லது துயரம் மட்டுமே நிலைத்திருப்பது கிடையாது. உங்கள் போக்கு ஒருவர் விடவில்லை என்றால், உடனே உறவை முறித்துக்கொள்வதும் தகுந்த தீர்வு இல்லை. வாரத்தில் ஒரு நாளாவது சண்டை போடாமல், இருவரும் சேர்ந்து எங்காவது சென்று வந்தால்கூடப் போதும். மற்ற நாள்களில் கிடைக்காத மன ஒற்றுமை கிட்டிவிடும்.

மணந்தவரை (மணந்தவளை) மாற்ற முயல்வது ஒரு [illegible] யொருவர் அப்படியே ஏற்றுக்கொண்டால், புரிந்துணர்வு [illegible]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மையின் சக்தி




ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தாரும், அடிவாரத்தில் இன்னொரு இனத்தாரும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தாருக்கும் எப்போதும் பகை. ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள். சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால், குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர். இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழக்கப்பட்டவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடாமுயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள். ஊர்ப் பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள். இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படியான பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப்போனதும் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர். அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன் நாங்கள் ஏறச் சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்று விட்டாயே! எப்படி? என்று வியப்புடன் கேட்டார்கள். அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம் என்று பதில் சொன்னாள்.

# பொது அறிவுத் தகவல்கள்



- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம், பனாமா கால்வாய்.
- விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு, ஜெர்மனி.
- திரவத்தங்கம் என்றழைக்கப்படுவது, பெட்ரோலியம்.
- தபால்தலையை (ஸ்டாம்ப்) வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
- உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி.
- உலகின் மிகப்பெரிய பூங்கா கனடாவில் உள்ள உட் பபெல்லோ நேஷனல் பார்க்.
- உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள டொராண்டோ உயிரியல் பூங்கா
- 1972-ம் ஆண்டு வங்காள தேசத்தின் தேசிய விளையாட்டாக கபடி அறிவிக்கப்பட்டது.
- சஞ்சீவனி, காமினி மற்றும் அமர் ஆகிய பெயர்களில் 3 விதங்களில் கபடி ஆட்டம் நடைபெறுகிறது.
- 1990 ஆம் ஆண்டு பீஜிங் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் முதலாக கபடி ஆட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- 2004-ம் ஆண்டு முதல் உலக கோப்பைக்கான கபடிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்தியாவின் முதல் அணுமின் நிலையம் தாராப்பூரில் அமைக்கப்பட்டது.
- ஆபிரிக்கா கண்டத்தில் மட்டுமே வரிக்குதிரை காணப்படுகிறது.
- மேகங்களின் வீடு என்று அழைக்கப்படுவது மேகாலயா.



## விடுகதைகள்

1. நெருப்பிலும் உண்டாவான் குளிரிலும் உண்டாவான்... அது என்ன?
2. இரவில் தானாக வரும், ஆனால் இரவலாக மட்டும் கிடைக்காது... அது என்ன?
3. ஆள்தான் பார்க்க சிறிதாக இருப்பான்... ஆனால் அவனுடைய உழைப்போ அதிசயம்! அவன் யார்?
4. இதுவும் ஒளிதரும் விளக்குதான்... ஆனால் எண்ணெய் தேவையில்லை! இது என்ன?
5. சமையலுக்கு உதவும் கல்... சட்டியில் போட்டால் சட்டி உடையாது, இவன்தான் உடைவான்... இது என்ன?
6. மீசை வைத்த சிறிய அத்தை... மினுமினுப்பாகப் போகிறாள்... அது என்ன?
7. வெள்ளைச் சாலையில் கருப்புக் கார்.... அது என்ன?
8. உங்களிடம் இருக்கும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டால் உங்களிடம் இருக்காது... அது என்ன?
9. கொடுக்க முடியும், எடுக்க முடியாது... அது என்ன?

## விடைகள்:

1. புகை, 2. தூக்கம், 3. எறும்பு, 4. மெழுகுவர்த்தி
5. உப்புக்கல், 6. கரப்பான் பூச்சி, 7. கண் 8. ரகசியம், 9. கல்வி

# புதுமைக்குத் தேவை சவால்



நம்மிடம் உலகத்திலேயே சிறப்பான கருத்து, கற்பனை, சிந்தனை, எண்ணம் இருக்கலாம்; ஆனால் அதிலேயே நாம் ஒரு புதுமையானவர் ஆகிவிட முடியாது. புதுமைக்கு முதல் தேவை புத்தம் புதிய கருத்து-கருத்தோடு மட்டும் புதுமையை அடைய முடியாது! ஆனால் உண்மையில் புதுமைக்குத் தேவைப்படுவது, ஒரு சவால்தான். நாம் காலம் காலமாகப் போய் வந்த பாதையை ஒரேடியாக மாற்றச் செய்யும் ஒரு சவால்! போகின்ற பாதை மிகவும் பயங்கரமானது! அதன் ஒவ்வொரு அடியிலும் புதிய புதிய சிந்தனைகள் தேவைப்படும். புதுமை செய்கிறேன் என்று புறப்படும் பாதை, ஒரு கடினமான மலைப் பாதையைப் போல உற்சாகமும் ஈடுபாடும் அணைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி நம் இதயம் சோர்ந்து போய், கீழே போய்விடலாம் என்று சொல்லும்; அதைமீறி மேலே போய்க் கொண்டே இருக்க வேண்டும். ஒரு சாகசப் பயணம் என்றால் வழியில் நூற்றுக் கணக்கான புயல்கள் வீசும், சவால்கள் மறிக்கும். கடைசியாக பயணத்தின் நோக்கம் சிகரத்தை அடைவது மட்டுமே அல்ல இன்னும் பல சிகரங்களை எட்டுவதற்கான வல்லமை களை வளர்த்துக் கொள்வதும் தான்! சிகரத்தை அடைவோம்! வானத்தைத் தொடுவோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 54 இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பிய ஆஸி.

சிட்னி, ஜூன் 3
இந்தோனேஷியாவில் இருந்து 54 இலங்கையர்கள் உள்ளிட்ட 65 பேருடன் சென்ற அகதிகள் படகு ஒன்றை ஆஸ்திரேலிய சுங்கத்துறையினர் நடுக் கடலில் வழி மறித்துத் திருப்பி அனுப்பியுள்ளனர். இந்தோனேஷியப் பொலிஸ் அதிகாரியை மேற்கோள்காட்டி சிட்னி மோர்னிங் ஹெரோல்ட் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

திருப்பி அனுப்பப்பட்ட இலங்கை, மியன்மார், பங்களாதேஷ் நாட்டு அகதிகள் 65 பேரும், இந்தோனேஷியாவின் ரோட் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய கரையில் இருந்து 500 கி.மீ. தொலைவில் உள்ள மேற்கு ரோட் மாவட்டத்தில் உள்ள தீவு ஒன்றுக்கு அருகே இரண்டு படகுகள் தத்தளிப்பதை அவதானித்த மீனவர்களே, இவர்களை நேற்று முன்தினம் மீட்டனர்.

அவர்கள் சோர்வடைந்திருந்தனர். கர்ப்பிணியான ஒரு பெண்ணும் அவர்களுள் இருந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுத் தற்போது நலமாக இருக்கிறார்.

ஆஸ்திரேலிய சுங்கத்துறையினரால் தாம் கடந்த மாதம் 26ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும், இரண்டு படகுகளைக் கொடுத்து இந்தோனேஷியக் கரைக்கு அவர்கள் திருப்பி அனுப்பியதாகவும் அகதிகள் தெரிவித்தனர்.

உணவு, குடிதண்ணீர் மற்றும் இந்தோனேஷியாவைச் சென்றடைவதற்கான சிறிய அளவு எரிபொருளை மட்டும் அவர்கள் கொடுத்திருந்ததாகவும் அகதிகள் குறிப்பிட்டனர்.

படகில் இருந்த 65 பேரில், நான்கு பெண்கள், மூன்று சிறுவர்களும் அடங்கியுள்ளனர். இவர்களில் 54 பேர் இலங்கையர்கள். 10 பேர் பங்களாதேஷையும், ஒருவர் மியன்மாரையும் சேர்ந்தவர்.

மேற்கு ஜாவாவில் உள்ள பெலபுஹான் ராதுவில் இருந்து இவர்கள் கடந்த மாதம் 24ஆம் திகதி புறப்பட்டுச் சென்றுள்ளனர். இரண்டு நாள்கள்கழித்து ஆஸ்திரேலியக்கடற்படை இவர்களைக் கைது செய்துள்ளது.

இந்த அகதிகள் படகில் ஆறு மாலுமிகளில் நால்வரை இந்தோனேஷியப் பொலிஸ் கைது செய்துள்ளது. ஆறாவது மாலுமி பற்றிய குழப்பமான தகவல்கள் உள்ளன. அவரை ஆஸ்திரேலிய கடற்படை பிடித்து வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது - என்றும் இந்தோனேஷிய பொலிஸ்துறைத் தலைவர் ஹிதாயத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த அகதிகள் மேற்கு திமோர் மாகாணத்தில் உள்ள பெரிய நகரான குபாங்குக்கு மாற்றப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக அங்குள்ள அமைப்பு ஒன்றின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். அங்கு குடிவரவு குடியகல்வு தடுப்பு நிலையம் ஒன்று இருந்தாலும் அது முழுமையாக நிரம்பியுள்ளதால், அகதிகள் விடுதிகளில் தங்கவைக்கப்படலாம் என்றும் கூறப் படுகிறது.

இதற்கிடையே, இந்த அகதிகள் நியூஸிலாந்து செல்லும் வழியிலேயே ஆஸ்திரேலிய சுங்கத்துறையால் தடுக்கப்பட்டதாக பிறிதொரு செய்தி கூறுகிறது. (த)

## இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக புலத்சிங்கள

கொழும்பு, ஜூன் 03
இலங்கை விமானப்படையின் புதிய தளபதியாக எயர்வைஸ் மார்ஷல் ககன் புலத்சிங்கள நியமிக்கப்படவுள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.



இலங்கை விமானப்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த விமானப் படையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், தற்போதைய விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கோலித குணதிலக இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தம்மைக் கூட்டுப்படைகளின் தளபதியாக நியமிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளதாகவும், எயர் மார்ஷல் கோலித குணதிலக குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பாதுகாப்புச் செயலர் நாடு திரும்பியதும் இந்த நியமனங்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை- தற்போதைய விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் கோலித குணதிலக விரைவில் ஓய்வு பெறவுள்ள நிலையில், அவருக்கு அடுத்த நிலையில் உள்ள அதிகாரிகளான எயர்வைஸ் மார்ஷல் ககன் புலத்சிங்கள மற்றும் எயர்வைஸ் மார்ஷல் கபில ஜெயம்பதி ஆகியோருக்கு இடையில், விமானப்படைத் தளபதி பதவியைப் பெறுவதற்கான பனிப்போர் நடந்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. (த)

## தமிழர்கள் அமைப்பு ஹிலாரிக்கு ஆதரவு

நியூயோர்க், ஜூன் 3
அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடத் திட்டமிட்டுள்ள அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனுக்கு ஆதரவு தெரிவித்து, ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

2016ஆம் ஆண்டு நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் சார்பில் ஹிலாரி கிளின்டன் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், அவருக்கான ஆதரவை உறுதிப்படுத்தி அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் அமைப்பான ஒபாமாவுக்கான தமிழர்கள் அமைப்பு கடிதம் ஒன்றை கடந்த மாதம் 30ஆம் திகதி ஹிலாரிக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதில், ஏற்கனவே 2008ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, அவருக்கு ஆதரவு வெளியிட்டதை நினைவுபடுத்தியதுடன், அந்த ஆதரவு தொடரும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (த)


உதயன் விளம்பரம்
advt@uthayan.com
0215671111

**வேலையாள் தேவை**
கடை ஒன்றில் வேலை செய்ய வேலையாள் தேவை.சம்பளம் -18,000/=(மதிய உணவு)
தொடர்பு: 021 791 2997

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**
பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஒருதொகைப் பணம்கண்டெடுக்கப் பட்டுள்ளது. தொலைத்தவர்கள் உரிய ஆதாரத்தைக் காட்டி பெற்றுக்கொள்ளவும்.
தொடர்பு: 077 340 0267
077 075 9786

**விஷேட விலைக்குறைப்பு**
4R(10 படத்துக்கு மேல்) - 10.00
அழைப்பிதழ்கள்
4R(100 படத்துக்கு மேல்) - 09.00
4R(300 படத்துக்கு மேல்) - 08.00
4R(100UP INKJET PRINT) - 06.00
12x30 NT ALBUM PRINT - 200.00
12X30 EMBOSSING PRINT - 2000.00
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் 0212221358 62/20, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.


## இலவச தேர்தல் விளம்பரம் செய்தோருக்கும் தலையிடி

கொழும்பு, ஜூன் 3
கடந்த தேர்தலின் போது விளம்பரம் செய்து அதற்குப் பணம் செலுத்தாத அரசியல்வாதிகளிடமிருந்து பணம் அறவீடு செய்யப்பட உள்ளதாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமரட்ன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைப் பயன்படுத்தி இலவசமாகத் தேர்தல் காலத்தில் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 250 மில்லியன் ரூபா பெறுமதியான விளம்பரங்கள் இவ்வாறு இலவசமாகச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு இலவசமாக விளம்பரம் செய்த அரசியல்வாதிகளிடமிருந்து சட்ட ரீதியாகப் பணத்தை மீளப் பெறுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு விளம்பரத்துக்கான கட்டணங்களைச் செலுத்தத் தவறினால் சட்ட ரீதியில் அவர்களின் சொத்துக்களைக் கைப்பற்றியும், நிலுவைக் கட்டணம் அறவீடு செய்யப்படும்.

மேலும், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இலவசமாக ஒளிபரப்புச் செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகமொன்றுக்காக, அரசியல்வாதி ஒருவருக்கு ஒவ்வொரு அங்கத்துக்கும் தலா 50,000 ரூபா வழங்கப்பட்ட சம்பவம் குறித்தும் விசாரணை நடத்தப்பட உள்ளதாகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சோமரட்ன திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (த)

## பாக். இராணுவத் தளபதி 5 ஆம் திகதி இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 3
பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஜரீப், எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளத் திட்டமிட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

ஐந்து நாள் பயணமாக கொழும்பு வரும் பாகிஸ்தான் இராணுவத் தளபதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்பு செயலர் மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடற்படை, விமானப்படைத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளார்.

மேலும், சில இராணுவத் தளங்களுக்கும் அவர் பயணம் மேற்கொள்வார். பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஹீல் ஜரீப் கடந்த மாதம் 13ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், கராச்சி நகரில் பஸ் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 47 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, அவரது பயணம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (த)

## மன்றைக் கலைக்காவிடின் மஹிந்த அணி வலுவாகும்

### அநுரகுமார எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 3
காலாவதியான நாடாளுமன்றத்தை கலைக்காமல் தொடர்ந்து நடத்திச் சென்றால் மஹிந்த அணி மேலும் வலுவடைந்து விடும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
மஹிந்த அணி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேய் ஆட்டம் ஆடிக்கொண்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மிரட்டுகின்றனர்.

மேலும் நாட்டினுள் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், 70 ஆயிரம் தொழில்கள் இழக்கப்பட்டமைக்குப் பிரதமர் ரணிலின் நடவடிக்கைகளே காரணம்.

எனவே விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## பிரதான வாக்குறுதியை மீறியுள்ளது புதிய அரசு

### ராஜீவ விஜேசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 3
அரசு மக்களுக்கு வழங்கிய பிரதான வாக்குறுதியை மீறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
100 நாள்களுக்கு நிறைவேற்றுவதாக அளித்த பல வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய 25 பேரை விடவும் கூடாத வகையில் அமைச்சரவை நிறுவப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவையொன்று உருவாக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகாரத்தை வரையறுத்து நாடாளுமன்றை பலப்படுத்துவதாக அறிவிக்கப்பட்ட போதிலும், பிரதமருக்கான [illegible] இல்லை - என்றார். (த)


**வெளிவாரிப் பட்டப்படிப்புகள்**
★ 2015 ஆம் ஆண்டிற்கான பேராதனை பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் (கலைப் பிரிவு) பதிவுகளும் வகுப்புக்களும் இடம்பெறுகின்றன. விண்ணப்ப முடிவுதிகதி: 30.06.2015
★ மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புக்களுக்கான பதிவுகள் நடைபெறுகின்றன.
விண்ணப்ப முடிவுதிகதி: 10.06.2015
Note:
வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மாவட்ட மாணவர்களுக்கு விசேடநேர ஒழுங்குகள் செய்து தரப்படும்.
English Academy
No.5, Station Road, Karapan Kadu, Vavuniya.
024 222 6747, 077 624 5073
(41164)(9.1.3)


## அரசியலில் இருந்து ஒதுங்கட்டும் ரணில்

### பிரதிச் சபாநாயகரின் விருப்பம்

கொழும்பு, ஜூன் 3
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளவேண்டுமெனப் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ஒரு தடவை தோல்வியடைந்த போதிலும் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர் என ரணில் கூறுகின்றார். அவ்வாறெனின் 29 தடவைகள் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க பிரதேச சபைத் தேர்தலிலும் போட்டியிடத் தகுதியற்றவர்.

நாடாளுமன்றில் வாசுதேவ நாணயக்காரவிடம் ரணில் நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்டார். தற்போது மஹிந்த தேர்தலில் போட்டியிடக் கூடாது என்கிறார். அவ்வாறு என்றால் ரணில் அரசியலிலிருந்தே ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (த)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
எமது பாடசாலையின் உப அதிபர்
சி. பத்மராஜா (M.phill)



அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களும் பதவியுயர்வுகளும் பெற வாழ்த்துகிறோம்.
ஆசிரியர் நல்லுறவு மன்றம்
யா/செங்குந்த இந்துக்கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,800 கோடிக்கு நடந்தது என்ன?

*முன்னாள் ஜனாதிபதி பதில் கூற வேண்டும்*

கொழும்பு, ஜூன் 03
நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு கடந்த அரசு தேசிய சேமிப்பு வங்கியில் பெற்றுக்கொண்ட 5,500 கோடி ரூபா கடன் தொகையில் 2800 கோடி ரூபா வீதிப் புனரமைப்புக்குப் பயன்படுத்தப்படவில்லையெனத் தேசிய சேமிப்பு வங்கி அறிவித்திருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்தார்.
பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சராகவிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் வீதி அபிவிருத்திக்காக தேசிய சேமிப்பு வங்கியில் பெற்றுக்கொண்ட 5,500 கோடி ரூபா கடனில் 2,800 கோடி ரூபா வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார்.
இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2800 கோடி ரூபாவும் வேறு வீதிகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும், இவற்றை மீளச் செலுத்துவதற்கு வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக வழி ஏற்படுத்தப்பட்டிருந்ததாகவும் எழுத்துமூலம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் தேசிய சேமிப்பு வங்கி, நிதி அமைச்சின் செயலாளர் ஊடாக பிரதமருக்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்திருப்பதாகவும், இதற்கமைய 5500 கோடி நீண்டகாலக் கடனில் 2800 கோடி ரூபா வீதிகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் பிரதியமைச்சர் ஹர்ஷ. டி சில்வா தெரிவித்தார்.
அந்தப் பணத்தை எதற்குப் பயன்படுத்தினார் என்பதை முன்னாள் ஜனாதிபதி நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். ஒரு தேவைக்குக் கடனைப் பெற்றுவிட்டு அதனை வேறொரு விடயத்துக்குப் பயன்படுத்துவது பொருத்தமற்றது.
வேறு வீதி அபிவிருத்திகளுக்கு 2800 கோடி ரூபாவும் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவை தொடர்பான விவரங்களை முன்னாள் ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும். ஒரு தேவைக்குப் பெறப்பட்ட கடன் பிறிதொரு தேவைக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.
தேசிய சேமிப்பு வங்கிக்கு அரசே முழுப்பொறுப்புக்கூறவேண்டும்.
எனவே 2800 கோடி ரூபா நிதிக்கு என்ன நடந்தது என்பதை முன்னாள் ஜனாதிபதி கூறவேண்டும் என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (த)

# அரசமைப்புச் சபைக்கான உறுப்பினர் நியமனம் தவறு

*உதய கம்மன்பில குற்றச்சாட்டு*

அரச சேவையிலிருந்து அரசியல் வாதிகளைத் தூரமாக்குவதாக கூறிவிட்டு அரச நியமனங்கள் மற்றும் இடமாற்றம் தொடர்பில் அரசியல்வாதிகள் தீர்மானிக்கும் நிலையை அரசமைப்புச் சபையின் நியமனங்கள் ஏற்படுத்தியுள்ளதாக மேல் மாகாண சபை உறுப்பினர் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.
அரசமைப்புச் சபைக்கு ஜனாதிபதியின் பிரதிநிதியாக அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் பிரதமரின் பிரநிதியாக அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷவும்நியமிக்கப்பட்டுள்ளனர்.
இது நல்லாட்சி செயற்பாட்டுக்கு முரணானதாகும். பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களையும் இவர்களேநியமிக்கஉள்ளனர் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (த)

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணன் மகாதேவன்



(ஓய்வுபெற்ற அதிபர் தரம் I)
மலர்வு: 08.06.1940
உதிர்வு: 31.05.2015

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் மகாதேவன் 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன்-கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகம்மா தம்பதியரின் மருமகனும், மனோராணியின் அன்புக் கணவரும், மைதிலி, மாலதி மதிவதனன், மலர்விழி, மதுரா ஆகியோரின் தந்தையும், அருள், இராஜரட்ணம், யாழினி, விஜயமோகன் தவராஜா ஆகியோரின் மாமனும், யூட், யாழினி, ஸ்ரெலா, நிதர்சன் ஆனந்தி, அனுசியா, அஸ்வின் யதுஸ், மிதுன், கவின், நிஷாரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2015) புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பழமுதிர்ச்சோலை"
ஏழாலை மேற்கு, கோட்டைக்காடு,
மல்லாகம். 0777880881 (60403)(10.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பரமேஸ்வரி வேலுப்பிள்ளை



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை சுதுமலை வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வேலுப்பிள்ளை 01.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவி யும்,வேணுதாஸின்(ஜேர்மனி)அன்புத்தாயும், றஞ்சிதமலரின் மாமியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் புவனேந்திரன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்),காலஞ்சென்ற பரராஜசிங்கம் மற்றும் மகேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியை-சித்தங்கேணி,ஸ்ரீ கணேச வித்தி யாசாலை)ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2015)வியாழக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
தொடர்பு:077494 9951,
077416 3477

தகவல்:
வி.புவனேந்திரன்
குடும்பம்,
வி.மகேஸ்வரி(சகோதரி)

### சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தம்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தம் நேற்று (02.06.2015) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-பவளம் தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரனும், நாகப்பன்-இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், திலக்ஷன், கிஷானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜிகாவின் அன்பு மாமனும், சந்திரமதி, சந்திரபவானி, சர்வானந்தன் (லண்டன்), பவானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மூத்த சகோதரனும், காங்கேசு (சுவிஸ்), நாகம்மா இராசதுரை (சுவிஸ்), இலட்சுமி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (C/16444)(10.6.1)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஷிரந்தி ராஜபக்ஷவினால் ஹெல உறுமய கவலை

கொழும்பு, ஜூன் 03
பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.
எனினும் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளாமல் வேறு ஒரு இடத்தில் வைத்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய தங்களது கவலையை வெளியிட்டிருந்தது.
ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இவ்வாறான ஒரு செயற்பாட்டில் மோசடிக்காரர்களை பாதுகாத்து தீவிரவாதத்துக்கு அடிபணிவதனை தெளிவாக காண முடிகின்றது.
பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு ஷிரந்தி ராஜபக்ஷ அழைக்கப்பட்டிருந்தார்.எனினும் சிலரின் தீவிரமான நடத்தை காரணமாக வேறு இடத்தை அவரிடம் வாக்குமூலம் பொற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தததாகப் பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்திருந்தார்.
[illegible] செயற்படுத்துவதற்குத் [illegible] இருப்பவர்களுக்கு [illegible] கை எடுப்பது பொலி[illegible] மையாகும். [illegible] இவ்வாறு செயற்பட்டால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்கள் மற்றும் சந்தேக நபர்களை குற்றப் புலனாய்வு பிரிவுக்கு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு, நிதி குற்றத்தடுப்பு பிரிவு அல்லது நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்ல முடியாத ஒரு நிலை உருவாகி விடும் என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த)

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நல்லவர்களை நியமியுங்கள்

*ஏ.ரி.ஆரியரட்ன கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 03
அரசியல் அமைப்பு சபைக்கு முன் பெரிய சவால்கள் உள்ளமையால், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு மிகவும் பொருத்தமான ஆள்களை நியமிக்க வேண்டும் என்று சர்வோதயத்தின் தலைவர் ஏ.டி.ஆரியரட்ன கோரியுள்ளார்.
நல்லாட்சிக்கு வலுசேர்க்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் பங்களிப்பும் இதற்கு தேவை என்று ஆரியரட்ன குறிப்பிட்டுள்ளார்.
இலங்கையில் நல்லவர் பலர் உள்ளனர். எனவே அவர்களை தேடிப் பிடிப்பது கடினமான காரியமல்ல. என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
அரசியல் அமைப்பு சபையில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சி தலைவர் மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.
இதனைத்தவிர சுயாதீன உறுப்பினர்களாக சர்வோதய தலைவர் ஏ.டி. ஆரியரட்ன, ஐக்கிய நாடுகளின் சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் ராதிகா குமாரசுவாமி மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றின் முன்னாள் நீதியரசர் ஏ.டபிள்யூ. ஏ.சலாம் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.இது தொடர்பிலான இறுதிமுடிவு இன்று நாடாளுமன்றத்தில் எடுக்கப்படவுள்ளது.(த)

## மரண அறிவித்தல்

### திருமதி இதயஜோதி ஜெகநாதன்



இலங்கையைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இதயஜோதி ஜெகநாதன் நேற்று (02.06.2015) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெகநாதனின் பாசமிகு மனைவியும், பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்)-காலஞ்சென்ற ரங்கநாயகி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பாலுச்செட்டியார்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வராஜ் (பிரான்ஸ்), பிறேமலதா, கிருஷ்ணவேணி (இந்தியா), சந்திரமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரோகினி (பிரான்ஸ்), சண்முகநாதன் (இந்தியா), கணேசன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வாஷினி, சுஜித்ரா ஆகியோரின் பாசமிகு தாயும், பிறேம்நாத், சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், நிதுஷாஸ்ரீயின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2015) புதன்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No:155, [illegible],
யாழ்ப்பாணம். (60406)(10.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 021 222 8802

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா கொலைக் குற்றவாளிகளுக்கு பகிரங்கமாகத் தண்டனை வேண்டும்

*கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோன் ர்ராம் வலியுறுத்து*

கொழும்பு, ஜூன் 03

பாடசாலை மாணவியான வித்தியாவை வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலைசெய்த குற்றவாளிகளுக்கு மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஜோன் ராம் வலியுறுத்தியுள்ளார்.

வித்தியா கொலை தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

புங்குடுதீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மிலேச்சத்தனமாக கொலை செய்யப்பட்டுள்ளார் என்பது நிரூபணமாகியுள்ளது. அக்குற்றத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறிருக்கையில், இச் சந்தேகநபர்களை தப்பிக்கவைப்பதற் கான சில முயற்சிகளும் திரை மறைவில் நடந்ததாகக் கூறப்படுகின்றது. அதே நேரம், வடக்கு, கிழக்கு உட்பட தமிழ்பேசும் சமூகம் வாழும் இலங்கையின் எப்பாகத்திலும் இச் சம்பவம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி, நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டங்கள், கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அப்பாவி சிறுமியின் பிரிவால் துயரும் குடும்ப உறவுகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன், நியாயமான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அதேபோன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் குறித்த விடயத்தில் உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அவ்வாறான நிலைப்பாட்டை அரச கட்டமைப்பின் உயர் பிரதிநிதிகள் எடுத்திருக்கின்றமை வரவேற்கப்படவேண்டியதொன்றாகும். அதே நேரம், பொலிஸாரும் குறித்த விடயம் தொடர்பாக அவதானமாகவும், ஆழமாகவும் செயற்பட வேண்டிய கடமையுள்ளவர்களாக காணப்படுகின்றனர்.

எனினும், குறித்த மாணவியின் மரணத்துக்குப் பின்னர் வடக்கில் பாலியல் பிரச்சினைகள் தொடர்பாக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வந்த வண்ணமேயுள்ளன. ஆகவே, இவ் வாறான மனிதகுலம் வெட்கித் தலைகுனியும் வகையிலான செயற்பாடுகள் ஒட்டுமொத்தமாக நிறுத்த வேண்டிய தேவையுள்ளது.

எனவே, அப்பாவி மாணவியின் உயிரைப் பறித்த ஈவிரக்கமற்ற குற்றவாளிகளுக்கு பொதுமக்கள் முன்னிலையிலேயே பகிரங்கமாக தண்டனை வழங்கப்படவேண்டும். அத்தண்டனையானது எதிர்காலத்தில் இவ்வாறான மிக மோசமான குற்றச்செயல்களைப் புரிவதற்கு எவருக்கும் எண்ணம் ஏற்படாத வகையில் அமையவேண்டும். அதன் மூலமே தற்போது எமது நாட்டில் மலர்ந்திருக்கும் நல்லாட்சி நிலை பேறடையும் – என்றுள்ளது. (த)

## இருவர் கைது



கொழும்பு, ஜூன் 03

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போலி நாணயத் தாள்களை வைத்திருந்த 2 சந்தேகநபர்கள் இராஜகிரியவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியாக அச்சிடப்பட்ட நாணயத் தாள்களை மாற்றுவதற்காக சந்தேகநபர்கள் கொண்டுவந்திருந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பிலேயே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த)

# புதிய தொழிற் சங்கம் மலையகத்தில் உதயம்

கொழும்பு, ஜூன் 03

பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக, மத்திய மாகாணசபை உறுப்பினர் எம்.உதயகுமார் தலைமையில் புதிய தொழிற்சங்கமொன்று உதயமாகவுள்ளது.

'மலையக தொழிலாளர் உதயம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்தொழிற்சங்கமானது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற்படவுள்ளதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் எம்.உதயகுமார், தமிழ் மிரருக்கு தெரிவித்தார்.

'பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக பல்வேறு தொழிற்சங்கங்கள் இருந்தபோதும் அவற்றின் செயற்பாடுகள் மலையக மக்கள் எதிர்பார்க்குமளவுக்கு நன்மைகளை பெற்றுக்கொடுத்ததாக இல்லை.

தொழிற்சங்க ரீதியல் பல்வேறு பிரச்சினைகளையே எம் மக்கள் எதிர்கொண்டவர்களாகவே உள்ளனர்.

பிளவுபட்டுள்ள மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்கு தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட அனைத்து விடயங்களிலும் நன்மைகளை மட்டுமே பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இத்தொழிற் சங்கத்தை உருவாக்கியுள்ளோம்' என அவர் கூறினார்.

இன, மத, அரசியல் பேதமின்றி கடந்த காலத்தில் எமது மக்களுக்காக சேவையாற்றியுள்ளேன். பல்வேறு விடயங்களை பெற்றுக் கொடுத்துள்ளேன். தொழிற்சங்கமொன்றை உருவாக்கி அதன்கீழ் ஒற்றுமையுடன் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென எனக்கு வழங்கப்பட்ட அழுத்தத்தின் விளைவே இந்த புதிய தொழிற்சங்கம் உருப்பெற்றுள்ளது.

சந்தாப்பணமின்றி இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்பதே எமது இலக்கு. ஆனால், தொழிற்சங்கங்களுக்குரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவ்வாறு செயற்பட முடியாது.

இந்நிலையில் இத்தொழிற்சங்கங்களுக்கூடாக சிறிய தொகையை அறவிட்டு அந்தப் பணதை மீண்டும் மக்களுக்கே சென்றடையும் வகையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். இத்தொழிற்சங்கம் பற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்பு பின்னர் விடுக்கப்படும்;' என அவர் மேலும் தெரிவித்தார். (த)

# ஊடகவியலாளர்களுக்கு அரசு மீண்டும் நாடு திரும்ப அழைப்பு

கொழும்பு, ஜூன் 03

பாதுகாப்பாக நாட்டுக்கு திரும்பலாம் என்ற உத்தரவாதத்தின்கீழ் நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்களை இலங்கைக்குதிரும்புமாறு அரசு மீண்டும் கோரியுள்ளது.

ஊடக அமைச்சின் செயலாளர் கருணாரட்ன பரணவிதாரன இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளுக்கு சென்ற ஊடகவியலாளர்களை நாட்டுக்கு வரவழைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேபாளத்தில் ஏற்பட்ட புவியதிர்வின் பின்னர் நாடுதிரும்பிய மூன்று இலங்கை ஊடகவியலாளர்களும் தற்போது இலங்கையில் பணியாற்றுகின்றனர்.

இந்த நிலையில் காணாமற்போன மற்றும் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் அரசு உரிய விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

இதன்கீழ் குற்றவாளிகள் விரைவில் சட்டத்துக்கு முன்கொண்டு வரப்படுவர் என்று பரணவிதாரன குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாக வெளியிடப்பட்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர் சம்மேளன பட்டியல்படி உலக சுதந்திர ஊடகத்துறையில் 180 நாடுகளில் இலங்கை 165வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை– கடந்த 26 வருடங்களில் ஊடகவியலாளர் தாக்குதல் தொடர்பில் 138 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 50 ஊடகவியலாளர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர். ஊடகப் பிரதானிகள் உட்பட்ட 80 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# என் மீது குற்றமில்லை மறுக்கின்றார் ஷிரந்தி

கொழும்பு, ஜூன் 03

அரச நிதிகள் எதனையும் தாம் நடத்திச் செல்லும் சிரிலிய சவிய அமைப்புக்கு செலவிடப்பட வில்லை என்று முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிரிலிய சவிய என்ற அரசசார்பற்ற அமைப்பின் மூலம் நிதிமோசடி மேற்கொள்ளப்பட்டதாக கூறி நேற்று முன்தினம் அவர் நிதி மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இதன் பின்னர் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தமது அமைப்பு, விடுதி வசதிகளுடன், சிறுவர்களுக்கான வைத்தியசாலை ஒன்றை அமைத்தல் உட்பட்ட சேவைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் நிதி பெறப்பட்டது.

தமது அமைப்பில் அங்கம் வகித்து வந்த மூன்று பேர் அமைப்பின் நிதியுதவிகள் முடக்கப்பட்டமையால் மரணமானதாக ஷிரந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ஷவின் இந்த அமைப்பின் வங்கிக் கணக்கு சுதுவெல என்ற இடத்திலுள்ள மக்கள் வங்கியில் உள்ளது. இந்தக் கணக்கில் இருந்து காசோலை மூலம் பணத்தை பெறுவதற்காக ஷிரந்தி தமது கடவுச்சீட்டையும் ஏனைய இரண்டு பெண்கள் தமது அடையாள அட்டைகளையும் சமர்ப்பித்துள்ளனர்.

இருப்பினும் போலியான அடையாள அட்டைகளை பயன்படுத்தி பணம் பெறப்பட்டுள்ளதாக ஷிரந்தி மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இதற்கு பதிலளித்துள்ள ஷிரந்தி, தாம் வழங்கிய ஆவணங்கள் சரியாக இருந்த போதும் மக்கள் வங்கியின் கணினியில் பதிவு இடம்பெறும் போது பிழையான பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (த)



# மஹிந்த மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்குக் கடும் முயற்சி

கொழும்பு, ஜூன் 03

ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் ஈடுபட முயற்சித்து வருவதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.



மொனராகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் ரஞ்சித் மத்தும பண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெற்றுக்கொண்டு வீட்டில் இருக்க வேண்டிய முன்னாள் ஜனாதிபதி மீளவும் அரசியலில் ஈடுபட முயுற்சிக்கின்றார். தற்போது விஹாரைகள் தோறும் சென்று அரசியல் செய்கின்றார்.

20ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதையும் அவர் சீர்குலைக்க முயற்சிக்கின்றார்.

புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தல் நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசு ஆட்சியமைக்கும். 20ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆண்டுகளுக்கு முன்னதாகவே முன்வைத்திருந்தது.

பத்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இருந்த போது ஏன் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் 20ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தடுத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வறுத்தலைவிளான் இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று விசாகப் பொங்கல்

## பல ஆண்டுகளின் பின்னர் மக்கள் மகிழ்ச்சியுடன் வழிபாடு

வலி.வடக்கு, ஜூன் 3

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து கடந்த மூன்று மாத கால இடைவெளியில் மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசமான வலி. வடக்கு வறுத்தலைவிளான் தையிட்டி இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் வைகாசி விசாகப் பொங்கலை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றதுடன் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றன.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் மக்கள் மீளச் செல்ல முடியாத நிலையில்காணப்பட்ட இந்தப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தமது ஆலய சுற்றாடலை சுத்தம் செய்து இந்த பூசை வழிபாடுகளை மேற் கொண்டனர்.

ஆலயத்தின் கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்தும் பழுதடைந்தும் கறையான் பிடித்துக் காணப்பட்ட நிலையிலும் கூட மக்கள் தமது ஆலயத்தில் கொண்ட பக்தியின் காரணமாக ஆலயத்தின் விக்கிரகங்கள் எவையும் அற்ற நிலையிலும் கொடிக்கம்பம், பலிபீடம் இருந்த இடத்தில் பொங்கிப் படைத்து தமது வழிபாடுகளை பக்தியுடன் மேற்கொண்டார்கள்.

இந்த வழிபாட்டு நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் சுமார் நூறு பேருக்கு மேல் கலந்து கொண்டார்கள். அத்துடன் பல வருடங்களின் பின்னர் தமது சொந்த இடத்திலுள்ள ஆலய வழிபாடுகளில் ஈடுபட்ட மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக காணப்பட்டார்கள். (ற-86)

# உடுவிலில் வாள்வெட்டு இருவருக்கு படுகாயம்

வலி.வடக்கு, ஜூன் 3

உடுவில் பகுதியில் இடம் பெற்ற வாள் வெட்டில் குடும்பஸ்தர் உட் பட இருவர்படுகாயமுற்றநிலையில்தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் உடுவில் கிழக்கு நாகம்மாள் கோவிலடியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வீட்டில் இருந்த குடும்பஸ்தரை மோட்டார் சைக்கிள் மற்றும் வானில் வந்த ஏழு பேர் வெட்டி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியரான தங்கவேல் கருணாகரன் (வயது-35) என்பவரே தலையிலும், தோள் பட்டையிலும் வெட்டப்பட்டுள்ளார். இவர் கத்துவதைக் கேட்டு ஓடிச் சென்ற அயல் வீட்டுக்காரரான கூலி வேலை செய்யும் குணரத்தினம் கஜேந்திரன் (வயது-25) என்பவர் கைகளில் வெட்டப்பட்டு படுகாயமுற்றுள்ளார்.

குறிப்பிட்ட இருவரும் மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சுன்னாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்கள். (ற-86)

# பல சேனாவை தடை செய்யுமாறு கோருகின்றார் அஸ்வர் எம்.பி.

கொழும்பு, ஜூன் 3

முஸ்லிம்களுக்கு எதிராகவும் முஸ்லிம் சமுகத்தின் உரிமைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து செயற்பட்டு வரும் பொது பல சேனா அமைப்பை அரசு தடைசெய்ய வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுபல சேனா செயலாளர் பொது விவாக, விவாகரத்து சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என கருத்து வெளியிட்டமை தொடர்பில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொது பல சேனா பொது செயலாளர் இந்த நாட்டில் மூன்று பிள்ளைகளுக்கு மேல் பிள்ளை பெற்றுக் கொள்வது தடை செய்ய சட்டம் இயற்ற வேண்டும் என கூறியுள்ளதை முஸ்லிம்கள் கண்டிக்கிறார்கள். முஸ்லிம்களின் வாழ்க்கை நடைமுறைகள் குடும்ப முறை என்பன 'குர்ஆன்'இல் குறிப்பிடப்பட்டுள்ளன .எமது முஸ்லிம் நிக்காஹ்கள் பள்ளிவாசல்களில் பெரும்பாலும் நடைபெறுகின்றன இப்படி இருக்க விவாக விவாகரத்து சட்டத்தை பொதுவான ஒன்றாக்க எவ்வாறு ஒரு இனவாத அமைப்புக்கு கோசம் எழுப்ப முடியும் . இன்று நல்லா ட்சியில் முஸ்லிம் தலைவர்கள் பலர் அங்கம் வகிக்கின்றனர் இந்த விடயங்களை கருத்தில் கொண்டு அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்"– என்று அவர் தெரிவித்தார். (ற-10)

---

### வீதியை

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார்.

திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்ட குறித்தநபர் கொல்லவிளாங்குளத்தில் திருமணமாகி வாழ்ந்து வரும் நிலையில் மேசன் தொழில் புரிந்து வருகின்றார் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மாங்குளம் மற்றும் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ-101, 426)

### அவசரமாக

தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரால் பிரேரிக்கப்படவேண்டிய 5 உறுப்பினர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாது 3 சிவில் அங்கத்தவர்களாகவும், பொது வாழ்வில் அல்லது உயர்தொழிலில் தமக்கென சிறந்த நிலையை ஏற்படுத்திக்கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

அந்தவகையில் மனித உரிமை ஆர்வலரும், சிறுவர் மற்றும் ஆயுத நெருக்கடி விவகாரங்கள் பற்றிய ஐ.நாவின் முன்னாள் செயலாளர் நாயகமுமான ராதிகா குமாரசுவாமி, மேன்முறையீட்டு முன்னாள் தலைவரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான ஏ.டபிள்யூ.இஸட். சலாம் மற்றும் சமூக ஆர்வலரும் சர்வோதய அமைப்பின் ஸ்தாபக தலைவருமான கலாநிதி ஏ.ரீ.ஆரியரட்ன ஆகியோர் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

19 ஆவதுதிருத்தச்சட்டத்துக்குஅமைய பெயர் குறித்து நியமிக்கப்படும் சிவில் பிரதிநிதிகள் மூவரினதும் நியமனங்கள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

இந்நியமனங்களை அவசரமாக அங்கீகரிக்கும் வகையிலேயே இன்று நாடாளுமன்ற விசேட அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மஹிந்த ஆதரவு தரப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ராதிகா குமாரசுவாமி யின் நிய மனம்தொடர்பில்தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளனர் என்று பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார்.

அவருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்புள்ளதாக கருதப்படுகின்றமையால் அவரை சமூகத்தில் கீர்த்தியுள்ள ஒருவராக எம்மால் கருதமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, இன்றைய அமர்வில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சுட்டிக்காட்டியிருந்தது.

### இந்தியர்கள்

கருப்பாயி அம்மாள் ஆகியோரே தொடர்ந்தும் விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர். கருப்பாயி அம்மாளின் முகம் மற்றும் தலைப் பகுதிகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளமையினால் தொடர்ந்தும் மயக்க நிலையில் காணப்படுகின்றார்.

காயமடைந்தவரை யாழில் உள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகளும் சென்று பார்வையிட்டுள்ளனர். (உ-101)

### மாங்குளத்தில்

சிகிச்சை பயனின்றி அங்கு உயிரிழந்தார். காயமடைந்த 18 பயணிகளில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பஸ் சாரதியின் கால் துண்டாடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாங்குளத்தில் இருந்து முறிகண்டி வரையிலான ஏ-9 வீதியில், இவ்வாறான விபத்துகள் அடிக்கடி இடம்பெறுகின்றன. இரவு நேரம் வீதியில் சமிக்ஞை விளக்கு ஏதுமின்றி நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தால் ஏற்கனவே இது போன்றதொரு பயங்கர விபத்து இடம்பெற்றிருந்தது. ஹைஏஸ் வாகனம் ஒன்று விபத்தில் சிக்கிச் சிதைந்தது. அதிலும் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன.

திடீரென வீதியில் நிறுத்தப்படும் வாகனங்கள் குறித்து பொலிஸாரின் அசமந்தமான போக்கே இத்தகைய விபத்துக்களுக்கான காரணம் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (உ-21)

### 14 இந்திய

இராமேஸ்வரம், தங்கச்சி மடம் பகுதியைச் சேர்ந்த குறித்த 14 பேரும் 4 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தலைமன்னார் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட அவர்கள் நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மீன் இனப் பெருக்க காலம் என்பதால் கடந்த ஒன்றரை மாதங்களாக இந்திய மீனவர்கள் தொழிலுக்குச் சென்றிருக்கவில்லை. தற்போது அந்தத் தடைகாலம் நிறைவடைந்த நிலையில் மீண்டும் கடலுக்குள் இறங்கியுள்ளனர். இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 700 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் புறப்பட்ட மீனவர்களில் 4 படகுகளைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டனர். (உ-4)

### மனைவியின்

நல்லையா சிவபாலன்(வயது 40), சிவபாலன் சிவாயினி (வயது 40) ஆகியோரின் உயிரிழந்த சடலங்களே மீட்கப்பட்டுள்ளன. அவர்களுக்குப் பிள்ளைகள் எவரும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சொந்த வீட்டில் வாழ்ந்து வந்த இந்தத் தம்பதிகள் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடே கொலை மற்றும் தற்கொலையில் சென்று முடிந்திருக்கிறது என்று தமது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிவதாகப் பொலிஸார் கூறினர்.

கொடுவாய் கத்தி ஒன்றின் மூலம் மனைவியின் கழுத்தை அறுத்துக் கொலை செய்துவிட்டு, அதே கத்தியால் தனது கழுத்தையும் அறுத்துக்கொண்டு கிணற்றில் விழுந்துள்ளார் கணவர் எனப் பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

அயலவர்கள் தகவல் தந்ததன் அடிப்படையில் பளைப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (உ-21, 101)

### இளம் பெண்ணின்

அவரது இறப்புக்கான காரணம் என்று கூறப்படுகின்றது.

முல்லைத்தீவு, பாண்டியன் குளத்தைச் சேர்ந்த குறித்த யுவதிக்கு சில வருடங்களாக குருதியோடு தொடர்புடைய நோய் கண்டறியப்பட்டது. அதற்காக அவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றிருந்தார். ஆனால் கிரமமாக மருத்துவ சோதனைகளுக்கு அவர் செல்வதில்லை. தனக்கு செய்வினை சூனியம் வைக்கப்பட்டுள்ளதாக அவர் நம்பி வந்துள்ளார். இதனால் நோய்க்கு கிரமமாகச் சிகிச்சை பெறாதிருந்துள்ளார்.

தன் மீது ஏவப்பட்டுள்ள செய்வினை, சூனியத்தை வெட்ட கோயில்களுக்கு அலைந்து திரிந்துள்ளார். அவ்வாறு நேற்று முன்தினம் இருபாலையில் உள்ள கோயில் ஒன்றுக்குச் சென்ற அவர், அங்கு மயங்கி விழுந்தார். உடனடியாகக் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார். எனினும் அதற்கு முன்பாகவே அவரது உயிர் பிரிந்திருந்தது.

இதேபோன்று சுமார் 6 மாதங்களுக்கு முன்னரும் குழந்தை ஒன்று மூட நம்பிக்கை காரணமாக உரிய சிகிச்சையைப் பெறாது உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த யுவதிக்குக் குருதியில் உள்ள எஸ்.எல்.ஈ. எனும் நோயே காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. விசாரணையின் பின்னர் சடலம் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (உ-4)

### சந்தேக

சந்தேகநபர்களின் இரத்த மாதிரியும் அனுப்பப்படவுள்ளன. மரபணுச் சோதனை உள்ளிட்ட சோதனைகள் அங்கு நடத்தப்படவுள்ளன.

சந்தேகநபர்கள் 9 பேரிடமும் இருந்து இரத்த மாதிரிகளைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஊர்காவற்றுறைநீதிவான்செ.லெனின் குமார் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தார். அதனையடுத்து அன்றைய தினமே யாழ். சிறைச்சாலையில் வைத்து மருத்துவ அதிகாரி தலைமையிலான குழு சந்தேக நபர்களது இரத்த மாதிரிகளைப் பெற்றது. (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுராதபுரம் பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஜூன் 03
பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு நேற்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதிவரை அநுராதபுரத்திலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவதற்கு வடமத்திய மாகாணக் கல்வி அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.
பொசன் வாரத்தை முன்னிட்டு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள பொலிஸாரை தங்கவைப்பதற்காக இந்த பாடசாலைகளைப் பயன்படுத்தவுள்ளதாக வடமத்திய மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர் நிர்மலா ஏக்க நாயக்க தெரிவித்தார்.
இதேவேளை– பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் புனித பூமி பகுதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
இரண்டாயிரத்து 300இற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.
இந்தக் காலப்பகுதியில் அநுராதபுரம் நகரை அண்மித்த பகுதிகளில் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் கைதுசெய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (த)

## சரியான நேரத்தில் நோக்கம் கூறுவேன்

*கூறுகிறார் திஸ்ஸ*

எனது நோக்கத்தை சரியான நேரத்தில் வெளிப்படுத்துவேன் என முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள் ளார்.
இப்போது நான் யாருமின்றி நடுவில் இருக்கின்றேன். அரசு கலைக்கப்பட்டதன் பின்னர் சரியான நேரத்தில் எனது நோக்கத்தை வெளிப்படுத்துவேன். எனக்கு தற்போது அரசியல் கட்சியொன்று இல்லை. இருப்பினும், நான் அரசியலிலிருந்து விலகிக் கொள்ளப் போவதில்லை.
சவால்களுக்கு மத்தியில் நான் பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன். நான் எந்தக் கட்சியில் தேர்தலில் போட்டியிடுவேன் என்பதை சரியான நேரத்தில் அறிவிப்பேன்– என்று திஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார். (த)

## கள்வர்களை பாதுகாத்தவரை பிரதமராக்குவதா?

கள்வர்களை பாதுகாத்தவருக்கு பிரதமர் பதவி வழங்க முடியாது என அமைச்சர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.
மொரட்டுவை இந்திபெத்த பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
திருடர்கள், மோசடிக்காரர்களை பாதுகாத்து வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எவ்வாறு பிரதமராக்குவது?
முன்னாள் ஜனாதிபதி ஒவ்வொரு விஹாரைக்கும் சென்று தாம் கள்வர்களைப் பாதுகாத்ததாகவும், மோசடிக் காரர்களுக்கு அடைக்கலம் வழங்கியதாகவும் தெரிவித்து வருகின்றார். இவ்வாறான ஒருவரை மக்கள் ஒருபோதும் பிரதமராக நியமிக்க மாட்டார்கள்.
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால் நாம் புதிய அரசொன்றை அமைப்போம் என ரோஸி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். (த)

# தேர்தலின் பின்னரும் ரணில் தான் பிரதமர்

## [illegible]ஹிந்தவைத் தாக்கும் சஜித்

[illegible]ம்பு, ஜூன் 3
[illegible]ரும் பொதுத் தேர்தலின் பின் [illegible] ரணில் விக்கிரமசிங்கவே [illegible]ன் பிரதமர் என சமுர்த்தி [illegible] வீடமைப்பு அமைச்சர் சஜித் [illegible]தாஸ தெரிவித்துள்ளார்.
[illegible] தேர்தலின் பின்னரும் ரணில் [illegible]மசிங்க பிரதமராகப் பதவி [illegible]த எவராலும் தடுக்க முடியாது. [illegible]சேரியைச் சூறையாடிச் சாப்பிடுவதைத் தவிர்த்து, அதன் நன் [illegible]ா, பயன்கள், வரப்பிரசாதங் [illegible]தாரண மக்களைச் சென்ற [illegible] யுக்மொன்று உருவாகியுள் [illegible]ன்றும் அவர் கூறியுள்ளார்.
இத[illegible]ால் யார் பிரதமர் பதவிக்காகப் பிச்சைப் பாத்திரம் ஏந்தி அலைந்து திரிந்தாலும், பிரதமராக ரணிலே நியமிக்கப்படுவார். யார் ஜனாதிபதி, யாரை பிரதமராக்க வேண்டும் என்பதை மக்கள் ஏற்கனவே தீர்மானித்துள்ளனர்.
கடந்த காலங்களில் அபகீர்த்தியான மோசடிகளில் ஈடுபட்டவர்கள் அரசியல் கட்சிகளை ஆக்கிரமித்துக் கொள்ள எவரும் இடமளிக்கக்கூடாது.
மக்களுக்குச் சேவையாற்றி வளங்களை சரியான முறையில் பங்கீடு செய்து மெய்யான நல்லாட்சியை ஏற்படுத்தவேண்டியது எமது பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.கவின் ஆட்சியை [illegible]விழ்ப்பதே முக்கியம்

## ம[illegible]றிந்த ஆதரவு அணி தெரிவிப்பு

கொ[illegible]ழும்பு, ஜூன் 03
நா[illegible]டுக்கு 20ஆவது திருத்தச் சட்டம் [illegible]ந்தளவு முக்கியமோ அதை வி[illegible] ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்[illegible]யிலிருந்து விரட்டியடிப்பது மிக முக்கியமானதாகும். எனவே, 20இற்கு முன்னர் பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக மஹிந்த ஆதரவு அணி தெரிவித்துள்ளது.
இதேவேளை, மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நேற்று வரை 85 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் எனவும், எதிர்க்கட்சித் தலைவரும் இதில் கையெ[illegible]திடவுள்ளார் என்றும் மஹிந்த [illegible]வு அணி சுட்டிக் காட்டியது.
நா[illegible]ஹென்பிட்டியில் அமைந்துள்ள அபயராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டார்.
புதிய தேர்தல் சீர்திருத்தம் உள்ளடங்கிய 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் பிற்படுத்தும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி அதில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றது. அவர்கள் 20 ஐ காட்டி ரணிலுக்கு எதிராகக் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தடுக்க முயற்சி செய்கின்றனர்.
தற்போதுள்ள சூழ்நிலையில், 20ஐ விட நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவதே முக்கியம். ஆகவே, அதனை நாங்கள் எதிர்வரும் 9ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருவதுடன், நிறைவேற்றப்படுமாயின் ஐ.தே.க. அரசு ஓரங்கட்டப்படுவதுடன் எமக்கு ஐ.ம.சு.மு. அரசை தாபிக்கமுடியும். இதன்போது எம்மால் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியுமாக இருக்கும்"– எனக் குறிப்பிட்டார். (த)

# இரவுத் தபால் ரயிலில் மதுப்பிரியர் அடாவடி

## பயணிகள் தரப்பில் விசனம்

கரணவாய், ஜூன் 03
இரவுத் தபால் ரயிலில் மதுபோதையில் அட்டகாசம் புரிவோரால் அதில் பயணம்செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
தினமும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குமான இரவு தபால் ரயில் சேவை இடம் பெற்று வருகின்றது.
இதில் பயணம்செய்யும் விடுமுறையில் செல்லும் படையினர், கடற்படையினர் மற்றும் பொலிஸார் மதுபோதையில் பயணிப்பதுடன் ரயிலில் மதுபான வகைகளைக் கொண்டு வந்து அருந்துகின்றனர்.
மதுபோதை தலைக்கேற ரயில் பெட்டிகளில் பெரும் சத்தமாகத் தட்டிப் பாட்டுக்கள் பாடி ஆடுவதுடன் தம்மை மறந்த நிலையில் ஆடைகளையும் களைந்து அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர்.
அதுமட்டுமல்லாது பயணிகளுடன் அநாகரிக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதுடன் மதுபோதையில் தமக்குள் மோதிக் கைகலப்பிலும் ஈடுபட்டுவருகின்றனர்.
இவர்களின் இத்தகைய செயற்பாடுகளால் தமது குடும்பங்களுடன் பயணம் செய்யும் பெற்றோர் மற்றும் சிறுவர்கள், யுவதிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதுடன், ரயிலில் பயணம் செய்வதற்கும் அச்சம் கொண்டு தவிர்த்து வருகின்றனர்.
எனேவே எதிர்காலங்களில் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதை தடுப்பதற்கு புகையிரத நிலையத்தினரும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களும் நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனப் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த–108)

# மகேந்திரன் கையெழுத்திடும் பணம் செல்லுபடியாகுமா?

## சந்தேகத்தில் மஹிந்த

கொழும்பு, ஜூன் 3
அர்ஜுன் மகேந்திரன் இலங்கை மத்திய வங்கி ஆளுநராக கையொப்பமிடும் பணம் செல்லுபடியாகுமா என்பது குறித்து சந்தேகம் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
காவத்தை விகாரையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அர்ஜுன் மகேந்திரன் இலங்கை பிரஜை அல்ல, அவர் சிங்கப்பூர் பிரஜை. எனவே எதிர்வரும் நாள்களில் நாணயத்தாள்கள் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.
தற்போதைய அரசின் 100 நாள்களில் நிறைவேற்றப்படாத பல விடயங்கள் காணப்படுகின்றன அதனை நிறைவேற்ற அரசு செயற்பட வேண்டும்.
நல்லாட்சியினால் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கு சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ள செல்ல வேண்டும் என தெரிவித்து, அவ்விடத்தை விட்டு உடனடியாக மஹிந்த வெளியேறினார். (த)

## நீதியமைச்சருடன் சுமந்திரன் பேச்சு

கொழும்பு, ஜூன் 3
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
இவர்களின் சந்திப்பு குறித்து சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இதுவரை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பிலேயே கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.
இதுவரையில் 278 பேர் பயங்கரவாத குற்றச்சாட்டின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த)

# வாழ்க்கைச் செலவுப் படி 1,950 ரூபாவால் அதிகரிப்பு

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி 1,950 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
இதற்கான புதிய சுற்றறிக்கை ஒன்றை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.
அரசினால் தனியார் ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்ச்சிக்கு அமைய கூட்டுறவுப் பணியாளர்களுக்குமான வாழ்க்கை கொடுப்பனவு 1,950 ரூபா உயர்த்தப்பட்டுள்ளது என வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஏற்கனவே கூட்டுறவு பணியாளர்களுக்கு 5,850 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி பணியாளர்களுக்கு அனேகமான சங்கங்களினால் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது புதிதாக அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படியுடன் மொத்தம் 7ஆயிரத்து 800 ரூபாவைப் பணியாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
சங்கங்கள் இலாபத்தில் இயங்கும் பட்சத்தில் மாதாந்த வருமானத்தைக் கொண்டு இந்த புதிய சுற்றறிக்கைக்கு அமைய இந்தக் கொடுப்பனவை வழங்க முடியும்.
இந்த புதிய சுற்றறிக்கைக்கு அமைய இந்த மாதத்தில் இருந்து அதிகரிக்கப்பட்ட 1,950 ரூபாவை கொடுப்பனவை பணியாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.
ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு முப்பது வீத சம்பள உயர்ச்சி நடைமுறைப்படுத்தப்பட்டு வழங்கப்பட்டும் வருகின்றன என்று தெரிவித்தார். (த–17)

# காணிப் பிரச்சினை தீர்வுக்கு விசேட மத்தியஸ்தர் சபை

அச்சுவேலி, ஜூன் 03
காணி தொடர்பான பிரச்சினைக்கு இணக்கத் தீர்வை ஏற்படுத்துவதற்கு வசதியாகப் பிரதேச செயலக பிரிவு ரீதியாக விசேட மத்தியஸ்தர் சபைகள் செயற்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.
1988 ஆம் ஆண்டின் 72 ஆம்இலக்க மத்தியஸ்தர் சபைகள் சட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன.
மத்தியஸ்தர் சபைகளிடம் உள்ளூர் வாசிகள் சமர்ப்பிக்கும் பிணக்குகள் பொருத்தமான முறையில் இரண்டு தரப்பினரின் ஒப்புதலுடனும் இணக்கப்பாடு செய்யப்படுகின்றது. இதன் மூலம் நோக் சிக்க[illegible]னத்துடன் எந்தவிதமான செலவும் இல்லாமல் தீர்வுகாணப்படுவதோடு இரண்டு தரப்பினர் மத்தியிலும் ஏற்படும் பகைமை உணர்வும் இல்லாமல் போகின்றது.
தற்போது செயற்படும் மத்தியஸ்தர் சபைகள் காணிகள் தொடர்பான குடியியல்சார் பிரச்சினைகளை இணக்கப்பட்டுக்குக் கொண்டுவருவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் மற்றும் தொழில்நுட்பச் சிரமங்களை கருத்தில் கொண்டு காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்குப் பொருத்தமான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு புதிய மத்தியஸ்தர் சபைகள் பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக செயற்படவுள்ளன. அதற்கான முன்னேற்பாடுகளை மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழு மேற்கொண்டு வருகின்றது. (த–11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலையின் சொந்தத் தொடரில்
# பல்கலையை பந்தாடியது ஓல்ட்கோல்ட்ஸ்



யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டவையும் யாழ். பல்கல்லக்கழக ஹொக்கி அணியும் இணைந்து நடத்திய ஜெயசீலன் ஞாபகர்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான ஹொக்கித் தொடரின் இறுதியாட்டத்தின் இறுதிநிமிடத்தில் கோலை விளாசி ஓல்ட் கோல்ட்ஸ் வெற்றிபெற்றது.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இரு அணிகளும் பலம்பொருந்திய அணிகளாக இருந்தபோதிலும் பல்கலையின் சொந்தத் தொடரும் சொந்த மைதானமும் என்ற காரணத்தினால் பல்கலைக்குச் சார்பாக சற்று அதிகமான ரசிகர் கூட்டம் இருக்கவே செய்தது. எது எவ்வாறாக இருந்தாலும் இறுதி வரை இலகுவில் சரணடையாத போராட்ட குணமுடைய அணி ஓல்ட் கோல்ட்ஸ். எனவே ஆட்டத்தில் விறுவிறுப்பு அழையா விருந்தாளியாக தானாகத் தொற்றிக் கொள்ள ஆரம்பமானது ஆட்டம். ஆட்டத்தின் முழுநேரமும் இரு அணிகளதும் பின்வரிசை மிகப்பலமாகவே காணப்பட்டது. இவ்வாறான தடுப்பை உடைத்து கோலாக்குவது என்பது மிகக் கடினம். அவ்வாறு பல சவால்களுக்கு மத்தியில் கிடைத்த ஓரிரு வாய்ப்பையும் இரு அணிகளும் மாறிமாறி தவறவிட எந்தவொரு கோலும் பதியப்படாமல் ஆட்டத்தின் முதல்பாதி முடிவடைந்தது.

எதிர்பார்த்ததைப்போல் எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக களமிறங்கினார்கள் வீரர்கள். சுருங்கக் கூறினால் முதல்பாதியின் நிலைமையே இரண்டாவது பாதியிலும் நீடித்தது. நேரங்கள் உருண்டோடிக்கொண்டிருக்கிறது பந்து அங்கும் இங்குமாக அல்லோலகல்லோலப்படுகிறது. ஆனால் முதல் கோலை பதிவு செய்வது யார்? என்ற கேள்வி ஆட்டத்தில் விடை தெரியாத வினாவாக நீடித்துக்கொண்டே சென்றது. ஆட்டம் சமநிலையில்தான் முடியப் போகிறது என்ற முடிவுக்கு சில ரசிகர்கள் வந்துவிட்டார்கள். ஆனபோதிலும் ஏதோ ஒருநம்பிக்கையில் இரு அணிவீரர்களும் தொடர்ந்தும் போரிட்டுக்கொண்டிருந்தார்கள். ஆட்டம் முடிவதற்கு ஒரு நிமிடம் இருக்கையில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் தலைவர் அருண் ஆட்டத்தில் முதலாவதும் முடிவானதுமான கோலை தனது பெயரில் பதிவுசெய்ய– பல்கலையின் சொந்தத் தொடரில் பல்கலையை வீழ்த்தியது ஓல்ட் கோல்ட்ஸ்.

ஆட்ட நாயகனாக ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் தலைவர் அருணும் தொடராட்ட நாயகனாக யாழ். பல்கலைக்கழக அணியின் வீரன் பிரதாப்பும், நன்நடத்தை வீரராக ஓல்ட்கோல்ட்ஸ் அணியின் குகனும் தெரிவானார்கள்.

(ரி–23)



## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 3

***புனித தோமையார் வி.க. தொடர்***

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடந்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

***கொலின்ஸ் வி.க. தொடர்***

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடந்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்படி இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவாந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(ரி–23)

## தேசிய அணியில் இடம்பிடித்த ஜெனுசனுக்கு கல்லூரி சமூகத்தினரால் கௌரவம்



14 வயது இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணியில் இடம் பிடித்து தசகிஸ்தானில் இடம் பெற்ற உதைபந்தாட்ட தொடரில் பங்குபற்றிய சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜெனுசனுக்கு கல்லூரி சமூகத்தினரால் நேற்று திங்கட்கிழமை மகாத்தன வரவேற்பு அளிக்கப் பட்டது.

கல்லூரி முன்றிலில் இருந்து கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்ட ஜெனுசன் தொடர்ந்து கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் வட மாகாண சபை விளையாட்டுத்துறை இணைப்பாளரும் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவருமான இ.ஆர்னல்ட் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ரி–23)

## ஜெக மீட்பரை வீழ்த்தியது பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் ஜெக மீட்பர் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் வலைப்பாடு ஜெக மீட்பர் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மோதிக் கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

(ரி–23)



# துர்க்கா வி.க. அணி அசத்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 3

சிவா விளையாட்டுக்கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக மின்னொளியில் நடத்திய இரு விதமான கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிவா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற 6பேர் பங்குபற்றிய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் துர்க்கா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதிக்கொண்டது. 3 செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் துர்க்கா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

[illegible] ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சந்திரோதயம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் 63:44 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துர்க்கா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

இறுதியாட்டங்களுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார்.

(ரி–23)



பண்டாரிக்குளம் வானவில் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட சங்கக்கார வெற்றிக்கிண்ண துடுப்பாட்டத் தொடரில் வட [illegible] விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தைக் கைப்பற்றியது. இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண [illegible] உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா கலந்து கொண்டார். (ரி–402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் இடைக்காலப் பயிற்றுவிப்பாளராக சாஸ்திரி

பங்களாதேஷ் தொடருக்கான இந்திய அணியின் இடைக்கால பயிற்சியாளராக முன்னாள் தலைவர் ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளையில், அணியின் துணைப் பயிற்சியாளர்களாக சஞ்சய் பாங்கர், பரத் அருண் மற்றும் ஆர்.ஸ்ரீதர் ஆகியோர் தொடருவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான தொடர் இந்த மாதம் பத்தாம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே இந்தியக் கிரிக்கெட்டில் இந்த அதிரடியான அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆனபோதிலும் இந்தியா சிம்பாப்வே தொடருக்கு முன்பதாக (ஜுலை) இந்திய அணியின் நிரந்தரப் பயிற்றுவிப்பாளர் யார் என்று அறிவிக்கப்படும் என்றும் தெரிகிறது. (ரி)

# வெற்றியின் முனைப்பில் நியூஸிலாந்து

இங்கிலாந்து எதிர் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காம்நாள் முடிவில் இங்கிலாந்து அணி இலக்குகள் இழப்பில்லாமல் 44 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. வெற்றி பெறுவதுக்கு இங்கிலாந்துக்கு இன்னமும் 411 ஓட்டங்கள் தேவை.



நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து முதல் இன்னிங்ஸுற்காக 350 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக புரோட்5இலக்குகளையும்அண்டர்சன், வூட் தலா2இலக்குகளையும்ஸ்ரோக்ஸ் ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

முன்னிலை பெறவேண்டும் என்ற முனைப்பில் முதல் இன்னிங்ஸிக்காக களமிறங்கிய இங்கிலாந்தும் 350 ஓட்டங்களையே பெற்றது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக சௌத்தி 4 இலக்குகளையும் போல்ட், கிறைக் தலா 2 இலக்குகளையும் ஹென்றி ஒரு இலக்கையும் கைப் பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய நியூஸிலாந்து ஆரம்பத்தில் சற்றுத் தடுமாறினாலும் குப்தில், மக்கலம், வட்லிங் மூவரும் இணைந்து சரிவை சமன்செய்ய மூன்றாம்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து 338–6 என்ற நிலையில் இருந்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாட களத்தில் வட்லிங் 100 ஓட்டங்களுடனும் கிறைக் 15 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். கிறைக் ஒரு முனையைப் பலப்படுத்தினாலும் சதம்கடந்த வட்லிங்கால் தொடர்ந்தும் நிலைக்க முடியவில்லை. ஆட்டத்தை இடைநிறுத்தும் நோக்கில் நேரத்தின் தேவையை உணர்ந்து வெளுத்து வாங்கினார் சௌத்தி. 166 என்ற சராசரியில் 24 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்தார். இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக 454–8 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார் தலைவர் மக்கலம்.

455 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு களமமிறங்கிய இங்கிலாந்து இலக்குகள் இழப்பில்லாமல் 44 ஓட்டங்களைப் பெற்ற போது மழை தொடர்ந்து குறுக்கிடவே நாளும் நிறைவடைந்தது. ஆட்டத்தின் ஐந்தாம்நாளான இன்று இங்கிலாந்து வெற்றிபெற வேண்டுமானால் மேலதிகமாக இன்னும் 411 ஓட்டங்கள் (90 பந்துப் பரிமாற்றங்களில்) தேவை. (ரி)

# இந்திய அணியை நினைத்து எதிரணிகள் பயப்படவேண்டும்

உலகின் தலைசிறந்த அணியாக திகழ இந்திய அணியிடத்தில் திறமை இருக்கிறது என்று இந்திய டெஸ்ட் தலைவர் விராட் ஹோக்லி தெரிவித்துள்ளார்.



தற்போதைய இந்திய அணியைப் பற்றி ஹோக்லி தெரிவித்ததாவது குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு கிரிக்கெட் உலகில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நான் வலுவாக விரும்புகிறேன். நம்மிடம் திறமை நிறைய இருக்கிறது. இந்தத் திறமையை ஒருங்கிணைத்து எப்படி சிறப்பாக மேலாண்மை செய்வது என்பதைப் பொறுத்து இந்திய அணி ஆதிக்கம் செய்வது அமையும். நான் வீரர்களிடத்தில் வலுவான பிணைப்பை யும் நட்புறுதியையும் ஏற்படுத்த விரும்புகிறேன். ஆண்டில் 250 முதல் 280 நாட்கள் வரை நாங்கள் சேர்ந்தே இருக்கிறோம். எனவே வெளியிலிருந்து பார்ப்பதற்கு அடுத்த 10 ஆண்டுகளில் இந்த அணி உண்மையில் ஒற்றுமையான ஒரு அணி என்று அனைவருக்கும் உணர்த்தும் ஒரு சூழலை ஏற்படுத்த விரும்புகிறேன்.

இதில் ஒருவரும் தங்களுக்காக விளையாடுவதில்லை. அனைவரும் அனைவருக்குமாக விளையாடுகிறோம். இதுதான் என்னுடைய தீர்க்கமான பார்வை. களத்தில் ஆஸ்திரேலிய அணியினரின் செயல்பாடுகளைக் கவனிக்கும் போது, இவர்களை வீழ்த்த நாம் மிகச்சிறப்பாக ஆட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையை இந்திய அணி அடைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியை வீழ்த்துவதை ஒரு சவாலாக எதிரணியினர் கருத வேண்டும்– என்றார்.(ரி)

# இங்கிலாந்து மண் கௌவும்

THE ASHES



இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகள் மோதப் போகும் ஆஷஸ் தொட ரில் இங்கிலாந்து 5–0 என்று மீண் டும் தோல்வியடையும் என்று ஆஸ் திரேலிய பந்துவீச்சாளர் கிளென் மெக்ராத் தெரிவித்துள்ளார். கடந்த ஆஷஸ் தொடரில் இங்கி லாந்து 5–0 என்ற கணக்கில் ஆஸ்தி ரேலியாவிடம் தொடரை பறிகொடுத்தது. இதைத் தொடர்ந்து நடைபெறவுள்ள தொடரிலும் இங்கிலாந்து அதேமாதிரி தோல்வியடையும் என்று தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடக்கும் ஆஷஸ் தொடர் எதிர்வரும் யூலை மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடரைப் பற்றி மெக்ராத் தெரிவித்ததாவது ஆஸ்திரேலியாவுடன் மோதவிரும்பும் அணிகள் கடுமையான மோதலுக்குத் தயாராக இருக்க வேண்டும்.

இங்கிலாந்திடம் நம்பிக்கை மட் டுமே உள்ளது. அதனால் உலகக் கிண்ணத்தில் அது பரிதாபமாக வெளியேற்றப்பட்டது. ஆனால் ஆஸ்திரேலிய வீரர்கள் மிகவும் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தி வருகிறார்கள். இங்கிலாந்து அணியை ஆஸ்திரேலிய மண்ணில் சந்திக்க ஆர்வமாக உள்ளேன். கடந்த தொடரின் போது 5–0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வென்றி ருந்தது. எனவே இந்த முறையும் சேர்த்தால் அது 10–0 என்றாகி விடும். இதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். (ரி)

# பாக். அரசுமீது அதிருப்தி

தற்கொலைப்படை தாக்குதலை வெளிப்படையாக தெரிவித்த பாகிஸ்தான் அரசு மீது பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அதிருப்தி தெரிவித்துள்ளது.

கடந்த 2009இல் லாகூரில், இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சென்ற பஸ் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவம் நடந்து 6 ஆண்டுகள் கழித்து, முதல் அணியாக சிம்பாப்வே, பாகிஸ்தான் சென்றது. சிம்பாப்வே பாகிஸ்தான் தொடரின் இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் லாகூரின் கார்டிப் மைதானத்தில் நடந்து கொண்டிருந்த போது, மைதானத்திற்குள் பயங்கரவாதி ஒருவர் நுழையமுற்பட்டார். ஆனால், இந்த தற்கொலைப்படை தாக்குதலை பாகிஸ்தான் மைதானத்திலிருந்து சிறிது தூரத்துக்கு அப்பால் வைத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் முறியடித்தனர். இதில் மூன்று உத்தியோகத்தர்கள் சாவடைந்தனர். இந்தத்தாக்குதல் பாகிஸ்தான் – சிம்பாப்வே ஆட்டத்தை குழப்புவதுக்காகவே நடத்தப்பட்டது என்று பாகிஸ்தான் அரசு அறிவித்திருந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பாகிஸ்தான் அரசுமீது அதிருப்தி தெரிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் சிம்பாப்வே அணி நாடு திரும்பிய பின்னர் தற்கொலைப்படை சம்பவம் குறித்து பாகிஸ்தான் அரசுடன் பேச எண்ணியிருந்தோம். அதற்குள் இந்தச் சம்பவத்தை வெளியிட்டுவிட்டார்கள். கடின முயற்சிக்குப்பின் சிம் பாப்வே அணியை விளையாட அழைத்து வந்தோம். இந்த முயற்சி எதிர்காலத்தில் வீணாகி விடுமோ என்று பயமாக உள்ளது என்றார். (ரி)

# என்னை மறந்துவிடுவார்கள் -நெஹ்ரா




இந்திய அணிக்கான தெரிவில் என்னை பரிசீலிக்காதது ஏமாற்றம் தருகிறது. ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக செயற்பட்ட போதிலும் அடுத்த 10 நாட்களில் என்னை மறந்து விடுவார்கள் என்று நெஹ்ரா தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஆஷஸ் நெஹ்ரா கடந்த 2011 உலகக் கிண்ண தொடரின் 'அரையிறுதியில் பாகிஸ்தானுக்கு எதிராக பங்கேற்ற பின்னர் சர்வதேச அணியில் இடம் கிடைக்காது ஏமாற்றமடைந்து வருகிறார். உள்ளூர் மற்றும் ஐ.பி.எல். தொடர் களில் கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பாக செயல்பட்ட போதும், இவரை ஒருநாள் அல்லது ரி–20 தொடருக்கான அணியில் சேர்ப்பது குறித்து பரிசீலிப்பது கிடையாது.

தனது புறக்கணிப்பு தொடர்பாக நெஹ்ரா தெரிவித்ததா வது கடந்த 3 முதல் 5 ஆண்டு கள் உண்மையிலேயே கடினமா னது. ஒருநாள் மற்றும் ரி–20 இந்திய அணிக்காக பல்வேறு பந்து வீச்சாளர்களை பரிசீலனை செய்து பார்க்கின்றனர். ஆனால் 2008 முதல் 2011 வரையில் அதிக இலக்குகளை வீழ்த்திய தரவரிசைப் பட்டியலில் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் இருந்தேன். இன்னும் விளையாடிக் கொண்டுதான் உள்ளேன். ஆனால் என்னை தேர்வுசெய்ய மறுக்கின்றனர். உண்மை யில் என்ன தான் நடக்கின்றது என்றே தெரியவில்லை. இதை எடுத்துச் சொல்லவும் யாரும் இல்லை. நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடரில் டோனி முன்னிலையில் சிறப்பாக வீசியமை திருப்தி தருகிறது. இந்திய அணிக்குள் இடம்பிடிக்க இது ஒரு சிறப்பான அறிகுறி– என்றார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடால் - ஜோகோவிக் கலக்கலான காலிறுதியில்

சர்வதேச தரம்வாய்ந்த ரென்னிஸ்தொடராக அங்கீகரிக்கப்பட்ட பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் நடால் மற்றும் ஜோகோவிக் மோதவுள்ளமை ரென்னிஸ் உலகில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் ஆட்டமாக மாறியுள்ளது.

காலிறுதிக்கு தகுதி காணும் ஆட்டத்தில் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள சேர்பியாவின் ஜோகோவிக் மற்றும் தரவரிசைப் பட்டியலில் இருபதாம் இடத்திலுள்ள பிரான்ஸைச்சேர்ந்த கேஸ்கியூட் மோதினர். இதில் ஜோகோவிக் 61, 62, 63 என்ற நேர்செற் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார். நுழைந்தார்.

காலிறுதிக்கு தகுதி காணும் மற்றொரு பிரான்ஸின் தொடரில் நடப்பு சம்பியனான ரபேல் நடால் அமெரிக்காவின் சோக் பலப்பரீட்சை நடத்தினர். இதில் நடால் 63, 61, 57, 62 என்ற செற் கணக்கில் சோக்கை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். இதனால் காலிறுதியில் நடால் மற்றும் ஜொகோவிக் பலப்பரீட்சை நடத்துகின்றனர். காலிறுதியில் நடால் தோல்வியடைந்தால் நடப்புச் சம்பியன் அந்தஸ்து பறிபோகும். அதே நேரத்தில் ஜோகோவிக் தோல்வியடைந்தால் முதல்தர வீரர் தொடரை விட்டு வெளியேறினார் என்ற சங்கடமான நிலைமை உருவாகும் இதனால் ஆட்டம் அனல் பறக்கும் என்று எதிர்பார்க்கபபடுகிறது. (ரி)




## காலிறுதியில் கால்பதித்தது சானியா ஜோடி



பிரான்சில் தலைநகர் பரீஸில் நடைபெற்றுவரும் பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் காலிறுதி சுற்றுக்கு சானியா – ஹிங்கிஸ் ஜோடி முன் னேறியது. பெண்கள் இரட்டையர் பிரிவு தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள சானியா–ஹிங்கிஸ் ஜோடி தரப்படுத்தலில 14வது இடத்தில் உள்ள இத்தாலிய ஜோடி கரின் க்னாப் மற்றும் ராபர்ட்டா வின்சியை 6–1, 6–4 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது. (ரி)

## கடலில் காலத்தை செலவிடும் கிறிஸ்ரியானோ ரொனால்டோ





பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது ஓய்வு நேரத்தை நண்பர்களுடன் கடலில் செலவிடுகிறார்.

நீண்ட நாட்களாக ரியல்மாட்ரிட் அணிக்காக விளையாடி வரும் ரொனால்டோவுக்கு தற்போது தான் ஓய்வு கிடைத்துள்ளது. தனது ஓய்வை குதூகலமாக களிக்க விரும்பிய ரொனால்டோ பிரான்ஸ் நாட்டுக்கு சென்று அங்குள்ள. செயின்ட் ரோபஸ் என்ற கடற்கரை நகரில் நண்பர்களுடன் முகாமிட்டுள்ளார். பகல் வேளைகளில் சொகுசுக் கப்பல்களில் ரொனால்டோவும் அவரது நண்பர்களும் கடலில் ரோந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ரி)

Brighten Economics Hall
342, Stanly Rd. (Near D.M.I)
GAQ / BA Part I
ENGLISH
Revision & Paper
R.MAHESWARAN
(BA.Dip.in Eng., Sp.Trd.Eng)
Sat/Sun 8-9/1-2/ 5.30-7.00
Tamil K.
BA (Jaffna) Final-2-3
6/6/15 Sat

# டோனியின் வாழ்க்கை படமாவதுக்கு டோனிக்கு 210 கோடி




டோனியின் வாழ்க்கையை பற்றிய திரைப்படம் தயாரிக்கப்பட்டுவரும் நிலையில் திரைப்பட உரிமத்துக்காக டோனி இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 210 கோடி கேட்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனியின் வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்ட திரைப்படத்தை பிரபல இயக்குநர் நீரஜ் பாண்டே தயாரித்துவருகிறார். டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து படம் எடுக்கப்பட்டுள்ளதால் அதற்காக மட்டும் டோனிக்கு கிட்டத்தட்ட 47 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளதாம். இந்த நிலையில் படத்தில் வரும் லாபத்திலும் டோனி பங்குகேட்பதால் டோனிக்கு கிட்டத்தட்ட 210 கோடியை கொடுக்க வேண்டும் என்ற நிலைமை தோன்றியுள்ளது. எனினும் இது தொடர்பான இறுதி முடிவு என்னமும் எட்டப்பட வில்லை. (ரி)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
SAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

Knowledge Universe
British College of International Studies
IELTS -Life Skills
IELTS-AC/G
16 Yrs in Teaching
I-Spoken (International)
MBA(London) ஆசிரியரிடம் கற்கலாம்.
Web: http://edu.kugroup.info
KU Education - 0777302882
626,1/1,K.K.S Rd,Jaffna

Nation Popular Travels & Tours
கோடை கால விடுமுறையை கொண்டாட
RETURN TICKETS FARE
nation popular travels & tours
லண்டன் : 70,700/-
ஜேர்மன் : 58,900/-
பிரான்ஸ் : 61,300/-
சுவிஸ் : 64,200/-
சென்னை : 22,000/-
மதுரை : 17,000/-
Jaffna : 0214 920 920 Vavuniya : 0244 930 830
Colombo : 0114 375 357 Mobile : 0773083820

Management Trainee
An organization having more than one hundred employees looking for young and dynamic personnel with a strong extra curricular activities and pleasing personalities to join our team.
Required qualifications:
- minimum GCE A/L Commerce stream.
- Professional qualifications in accounting.
- Should be computer Literate.
- Experience will be an added advantages.
- Excellent attitude.
- Ability to work independently.
Salary negotiable depending on their experience.
If you are interested and person with creative mind, you are the right person for us. E-mail your C.V now to:
cborecruit@gmail.com
(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

உதயன்

03 ஜூன் 2015 புதன்கிழமை


> பதினாறு வயதில் அழகாய் இருப்பதில் உனக்குப் பெருமை ஒன்றும் இல்லை. அறுபது வயதில் அழகாய் இருந்தால் அது உன் ஆன்மாவின் தனிப்பட்ட சாதனை.
>
> — *மேரிஸ்டோப்ஸ்*

# உதயன் 30ஆவது ஆண்டு நிறைவு

## மாணவர் சிறுகதைப் போட்டி தொடர்பான தரிசிப்பு


*இணுவையூர்*
சிதம்பரதிருச்செந்திநாதன்


படைப்பாற்றல் என்பது சகலருக்கும் அவசியமாகத்தேவைப்படும் ஒன்றாகும். அது மட்டுமல்ல அது ஏதோ விதத்தில் அவர்களுள்ளும் மறை பொருளாக இருப்பதுண்டு. எனினும் அதனை சரியாக இனங்கண்டு உரிய விதத்தில் வளர்த்தெடுக்க எல்லோராலும் முடிவதில்லை.

ஒருவர் அதனை இனம் கண்டாலும் தொடர்ச்சியான செயற்பாடுகளால் சரியான துணைகளைப் பெற்று வளர்ச்சிப்பாதையில் செல்வதில்லை.

மாணவர்கள் மத்தியில் படைப்பாற்றலை சரியாக இனம் கண்டு ஊக்குவிக்கும் செயற்பாடு முன்பள்ளியில் தொடங்கி பின்னர் பாடசாலைகள் ஊடாக நடைபெறுகின்றன. (நடைபெற வேண்டும் என்பதே நடைமுறை) அவ்வாறு இருந்தால்தான் கட்டம் கட்டமாக தமது படைப்பாற்றல் தளத்தை விரிவுபடுத்தி மாணவர்கள் தமது நிலைகளில் உச்சமடைவதோடு மட்டுமல்லாது, மேலே மேலே என போய்க் கொண்டிருக்க முடியும்.

படைப்பாற்றல் என்பது ஒரே தடத்தில் நின்று சுற்றுவதையோ அரைத்தமாவை அரைப்பதையோ ஊக்குவிக்காத படைப்பாற்றல் உள்ள ஒருவரால்தான் சிந்தனையின் எல்லைகளை முழுவீச்சுடன் விரிவாக்க முடியும். புத்தம் புதுமையாக புதியனவற்றைக் கண்டு பிடிக்க இயலும்.

எந்த ஒன்றையும் ஒரே மாதிரியான விதத்தில் பார்க்காமல் வித்தியாசமான முறைகளில் பார்க்கவும், விவாதிக்கவும் முனைவதன் ஊடாக புதிய எண்ணக் கருக்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறான செயற்பாடு சம்பந்தப்பட்டவரின் ஆளுமைகளை வளர்த்தெடுக்கவும் அவருக்கான நிலைகளை மேம்படுத்தவும் வழி சமைக்கும்.

படைப்பாற்றலில் இவ்வாறான வீச்செல்லை சிந்தனை விரிவுக்கும் மாத்திரமல்ல அதனூடாக கிளப்பப்படும் கற்பனைத் திறனை வளர்க்கவும் பிரச்சினைகளை அடையாளம் காணவும் அதற்கான தீர்வைப் பெறவும் பிற்காலத்தில் உதவும் ஓர் அம்சமாகக் கருதப்படுகிறது.

இவ்வாறான படைப்பாற்றலை வளர்த்தெடுப்பதற்கான பலவிதமான செயற்பாடுகள் மாணவர்களின் ஆரம்பக்கல்வியில் இருந்தே கல்வித் தளங்களில் கல்வியாளர்களால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

கலை, இலக்கியம், விளையாட்டு, சமூகதுறைகளாக அவை வகுக்கப்பட்டு பல்வேறு செயற்திட்டங்கள் ஊடாக கல்வியாளர்களால் மாணவர்கள் மத்தியில் விதைத்து வளர்க்கப்படு கின்றன.

பொருத்தமான கருத்தரங்குகள், செயல் அமர்வுகள், செயன்முறைப் பயிற்சிகள் என்பவற்றின் ஊடாக நடைபெறும் இவற்றினால் மாணவர்களின் படைப்பாற்றல் செழுமைப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் மாணவர்களின் கலை இலக்கியப் படைப்பாற்றலை வளர்க்க பாடசாலைகளில் நடைபெறும் தமிழ்த்தினத்தோடு தொடர்புபட்ட கலை இலக்கியப் போட்டிகளைக் குறிப்பிடலாம்.

எனினும் பாடசாலைச் சமூகம் நடத்தும் இந்த வகைப்போட்டிகளை தவிர்த்துப் பார்த்தால் பாடசாலைக்கு வெளியே பாடசாலை மாணவர்களுக்கு கலை இலக்கிய செயற்பாடுகள் மந்தகதியில்தான் உள்ளன. சிலவகை சமய நிறுவனங்கள் சமூக அமைப்புக்கள் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்துகின்றன. அவை கூட மட்டுப்படுத்தப்பட்ட சில அம்சங்களில் மாத்திரம்தான்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் உதயன் பத்திரிகை நிறுவனம் தனது30ஆவது அகவை பூர்த்திக்காக மாணவர்கள் மத்தியில் ஒரு கலை இலக்கியப் போட்டியை நடத்தி முடித்து மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கியுள்ளது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் என வகைப்பட்டதாக வடமாகாணத்தை மையப்படுத்தி மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் முடிவுகளை வெளியிட்டது.

இந்தப்போட்டிகளில் சிறுகதைப் போட்டிக்கு நடுவராக பணியாற்றும் சந்தர்ப்பம் இந்தக் கட்டுரையாளருக்குக் கிடைத்தது. மொத்தமாக மூன்று பேர் நடுவர்களாகப் பணியாற்றினோம். ஏனைய இருவர் மதிப்புக்குரிய கே.ஆர்.டேவிட், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோராவர்.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்களின் சிறுகதை ஆற்றலை படித்துப்பார்க்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமை ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அந்தக் கதைகளைப் படித்துப் பார்த்து நாங்கள் மூவரும் சேர்ந்து எடுத்த பொதுவான முடிவுகளின் படியே பரிசுகள் வழங்கப்பட்டன.







எனினும் கதைகளைப் படித்ததன் ஊடாக எனக்குள் உருவான சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். எனவே தயவு செய்து கீழே தரப்படும் கருத்துக்கள் என்னுடைய கருத்து மட்டும்தான் என்பதையும் நடுவர்களின் பொதுவான கருத்து அல்ல என்பதையும் தயவுடன் புரிந்துகொள்ளவும்.

பொதுவாக மாணவர்கள் பல்வேறு தளங்களில் நின்று தமது சிறுகதைகளைப் படைத்துள்ளனர். ஆற்றலும் அனுபவமும் கொண்ட படைப்பாளிகள் போல மாணவர்கள் சிலர் சிறுகதை எழுதியிருந்தாலும் கணிசமானோர் அவ்வாறு வெற்றி பெறவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

சிறுகதையை வடிவமைப்பதிலும் மொழி நடையிலும் வேறுபாடுகள் இருந்தாலும் மெச்சக் கூடிய ஒரு விடயம் மாணவர்கள் எடுத்துக்கொண்ட கதைகளுக்கான பாடுபொருள், உள்ளடக்கம் சமகாலத்தில் முக்கியம் பெற்ற பல விடயங்களை கொண்டதாக இருந்தமை கவனத்துக்குரியது.

போதைப்பொருள் பாவனை
முப்பதுவருட போரின் விளைவுகள்
சமகால தண்ணீர்ப் பிரச்சினை (ஓயில் கலந்த நீர்)
வெளிநாட்டு மோகம் அதன் ஏமாற்றம்
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் ராக்கிங்
சிறுவர் துஷ்பிரயோகம்
முறையற்ற காதல் அதனால் ஏமாற்றப்படும் மாணவிகள்
தொலைபேசி இணையத்தள தொடர்புகளால் ஏற்படும் பிரச்சினைகள்
சீதனப்பிரச்சினைசாதிப்பிரச்சினை
கல்வியின் முக்கியத்துவம்

போன்ற விடயங்களை பருமட்டாக எடுத்துக்கொள்ளலாம். இத்தகைய பிரச்சினைகளை எடுத்துக் கூறும் மாணவர்கள், மாணவர்கள் படைப்புக்களுக்கே உரித்தான தீர்வும் தீர்வு சொல்லும் முறைமையையும் கொண்டுள்ளமையையும் கவனிக்கலாம்.

எனினும் அவர்கள் எடுத்தாண்ட கருப்பொருள்கள் பெரும்பாலும் செவி வழிச்செய்திகளாகவும் பத்திரிகைச் செய்திகளாகவும் இருப்பதால் அவைகள் முடக்கப்பட்ட படைப்புக்களாக அமைந்துவிட்டன. குறிப்பாக அனுபவம் சார்ந்த படைப்பாக அவை அமையாத படியால் அவற்றின் வீச்சுக்கள் ஒரு எல்லையைத் தாண்டவில்லை. அது காரணமாக செய்திகளாகவோ, செய்திக் கட்டுரைகளாகவோ அவை அமைந்துவிட்டன.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் எண்ணங்களும் அவர்களின் தீர்மானங்களும் ஒரு இஞ்சினியராக ஒரு டொக்டராக மாத்திரம் வரவேண்டும் (இந்த இரண்டு துறைகளும் மட்டும்) என்ற கருத்தே பலகதைகளில் வலியுறுத்தப்படுகின்றன. புறநடையாக ஆசிரியராக வரவேண்டும் என்பது ஒருசில கதைகளில் உள்ளது. இது மாணவர்களின் மனநிலையை வெளிப்படுத்துகின்றது.

அனேகமான கதைகளில் கோயில் மணி ஒலிப்பதும், கொக்கரக்கோ என கோழி கூவுவதும் என்ற மாதிரியான சடங்காகிப்போய்விட்ட வசனங்களுடன் கதைகள் தொடங்குகின்றன.

பெண்களின் சித்திரிப்புக்கூட, ஒரே மாதிரியான குணாம்சமுள்ள வடிவமுள்ள பெண்களாகவே சித்திரிக்கப்படுகின்றன. பொட்டு திருநீற்றுப்பூச்சு அள்ளி முடிந்த குடும்பி என்ற வசனங்கள்.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக சொல்லப்படவேண்டிய ஒருவிடயம் உள்ளது. இந்தக் கட்டுரை எழுதவேண்டிய அவசியமும் அதனால்தான் எழுந்தது. அதுதான் சிறுகதையின் மொழி நடை.

ஈழத்துசிறுகதை நீண்ட வரலாறு கொண்டது. எனினும் ஆரம்ப காலத்துச் சிறு கதைகளில் ஈழத்தைக் களமாகக்கொண்ட கதைகளாக அவை படைக்கப்படாமல் அவை தமிழகத்தைக் களமாகக் கொண்ட கதைகளாக படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதாவது சென்னைமெரினா கடற்கரையில் காதலர்கள் சந்திப்பதாக எங்கள் படைப்பாளிகள் எழுதினார்கள். இலங்கை முற்போக்கு எழுத்தாளர்கள், அந்த மாயையை உடைத்து எங்கள் சூழலை எங்கள் பிரச்சினை பேசும் கதைகளை உருவாக்கினார்கள்.

(B பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் 30 ஆவது ஆண்டு நிறைவு...

(A பக்கத் தொடர்ச்சி.....)

எனினும் தமிழ் தேசிய உணர்வுமிக்க தமிழ் மண் கதைகள் 1970,1980களின் பின்னரே இங்கு முனைப்புப் பெற்றன.

இங்குநான் குறிப்பிடவருவது எங்கள் மாண வர்களின் சிறுகதை மொழிநடை மிகவும் இக்கட்டான ஒருநிலையில் உள்ளது. முதலா வது அவர்களின் எழுத்துப்பிழை. அனேக மானோர் ஏராளமான எழுத்துப் பிழை களுடன் கதைகளை எழுதியுள்ளனர்.

மாணவர்களின் கதைகளை வழிநடத்திய ஆசிரியர்கள் உறுதிப்படுத்திய அதிபர்கள் இந்தப்படைப்புக்களை படித்துப் பார்க்கவில் லையா? என்ற கேள்வியும் எழுவதை தடுக்க முடியவில்லை.

தாய்மொழிக்கல்வி கற்கும் மாணவர்கள்,தம் தாய் மொழியில் இவ்வாறான எழுத்துப் பிழைகள் விடுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா? கல்விச் சமூகமும் பிள்ளைகளின் பெற்றோரும் இது தொடர்பாக அக்கறை எடுக்கவேண்டும்.

அடுத்த விடயம் சிறுகதைகளில்மாணவர்கள் கையாளும்பேச்சு வழக்கு. பெரும்பாலான மாணவர்கள் கையாளும் பேச்சு வழக்கு எங்கள் மண்ணுக்கோ எங்கள் உயிருக்கோ எங்கள் சுவாசத்துக்கோ உரியதல்ல.

நீங்கள் ஊகிப்பது சரிதான். பெரும்பாலான பேச்சு மொழி இந்தியத் தமிழில்தான் சித்திரிக் கப்படுகிறது. இதற்கான பிரதான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே. மாணவர்கள் (ஏன் பெரும்பாலான குடும்பங்கள் கூட)பார்ப் பது தமிழ் சினிமாவும், தமிழக தொலைக் காட்சி தொடர்நாடகங்களையும்தான். அதன் விளைவுதான் இந்திய பேச்சுவழக்கில் எழுது வது.

எமது சொந்த பேச்சுநடை மாணவர்களுக்கு தெரிந்தாலும், இந்தியத் தமிழில் எழுதினால் தான் அது சரியாகவரும் என்றவொரு மாயையும் மாணவர்களுக்கு இருப்பதாகப் படுகிறது.

மாணவச் செல்வங்களிடம் இருந்து இத் தகைய ஒரு நிலை மாற்றப்படவேண்டும். எங்கள் மண்ணின் கதைகளை எங்கள் சொந்தப் பேச்சு மொழியில் எங்கள் மாண வர்கள் படைப்புக்களைப் படைக்க சம்பந் தப்பட்ட எல்லோரும் கண்டிப்பாக உழைக்க வேண்டும். முக்கியமாக தமிழ் ஆசிரியர்கள், மேலதிகமாக மாணவர்களின் பெற்றோர், நலன் விரும்பிகள்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி மாணவர்களின் படைப்புத்திறனை ஊக்கப்படுத்தவும் மேம் படுத்தவும் தொடக்கப்பட்ட இந்த கலை இலக்கியப் போட்டிச் செயற்பாடுகள் மேலும் வலுப்பெறவும் சிறக்கவும் மாணவர்களின் வாசிக்கும் திறனை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

படைப்புத்திறன் சிறப்புப்பெற மாணவர்கள் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை தொடர் செயற்பாட்டின் மூலம் மேம்படுத்த வேண்டும். வாசிப்புத்திறன் மேம்பட சிந்தனைத்திறனும் விரிவு பெறும். புதிய புதுமையான சிந்தனைச் சிதறல்கள் மாணவர்கள்மத்தியில் கிளப்பப்படும். இந்தச் செயற்பாட்டின் மூலம் படைப்பாக்கத் துக்குத்தேவையான கற்பனைத் திறனும் மெருகூட்டப்படும். அதனூடாக எழுத்து முயற்சியும் சிறப்புப்பெறும். சிறுகதை படைக்க விரும்பும் மாணவர்கள், தகுதியானவர்களின் துணையுடன் சிறந்த சிறுகதை தொகுப்புக்களையும் சிறுகதை தொடர்பான இலக்கிய நூல்களையும் தொடர்ச்சியாக படிப்பதன் ஊடாக தரமான சிறுகதைகளை படைக்க முடியும். அதன் ஊடாக மாணவர்கள் செழுமை பெறுவதுடன் எங்கள் தமிழ் மொழியும் சிறப்புப்பெறும்.



LORD OF THE RELOAD
Dialog
சுப்பர் அதிஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
ஒன்பதாம் வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
56 57 40 69 37
உங்கள் இலக்கங்களை அறிந்திட, பரிசுகளைப் பெற்றிட
#121# ஐ டயல் செய்யுங்கள்.
Dialog

இதோ வெளிவந்துவிட்டது

ஜூன் மாத அறிவுப் பயணத்தில்

04 – தந்தையின் தோழமை வெற்றிக்கு வழிவகுக்கும்!
05 – ஒரு முழுமையான வரலாற்று விளக்கம்
07 – தந்தையர் தின கவிதைப் பதிவுகள்
08 – நீங்கள் நலமா?
10 – உறவுகள் சுகமானவை
13 – தந்தையே எமது முதலெழுத்து
16 – வாசிப்பே கல்விக்கான வழிகாட்டி.
17 – விளங்கினால் சிரிப்பு வரும்
18 – கண்ணுக்கு விருந்தளித்த கூடலும் பிரிவும்
19 – அதிர்ஷ்டம்!
20 – சிவகாமியின் சபதம்
22 – குறுக்கெழுத்துப் போட்டி
23 – ஆயுளை அதிகரிக்க ஒரே வழி யோகாசனமே
24 – கேள்விகளே சாவிகள்!
25 – பெண் சுயதொழில் முயற்சியில் ஒரு படிக்கல்
27 – அத்தை
30 – இசைப்பிரியாவுடன் ஒரு கலைப்பொழுது
32 – பொது அறிவுப் போட்டித் தொடர்
34 – தேசிய மட்டத்தில் சாதிக்கத்துடிக்கும்...
36 – 21 ஆவது ஆண்டில் வவுனியா கலைமா முன்பள்ளி
37 – வலியில்லாப் பிரசவம் சாத்தியமாகின்றது
38 – விவாத மேடை
40 – பெற்றோர் – பிள்ளைகளின் உறவை மேம்படுத்த...
41 – சித்திரம் பேசுதடி கண்ணம்மா
42 – நமது குழந்தைகள் நல்லமுறையில் கற்கவேண்டும்...
43 – வண்ணக் கோலங்கள்
44 – சகலகலா வல்லி ஆதித்யா...
48 – பெண்கள் மீதான வன்முறைகள்... களைந்தெறியுங்கள்
50 – ஜூன் மாத இராசிபலன்
51 – அம்மா – மனைவி வேறுபாடு
52 – பிள்ளைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்
53 – இடப்பெயர்வும் துயரமும் தொடர்ந்தபோதிலும்...
54 – இறைவனை நம்பியோர் கைவிடப்படார்
55 – அழகாகத் தோற்றமளிக்க வேண்டுமா?
56 – நந்தவனப் பூக்கள்
58 – இருட்டில் வைத்த குறி
60 – உருளைக்கிழங்கு கப் பேஸ்ரி
61 – தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்
65 – மழலைகள் பூங்கா
66 – பிறந்தநாள் வாழ்த்துகள்

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு குடும்ப சஞ்சிகை




இலவச இணைப்பிதழ் வெட்டுத்துணிகளில் அலங்காரப் படைப்புக்கள்

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் பிரதிகளுக்கு முந்துங்கள்

தந்தையர் தின சிறப்பிதழ்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு: 0718 628379 / 011 5737
வடமாகாண தொடர்புகளுக்கு : 077 6569617 / 077 2772726

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










## கண்ணாடிப்பூக்கள் கவிதை நூல் வெளியீடு

வவுனியா தமிழ்ச் சங்கமும், செந்தணல் வெளியீட்டகமும், கனகராயன்குளம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடத்திய மாணவி பிரபாகரன் – வேதிகா எழுதிய கண்ணாடிப்பூக்கள் கவிதைநூல் வெளியீடு 24ஆம் திகதி ஞாயிற்று கிழமை கனகராயன் குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் பி.ப 2 மணிக்கு தமிழருவி த.சிவ குமாரன் தலைமையில் ஆரம்பமானது. முதல் நிகழ்வாக அண்மையில் படு கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியா மற்றும் சரண்யா ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நினைவுப் படங் களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது. ஆசியுரையை நெடுங்கேணி பிரதேச செயலாளர் பரந்தாமன் நிகழ்த்த. வாழ்த்துரையை வவுனியா தமிழ்ச்சங் கத்தின் தலைவர் எஸ் . என் .ஜீ . நாதன் நிகழ்த்தினார்.

தொடக்கவுரையை வவுனியா கல்வி யியற் கல்லூரி விரிவுரையாளர் பார்த் தீபன் நிகழ்த்த வெளியீட்டுரையை கவி ஞர் வன்னியூர் செந்தூரன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து நூலின் முதற் பிரதியை பிரதேச செயலாளர் பரந்தா மன், பாடசாலை பிரதி அதிபர் சுகந்தன், வவுனியா தமிழ்ச் சங்க செயலாளர் தமிழருவி சிவகுமாரன் ஆகியோர் வெளி யிட்டு வைக்க கனகராயன்குளம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தின் பிரித்தானிய கிளையின் முக்கியஸ் தர் சதானந்தன் பெற்றுக்கொண்டார். நூலின் நயப்புரையை கவிஞர் கோபிநாத் நிகழ்த்தினார்.

சிறப்புரையை படைப்பாளிகள் உலகத் தின் தலைவர் க.ஜங்கரனும் பெண் எழுத் தாளர்கள் தொடர்பான சிறப்புக் கருத் துரையை தமிழ்மணி மேழிக்குமரனும் நிகழ்த்தினார்கள். (421)

# அளவையைப் பேறாக்கிய ஆசார சீலர் அமரர் செல்லையா உபாத்தியாயர்



இலங்கையின் பொன்னொச்சி எனப் போற்றப்படும் அளவெட்டி, மாருதப்புர வீக வல்லி காலத்துக்கு முன்னதாகவே வளம்கொழிக்கும் கிராமமாக மன்னர் களால் வாழ்த்தப் பெற்றுள்ளது. கார ணம் தானியமும் புண்ணியமும் சேர்ந்து விளைவதனால் போலும். இத்தகு பேறதனால் ஆன்மிகத்தோடு அத்தனை கலைகளும் வளர்ந்தன. குறிப்பாக அளவைக்கு ஒரு விசேட பண்பாடு மேலோங்கியிருந்தது. அது எதுவெனில் ஆயகலைகளின் சாராம்சம் அளவெட் டியில் செறிந்திருந்தமையே அதுவா கும். அந்த மண்ணில் வானசாஸ்திரம் தொடக்கம் தேனிசை வரையும் கனதி யும் காத்திரமும் வனப்பும் பொலிந் திருந்தது. இவையாவற்றுக்கும் ஆதார சுருதியாக ஆன்மிகம் விளைந்திருந் தது. இதன் பிரகாரம் ஆசாரசீலர்கள் பலரை அளவையம்பதி பேறாகப் பெற் றிருக்கிறது. அத்தகு ஆசாரசீலர் களில் ஒருவர்தான் அளவையூர் முத்தையா செல்லையா உபாத்தியாயர் ஆவார். அளவெட்டியின் வரலாற்றை ஆதியில் இருந்து அந்தம் வரை சொல்லக்கூடிய வரலாற்று விற்பன்னராகத் திகழ்ந்த இவர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி யின் கனிஷ்ட பிரிவு அதிபராக விளங்கிய வர். தமிழ் இலக்கியம், திருமுறை, புராண படனம், பண்ணிசை, ஆகம விதிமுறை, திருவாசகம், சேக்கிழார் பெரிய புராணம், கந்தபுராணம், கைலைப்புராணம், பிள்ளை யார் பெருங்கதை ஆகியவற்றில் புலமையும் தேர்ச்சியும் பெற்ற இவருக்கு, கும்பழா வளை விநாயகரே வழிகாட்டியாக என்றும் விளங்கினார்.

மெல்லிய புன் சிரிப்பும், மேனியில் வெண்ணீறும், பொன்னிற உருத்திராக்கமும் பொலிந்த வேட்டி சால்வையும், வெள்ளி தோறும் பஜனை, வேண்டிய சரியைத் தொண்டும், கள்ளமிலா நெஞ்சமதால், கந்தபுராணம் இனித்ததே. பண் சுமந்த மண் என்பதால் பைரவி, ஷண்முகப் பிரியா, மோகனம், தோடி, ஹரஹரப்பிரியா, கல்யாணி, கேதார கௌளை, பந்துவராளி, ஹிந்தோளம், பூபாளம், அரிகாம்போதி ஆதியாம் இரா கங்களில் புராணம் வாசிப்பதில் நன்கு பரீட் சயமானவர் இவரேயாவார் ஆன்மிகப் பாதையில் பலன் கருதாது எவர் பயணித்தாலும் அவர் ஒரு ஆசாரசீலராக மிளிர்வார் என்பது அனுபவம் கற்றுத் தந்த பாடம். அமரர் செல்லையா உபாத்தியாயர் அவர்களும், ஆன்மிகம் தோற்காத பாதையில் பய ணித்தமையால் அடுத்த சந்ததிக்கு ஓர் எடுத்துக் காட்டாகத் தன்னைப் பேறாக்கிய ஓர் ஆசார சீலர் என்று எம்மால் வணங்க முடியும். சைவ சமயத்தின் ஆசாரம் என்பது, சிவசின்னங்கள் தொனிக்க வேண்டும். திருநீறு, சந்தனம், உருத்திராக் கம், வேட்டி, சால்வை மிளிரும்படியாக மேனி விளங்க வேண்டும். நானே அவன், அவனே நானாக யாவுமே பரப்பிரம்மமாக எல் லாம் அவன் செயலாகக் கருதுகின்ற சுபாவ முடைய வராகி செயல்களனைத்தையும் ஆற்றிட வேண்டும். இவ்வாறு எல்லாம் கும்பழா வளையான் வழிவிடுவான் என்று அடிக்கடி தன்னைப் பிள்ளையாரிடமே ஒப் படைத்து வெற்றிகாண்பது இவரது சிறந்த பண்பாகும். மாணவ பரம்பரையை உருவாக் கியதோடு நில்லாது, மருத நிலங்களில் தானிய முத்துக்களை விளைவித்து சாதனை புரிந்த கோமகன் என்ற பெருமையும் பெற்ற வர் ஆவார். சிறந்த ஒரு வேளாண்மை வித் தகர். மருத நில விளைச்சலின் சொந்தக் காரர்.




அளவெட்டி எனும் கிராமத்தின் எழில் சிறப்பை உலகறியச் செய்வதற்கான அத்தனை முயற்சிகளையும் ஆவணப்படுத்தியவர். அவற்றில் அமரர்களான சிவஸ்ரீ முருமுகையர், சிவஸ்ரீ இராமலிங்க ஐயர், சிவஸ்ரீ சுப்பையர் மற்றும் லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதன் ஸ்ரீகாந்தா மயில்வாகனம் உபாத்தியாயர், கணித மேதை சிதம்பரப்பிள்ளை , சகலாகம வித்தகர் விஸ்வநாதன், ஜோதிட வல்லுநர் சின்னப்பு உபாத்தியாயர், துங்கப்பரிகாரி, அம்பலவாணப்பரிகாரி, வைத்திலிங் கப்பரி காரி, கந்தையாப்பரி காரி, கண்பரிகாரி, முத்தையா விகடகவி, மாணிக்கப் பண்டிதர், சிவ சம்புப் பண்டிதர், நாக லிங்கப் பண்டிதர், வி.பொன் னம்பலம், தா.பொன்னம் பலம், ஆர்ட்.பொன்னம்பலம், பத்தினாதர், லோப் பையா , அருளம்பலம், சேதுப்பிள்ளையக்கர், சேவையர் அம்மா, ஆச்சி முத்தக்கா, கற் கண்டுப் பொன் னம்மா, சுந்தரம்பிள்ளை உபாத்தியாயர், நாகநாதர் என ஒரு வர லாற்று ஆவணத்துக்குச் சொந்தக் காரராகிய இவரின் சமூகப் பணியே புதிய அரச அதிபரின் வரவேற்புக் கூட்டத்தில் இவரைப் பேச வைத்த தெனலாம். நல்லதோர் ஆத்மா 2015.05.02 இல் கும்பழாவளைப் பிள்ளையாரின் திரு வடிகளில் பேறடைந்தது. அளவெட்டி அவரின் சேவைக்காய்த் தலை வணங்குகிறது.

## காலம் கடந்தும் வாழும் கலைஞன் நூல் வெளியீடு

அமரர் கலைவாரிதி கலாபூசணம் இரத்தின சிங்கம் கிருஷ்ணதுரை எழுதிய காலம் கடந்தும் வாழும் கலைஞன் நூல் வெளி யாகியுள்ளது. தான் வாழும் காலத்தில் எழுதிய இந்த நூல் இவரது 31 ஆம் நாள் நினைவு நாள் (15.05.2015) அன்று வெளி யிடப்பட்டுள்ளது. சுவை நிறைந்த இந்த நூல் வெளிநாட்டில் வடிவமைக்கப்பட்டு சங்கானை திருமொழி அச்சகத்தில் அச்சிடப்பட்டு யாவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை வெளியாகிய நினைவு நூல்களுக்கு ஓர் வித்தியாசமான நூலாக வெளியிடப்பட் டுள்ளது. ஊரில் வாழும் முதியவர்களில் சுவைமிக்க செய்திகளும் சேர்க்கப்பட்டுள் ளது. அமரர் இ.கிருஷ்ணதுரை சிறந்த நடி கராவார். பெண்வேசம் இவருக்கு மிக மிகப் பொருத்தமாகும். இவர் வாழும் காலத்தில் கலாபூசணம், கலைவாரிதி ஆகிய பட்டங்களைப்பெற்று யாவராலும் பாராட் டப்பட்டவராவார். வாழ்ந்த காலம் மிகக் குறுகிய காலமானாலும் நூற்றுக் கணக் கான நாடகங்களை நடித்தவராவார். (28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பைக் கொன்ற காகம்





ஒரு மரக்கிளையில் ஆணும் பெண்ணுமாக இரண்டுகாகங்கள் கூடுகட்டி வாழ்ந்து வந்தன. அந்தக் காகங்கள், அந்த மரக்கிளையில் நெடுங் காலமாகத் தங்கியிருந்து வந்தன. அந்த மரத்தில் இருந்த ஒரு பொந்துக்குள் கரும்பாம்பு ஒன்று புதிதாக வந்து சேர்ந்தது. அந்தக் கரும்பாம்பு, பெண் காகம் இடுகின்ற முட்டைகளையெல்லாம் ஒன்று விடாமல் குடித்துக் கொண்டிருந்தது. காகங்களால் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடிய வில்லை.

ஆண் காகம் தனது உயிர் நண்பனான நரியொன் றிடம் போய் யோசனை கேட்டது. அந்தப் பாம்பைக் கொல்வதற்கு நான் ஒரு வழி சொல்கிறேன். அரசியாரின் குளியல றைக் குள் பறந்து போ, அவர்கள் குளிக்கும் போது கழற்றி வைக்கும் நகைகளில் ஒன் றைக் கொண்டு வந்து பொந்தில் போட்டு விடு. பின்னர் என்ன நடக் கிறது என்று பார் என்றது நரி. இதைக் கேட்ட காகம் அரண்மனைக்குப் பறந்து சென்றது. அரசி அப்போது தான் நகை களைக் கழற்றி வைத்து விட்டுக் குளிக்கத் தொடங்கினாள். காகம் குளியலைக்குள் சென்று ஒரு நகை யைக் கௌவிக் கொண்டு பறந்தது. அதைக் கண்ட அரசி சத்த மிட்டாள். உடனே வேலையாள்கள் காகத் தைப் பின் தொடர்ந்து ஓடிச் சென்றனர்.



காகம் பறந்து சென்று பாம்பு இருந்த பொந்துக் குள் நகையைப் போட்டு விட்டு வேக மாகப் பறந்து சென்றது. பின் தொடர்ந்து வந்த வேலைக் காரர்கள், அதனைக் கண்டார்கள். உடனே வேகமாக ஓடி வந்து அந்த மரப் பொந்தைப் பிளந் தார்கள். உள்ளே இருந்த பாம்பு சீறிக் கொண்டு வெளியில் வந்தது. வேலைக் காரர் களில் ஒருவன், தனது வாளால் அந் தப் பாம்மை இரு துண்டாக வெட்டிப் போட் டான். பின்னர் அவர்கள் பொந்துக்குள் இருந்த நகையை எடுத்துக் கொண்டு போய் அரசியிடம் கொடுத்தார்கள். அதன் பின்னர் காகங்கள் எந்தவித மான தொல்லைகளும் இல்லாமல் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து மேலும் பல நாள்கள் இன்பமாக வாழ்ந்தன.

# புதிய ஆத்திசூடி

- அச்சம் தவிர்
சமுதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் ஏற்படும் அர்த்தமற்ற பயங்களை நீக்கு
- ஆண்மை தவறேல்
ஆண்பாலுக்குரிய தன்மைகளில் தவறக் கூடாது.
- இளைத்தல் இகழ்ச்சி
உடலாலும் மனதாலும் தளர்வுறுதல் மிகவும் இழிவானதாகும்
- ஈகைத் திறன்
பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு உதவுதல் திறனான செயல்
- உடலினை உறுதி செய்
நமது உடம்பைத் திடமுள்ளதாக ஆக்கி வை
- ஊண் மிக விரும்பேல்
உணவு வகைகளை அதிகம் விரும்பாதே

ம.துஷாகா
கிளிநொச்சி ம.வி

# நமது மந்திரிகள்

மூளை– பிரதம மந்திரி

தலை– கல்வி அமைச்சர்

மூக்கு– சுகாதரத்துறை அமைச்சர்

பல் – கிராமியத்துறை அமைச்சர்

கண்– வெளியுறவுத்துறை அமைச்சர்

எலும்பு– பாதுகாப்பு அமைச்சர்

தோல்– மனித வள மேம்பாட்டு அமைச்சர்

கை– தொழில் துறை அமைச்சர்

வயிறு –உணவுத்துறை அமைச்சர்

கால் –போக்குவரத்து அமைச்சர்

நே.தமிழன்
கிளிநொச்சி ம.வி



# மேரி கியூரி

தனது மகள் குண்டூசியை விளையாட் டின் போது விழுங்கி விட்டதைக் கூடக் கவனிக்காமல் ஆழ்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் மேரி கியூரி. அவ்வளவு தீவிரமாக ஆராய்ச்சி செய்ததால் தான் ரேடியம் தொடர்பான அவருடைய ஆய்வு இன்றைக்கும் மருத்துவத் துறை யில் மிகப் பெரிய சாதனையாக இருக் கிறது. எத்தனையோ புற்று நோயாளி களின் சிகிச்சைக்கும் உதவுகிறது.

மேரி கியூரியின் இயற்பெயர் மரியா ஸக்லோடோவ்ஸ்கா. அவர். அப் பொழுது போலாந்து நாட்டின் தலை நகராக இருந்த வார்சாவில், 1867 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் திகதி பிறந்தார். மேரியை வீட்டில் மான்யா என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள். மேரியின் தாயின் பெயர் ப்லோணிஸ் லாவா, தந்தையின் பெயர் விளாடிஸ் லாவ் ஸ்க்லோடோவ்ஸ்கா. இவர் களுக்கு சோபியா, யோசப், புரோன்யா, ஹெலினா, என நான்கு குழந்தைகள் இருந்தனர் ஐந்தாவதாகப் பிறந்த கடைசிக் குழந்தை தான் மேரி கியூரி.

வித்தியாசாகர்
கிளிநொச்சி

# எனை வாழவைத்த தெய்வம் வாழ்க! வாழ்க!

இருட்டு அறையில் இருந்த என்னை
இழுத்தெடுத்தவள் என் அன்னை
பசியால் கலங்கிய என் கண்ணை – கண்டு
பத்திரமாய் பாலூட்டியவள் அன்னை

சிற்பிக்குள் முத்து இருப்பதாக – கர்ப்ப காலத்தில்
என்னை முத்தாக உவமித்தாள் – அவள்
கை பிடித்து என்னை பாலர் பாடசாலையில் சேர்த்தவள்
காத்திருக்கிறாள் இன்று என் கல்லூரி வாசலில்

கனவிலே கடவுள் வந்து கனவைக் கலைத்தாலும்
நேரிலே கடவுள் வந்து வரம் தந்தாலும்
நான் நம்பமாட்டேன் அது கடவுள் என்று
காரணம்....
என்னை வாழவைத்த கடவுள் என் அன்னை மட்டுமே

பா.ஜக்சாயினி,
கொக்குவில் இந்துக் கல்லூரி





கொ.அன்ரனி நீசான்
சென் ஜோன்ஸ் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# கலைக்கோலங்களால் உள்ளத்தை வருடிய வைகாசித் திங்கள் பொற்தூறல்

திருமறைக்கலா மன்றத்தின் பொன்விழா ஆண்டையொட்டி மாதாந்தம் நடைபெற்று வரும் நிகழ்ச்சித் தொடராக வைகாசித் திங்கள் பொற்தூறல் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர் கவிஞர் சோ.பத்மநாதன் (பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர்), சிறப்பு விருந்தினர் சாம்சன் பிரான்ஸ் (திருமறைக் கலாமன்ற நீண்டகால உறுப்பினரும், லண்டன் ஐ.பி.சி.ஊடக சேவை தமிழ்ப்பகுதி கலை இயக்குநரும்) ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஆசிரியர் ஜெயகாந்தன் இறை வணக்கப்பாடலையும், திருமதி விமலானந்தன் நீற்றா பிரியதர்சினி வரவேற்புரையையும் வழங்கினர்.

தமிழிசைகளில் மனங்களை லயிக்க வைக்கும் இசைகளில் ஒன்றான மாதேவி கலைவாணியின் கைகளில் உள்ள வீணையின் இசைச் சங்கமமான விரலிசை நாதம் நிகழ்வு நேர்த்தியாகவும் பிரமிப்பூட்டுவதாகவும் உள்ளத்தைச் சுகமாக வருடிச் சென்றது.

சாகித்ய வீணாலயா இயக்குநர் திருமதி விதுஷா கோபி கிருஷ்ணாவின் 20 மாணவக்கலைஞர்கள் 20 வீணைகளு டன் அரங்கை ஆக்கிரமித்து சுமார் 40 நிமிட நேரம் வீணைகளுடன் விரல்களால் பேசியமை சிறப்பாக இருந்தது.

பிரதம விருந்தினர் உரையாற்றும்போது போர்க்காலத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் நீண்ட இடைவெளி இருந்த போது எமது உரிமை மற்றும் சமாதான வேட்கையை கலைகள்தான் அங்கு எடுத்துச் சென்றன. எதுதேவையோ, இளம் சமுதாயத்தை எதில் ஆற்றுப்படுத்த வேண்டுமோ அதை இந்தக் கலை நிறுவனம் செவ்வனே செய்து வரு கிறது. தமிழின் பல கலைப்பகுதிகளையும் கையாண்டு வருகிறது என பாராட்டிப் பேசினார். எம்மைத் தமிழர் என்று காட்டும் அடையாளங்கள், முகவரிகள், பண்பாட்டுச் சுவடுகளைப் பேணுவது காலத்தின் தேவை யாகும் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஐ.பி.சி.கலை இயக்குநர் சாம்சன், சாகித்ய வீணாலயா திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா, உரும்பிராய் கலைக் கோயில் இயக்குநர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌர விக்கப்பட்டனர். இறுதியாக உரும்பிராய் கலைக் கோயில் மாணவர்களின் சீதா கவர்ணம் நாட்டிய நாடகம் இடம்பெற்றது. மொத்தத்தில் வைகாசிப் பொற்தூறல் இசை, நாட்டிய நாடக தூறல்களால் அரங்கு நிறைந்த கலா ரசிகர்களை நனைத்து சிலிர்ப்பூட்டியது.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

# உயில் என்னும் கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக உதவியாளர் சு.நவநீதகிருஸ்ணன் எழுதிய உயில் என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த திங்கட்கிழமை பகல் யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் மண்டபத்தில் நூலாசிரியர் தலைமையில் நடை பெற்றது.

மங்கல விளக்கை எஸ்சிவபாதசுந்தரம் மற்றும் குணாளன் ஆகியவர்கள் ஏற்றி வைத்தார்கள்.

இந் நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணப் பல் கலைக்கழக பிரதம நூலகர் ஸ்ரீஸ்காந்தலட்சுமி அரு ளானந்தம் நிகழ்த்தினார். நூல் அறிமுகவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா நிகழ்த் தினார்.

நூலின் முதற்பிரதியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற் குணராசா வெளியிட்டு வைக்க யாழ்ப்பாணப் மாநகர பொது நூலகத்தின் முன்னாள் நூலகர் எஸ்.தனபால சிங்கம் பெற்றுக் கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ் துறை தலைவரும் ஓய்வு நிலை பேராசிரியருமான எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தினார். (86)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிகர்கள்

ராஜராஜன்

உலகமே ஒரு நாடக மேடை. மனிதர்கள் அனைவருமே அங்கு நடிக்கும் நடிகர்கள். இவ்வாறு சரியாகக் கூறினார் அறிஞர் ஒருவர். இது முழுக்க முழுக்க உண்மைதான். இன்றைய மனிதர்கள் நன்றாகவே நடிக்கத் தெரிந்து கொண்டு விட்டார்கள். சந்தர்ப்பம், சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடிப்பது அவர்களுக்குக் கைவந்த கலை. இதனால்தான் இன்று ஒருவனைப் பார்த்து அவன் நல்லவனா அல்லது கெட்டவனா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

வெளிநாடுகளில் பிச்சைக்காரர்களைப் போன்று வேடமிட்டு பிச்சையெடுத்துப் பிழைக் கும் சிலர் பெரும் கோடீஸ்வரர்கள் என்பது தெரியவந்துள்ளது. கந்தல் ஆடைகளுடன் தமது நடிப்புத் திறமையையும் பயன்படுத்தி கோடிக்கணக்கான ரூபாய்களைக் குவித்ததிறமைசாலிகள் இவர்கள்





வேறு சிலர் அப்பாவிகள் போன்று காட்சி தருவார்கள்.எவர் எதைக் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ளும்படியாக இவர்கள் நடந்து கொள்வார்கள். ஆனால் அமைதியாக இருந்தே இவர்கள் செய்யும் வேலைகள் பயங்கரமானவையாகக் காணப்படும். இவர்களா இதைச் செய்தார்கள் என்று மற்றவர்கள் நினைக்கும் அளவுக்கு இவர் களின் செயற்பாடுகள் அமைந்திருக்கும். இவர்கள் சிறந்த நடிகர்களுக்கான பரிசு பெறுவதற்குத் தகுதியானவர்கள்.

நடிகர்கள் என்று கூறும் போது அன்றைய நாடக மேடைகளில் கொடி கட்டிப் பறந்தவர்களும் பின்னர் சினிமாத்துறையில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தவர்களும் நினைவுக்கு வருகின்றனர். முன்னரெல்லாம் நாடக மேடைகளிலிருந்து சினிமாத்துறைக்கு வந்தவர்களே அதிகமாகக் காணப் பட்டனர். பின்னர் இந்த வழக்கம் மெல்ல மெல்ல இல்லாதொழிந்தது. இதற்கு நாடகங்கள் வழக் கொழிந்து போனமை முக்கிய காரணமாகும். மேலும் தற்போது சினிமாத்துறைக்கு நடிகர் கள் நேரடியாகவே தேர்வு செய்யப்படுகின்றனர். நடிகர்கள் மீதான மோகம் மக்களிடம் இன்னமும் குறைந்த பாடாகத் தெரியவில்லை.

நிஜத்தில் வாழுகின்ற மனிதர்களை சினிமாவில் தமது நடிப்பு மூலமாக நடிகர்கள் வெளிக்கொணர்வது ஒரு சிறந்த கலையாகும். அதிலும் மிகைப்படாத நடிப்பின் மூலமாகத் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்ற நடிகர்களுக்கு எப்போதுமே இரசிகர்களின் ஆதரவு அமோகமாக இருக்கும். இரத்தக் கண்ணீர் என்ற திரைப்படம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. இதில் தொழுநோயாளியின் வேடத்தில் நடித்த எம்.ஆர். ராதாவின் நடிப்பு இன்றளவும் பேசப்படுகின்றது.

சினிமா நடிகர்கள் மட்டுமல்ல எம்மவர்களில் சிலரும் சிறந்த நடிகர்கள்தான். இதுவொரு உண்மைச் சம்பவமாகும். பல வருடங் களுக்கு முன்னர் ஒரு நாள் மத்தியான வேளை நகர் ஒன்றை அண்டிய தெரிந்தவர்களின் வீட்டுக்கு ஒருவர் வந்தார். முகத்தில் சோகம் கப்பிய நிலையில் காணப்பட்ட அவரை அங்கு வந்ததன் காரணத்தை வீட்டில் இருந்தவர்கள் விசாரித்தனர். தமது ஊரில் வசித்த ஒருவர் திடீரென இறந்துவிட்டதாகவும், தாம் சவப் பெட்டியை வாங்குவதற்கென அங்கு வந்ததாகவும் ஆனால் பணம் சிறிது குறைவதால் அதனை வாங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மேலும் ஊருக்குச் சென்று பணத்தைப் பெற்று மீண்டும் இங்கு வருவது தாமதத்தை ஏற்படுத்தி விடுமென்பதால் அந்தப் பணத்தை அவர்களைத் தருமாறும் பின்னர் திருப்பித் தந்து விடுவதாகவும் அந்த நபர் உணர்ச்சி பொங்கக் கூறினார். இறந்ததாகத் தெரிவிக் கப்பட்டவர் அந்த வீட்டைச் சேர்ந்தவர்களுக்கு ஒருவகையில் சொந்தமெனத் தெரிய வந்ததால் வீட்டுக்காரரும், மனைவியும் வந்தவரை உபசரிக்க ஆரம்பித்தனர். சாவு வீட்டிலிருந்து வந்தவர் என்பதால் வீட்டு வெளி விறாந்தையில் அவரை அமரவைத்து வாழை இலையில் உணவு படைத்தனர். வந்தவர் வயிறார உண்டுவிட்டுப் பணத்தையும் பெற்றுச் சென்றுவிட்டார். அவர் சென்ற பின்னர் வீட்டுக்காரரும், மனைவியும் அரக்கப் பரக்கப் புறப்பட்டு சாவு வீட்டுக்குப் பயணமானார்கள். அவர்கள் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டவரின் வீட்டை நெருங்கிய போது சாவு வீட்டுக்குரிய அறிகுறி எதையும் காண முடியவில்லை. வீடு மாறி வந்துவிட்டோமோ என்ற சந்தேகம்கூட அவர்களின் மனதில் எழுந்தது. அப்போது இறந்ததாகத் தெரிவிக் கப்பட்டவர் தற்செயலாக வெளியே வந்தார். இவர்களைக் கண்டதும் அங்கு வருகை தந்ததன் நோக்கத்தைக் கேட்டார். இவர்களுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. பின்னர் ஒருவாறு நடந்ததைக் கூறினார்கள். அந்த ஆசாமி ஓர் ஏமாற்றுப் பேர்வழி என்பது பின்னர்தான் தெரியவந்தது. அந்த நபரின் நடிப்பில் தாம் ஏமாந்ததை அந்தத் தம்பதியினர் இன்றும் மறக்காது நினைவில் வைத்திருக்கின்றனர்.

இவ்வாறுதான் தேர்ந்த நடிகர்கள் பலர் எம் மத்தியில் உலவுகின்றனர். இவர்கள் தொழில் முறை நடிகர்களை விடவும் ஒரு படி உயர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றனர்.

ஆகவேதான் இந்த உலகமே ஒரு நாடக மேடை என்பதையும், நாம் அனைவருமே அந்த மேடையில் நடிக்கும் நடிகர்கள் என்பதையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.





## கருகும் மொட்டுக்கள் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விகார அமைச்சின் அனுசரணையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கலாசார விழிப்புணர்வு வார நிகழ்ச்சித் திட்டத்தில் புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநர்களான எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாழ்கையில் புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களின் நடிப்பில் பெண்கள் வன்முறைக்கெதிரான கருகும் மொட்டுக்கள் விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நிகழ்த்தப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளான தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை, மல்லாகம் மகாவித்தியாலயம், அள வெட்டி அருணோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இவ் ஆற்றுகை இடம்பெற்றது.

தெருவெளி ஆற்றுகையின் ஆற்றுகையாளர்களாக கு.தவேன்சன், உ.கரிஸ், பா.ஜெயரூபன், யே.சானுஜன், தி.திஸ்னுகன், தி.தனுஜன், ரிதுசன், சிந்துஜன், ஸ்ரீ.சாதுசன், கு.சரூஜன், சி.சிவானுஜன், குபேரன், குயின்சன் ஆகியோர் நடித்துள்ளார்கள். பாடகர்களாக ஜெயவர்னன், ப.தக்சாந் ஆகியோரும் இசை வாத்தியக் கலைஞர்களாக ( டொல்கி) யதுசன், திவாகர், (ஓகன்) அபிசேக் ஆகியோரும் செயற்பட்டுள்ளார்கள்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளை ஞர் விகார அமைச்சினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பெண்கள் வன்முறைக்கெதிரான விழிப் புணர்வு வாரத்துக்கு வலுசேர்கும் வகையிலும் பாடசாலை பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இவ் ஆற்றுகை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் இதை யாரும் மறுக்க முடியாது. இதை அனுபவத்தில் உணர்ந்தவர்கள் பலர். இப்படி ஒரு நல்ல குடும்பம் தனக்கு அமையவில்லையே என மறுக்கும் உள்ளங்கள் இல்லாமல் இல்லை. மனித இனத்துக்கு முக்கியமான சந்தோஷம் நல்ல குடும்பச் சூழல்தான். கைநிறைய சம்பாதிக்கும் பலரும் ஏங்குவது அன்புக்குத்தானே கொடுக்க கொடுக்க ஆனந்தம் தருவது அன்பு. இனிமையான கதகதப்பான குடும்பச் சூழல் இந்த ஏக்கத்தை நிவர்த்தி செய்துவிடும். நம்பிக்கை, புரிதல்,கருணை ஆகியவற்றை அள்ளித் தரும். சொர்க்கத்தை இறந்த பின் தான் அடைய வேண்டும் எனும் ஏக்கம் இல்லாமல் வாழும் வீடே சொர்க்கமாகி பிரச்சினைகள் எதுவந்தாலும் சுமுகமாக தீர்க்க வழி கொடுக்கும். இப்படிப் பட்ட சூழலில் வளரும் குழந்தைகள் வளர்ச்சி அளவிட முடியாமல் அதீதமாகவே இருக்கும்.

**பெற்றோரின் பங்கு:**

பிரிவோம் சந்திப்போம் படத்தில் ஒரு வசனம், உலக அழகியும், உலக அழகனுமே திருமணம் செய்து கொண்டாலும், ஒருவர் முகத்தை ஒருவர் எத்தனை நாள் பார்த்துக்கொண்டிருப்பார்கள், சலிப்பூட்டும் கணவன் – மனைவி வாழும் வாழ்க்கையின் பூரணம் அவர்கள் அன்பால் பிறந்த குழந்தை.

குழந்தையை பெற்றால் மட்டும் போதாது. குமுதமோ, குங்குமமோ நினைவில்லை பிள்ளை வளர்ப்புத் தொடர் வருகிறது. அதில் குறிப்பிட்டிருப்பதுபோல் பிள்ளையை முறையாக வளர்க்க மனம் இருந்தால் மட்டுமே குழந்தை பெற்றுக் கொள்வது நலம். தன் காலில் நின்று முன்னேறும் விதமாகவும், பொறுப்புள்ள குடிமகனாகவும் குழந்தையை வளர்க்கும் மிகப் பெரிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது.

சொத்து கொடுக்கிறோமோ இல்லையோ அன்பையும், கல்வியையும் கொடுத்தால் போதும். அதீத அன்பு ஆளையே அழித்துவிடும். கவனம் தேவை. அன்பு என்றால் தன்னலமற்ற அம்மாவின் அன்பைத்தானே அனைவரும் சொல்வோம்.

அன்னைதான் குழந்தையின் முதல் ஆசிரியை. இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் பிள்ளை மேல்




இருக்கும் அளவுக்கு மிஞ்சிய பாசத்தினால் சில அம்மாக்கள் கண்டிப்பு இல்லாமல், தகப்பனிடமும் சொல் லாமல் பொத்தி பொத்தி வளர்த்து கெடுத்து விடுவார்கள். கணவனும் மனைவியும் நன்கு புரிந்து பேசி குழந்தை வளர்ப்பில் ஈடுபட வேண்டும்.

அன்னையின் அன்பு, தந்தை கற்றுக்கொடுக்கும் உலக அறிவு இரண்டும் முறையாக சரியாக குழந்தைக்கு கிடைத்தால் அதன் வளர்ச்சி மேல் சந்தேகமே வேண்டாம். அன்னை, தந்தை இருவரும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். நல்லது கெட்டது சொல்லிக்கொடுப்பது, ஒழுங்கு நடவடிக்கைகளின் வரைமுறைகள், அன்பு என கலந்தே வளர்க்க வேண்டும்.

**பெற்றோர்-குழந்தை உறவு முறை:**

தனக்கு கிடைக்காததும் தன் பிள்ளைக்கு கிடைக்க வேண்டும் என நினைப்பவர்கள் தான் பெற்றோர்கள். சிறு குழந்தையிலிருந்து வளர்த்து வருபவர்கள். அதுவரை தன் பெற்றோர்கள் தான் உலகம் என நினைத்து, மகிழ்ந்து, பிரமித்து பார்த்து வந்த பிள்ளை பதின்ம வயதில் மாறிப் போவதேன் காரணம் வேறொன்றும் பெரிதாக இல்லை. தனக்கான அடையாளத்தை எதிர்பார்க்கும் வயது இது. பெற்றோரை விட்டு ஓடிப்போய் தன் அடையாளத்தை காட்ட வேண்டும் என நினைப்பார்கள். ஆனால் அவர்களை சார்ந்திருப்பது இதற்கு தடையாக இருப்பதாக நினைப்பார்கள். தனது நண்பர்களையே அதிகம் சார்ந்து இருப்பார்கள். அப்பாவைவிட அம்மாக்கள்தான் பதின்மவயது பிள்ளைகளுக்கு வில்லிகளாகத் தெரிவார்கள். தகப்பன் வேலைப்பளு, பிள்ளைகளின் எதிர்காலம் என ஓடிக்கொண்டிருப்பவர். தாயோ பக்கத்திலேயே இருந்து அணுஅணுவாக வளர்ச்சியை பார்ப்பவள். சின்ன அசைவும் சந்தேகத்தைதந்து தாயை உஷாரடைய வைத்து விடும்.

சில சமயம் பிள்ளைகள் தவறு செய்யும் பொழுது,இதை அப்பாவிடம் சொல்லவேண்டாம் என்பார்கள், சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் இருதலை கொள்ளி எறும்பாகி கடைசியில் கணவனிடம் சொல்லி விடுவாள். பிள்ளை கடுப்பாகி விலக ஆரம்பிக்கும். சொல்லாமல் போனால் கணவன் மனைவி உறவுக்குள் விரிசல் வந்துவிடும் என அந்தக் குழந்தைக்கு தெரியாது. அம்மாவிடம் அதிகம் பிரச்சினையாக காரணம் நண்பர்கள், பாடங்கள், ஹோம் வொர்க்குகள்,டிவி அதிகம் பார்த்தல், அறையை, வீட்டை சுத்தமாக வைக்கச் சொல்லுதல் போன்ற சின்ன சின்ன விஷயங்களும் பிரச்சினையை தரும். அரசியல் போல பெரிய பிரச்சினை இல்லை. அருகில் அமர்த்தி பேசி புரிய வைக்க வேண்டும். எனது நண்பர்கள் கீழே விளையாடுகிறார்கள், நானும் விளையாட வேண்டும். அப்பொழுதுதான் படிப்பேன் என்றான் எனது மகன். வெள்ளிக்கிழமை – ஞாயிற்றுக்கிழமை வெளியே விளையாட அனுப்புவேன். மற்ற நாள்களில் யோகா, தியானம், சுலோகங்கள் என நானே சொல்லிக்கொடுப்பது பழக்கம். இரண்டு நாள் அம்ருதா, ஆஷிஷ் இருவர் மட்டும் பூங்காவுக்கு சென்று பூப்பந்து விளையாடுவார்கள். விளையாட்டு, பிறருடன் கலத்தல் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் மற்ற விஷயங்களும். அனுப்ப மாட்டேன் என்றால் பிடிவாதம் அதிகமாகும். குறிப்பிட்ட நேரத்தில் வீட்டுக்கு வந்துவிட வேண்டும் எனும் கண்டிப்புடன் தினமும் விளையாட அனுப்பினேன்.

யோகா, தியானம், சுலோகங்கள் வகுப்புக்கள் நடக்க வில்லை. பரீட்சைகள் முடிந்து மதிப் பெண்கள் பார்த்தால் இன்னும் குறைந்து விட்டது. அனுப்பினால் படித்து நல்ல மதிப்பெண் எடுப்பேன் என்றாயே! இப்போது என்னாச்சு? ஏன் குறைந்தது? எனக் கேட்டேன். பதிலே இல்லை. இப்பொழுது என் சொல்படி கேட்டே ஆக வேண்டும்! உன்வழியில்சென்றதில்பலனில்லை. என் வழியில் வந்தால் விளையாட்டு, படிப்பு மற்றும் மற்ற கலைகளுக்கும் நேரம் இருக்கிறது என்றதும் யோசித்து ஒத்துக் கொண்டான். மதிப்பெண் நல்ல படியாக வந்தது. இப்போது நானும், பிள்ளையும் சந்தோஷம். விட்டுப் பிடிப்பது எனும் உத்தி தான். இது அதி கம் விட்டுவிடாமல் கொஞ்சம் கயிறை என்னிடமும் வைத்துக் கொண்டு விட்டேன். பலன் கிடைத்தது. இந்த உத்தி தான் பதின்மவயதுக்கு ஒத்துவரும். அவர்கள் வழியிலேயே போய் அவர்களை மாற்றுவது. மதிப்பெண் பற்றி பேசும்பொழுது வகுப்பில் முதல் மதிப்பெண், எல்லாவற்றிலும் 90 க்கு மேல்தான் வரவேண்டும் என அடம் பிடிக்க மாட்டேன். மனனம் செய்து 100 வாங்குவதை விட புரிந்து 75 வாங்கினாலும் சந்தோஷம். ஆஷிஷிடம் நான் சொல்வது இது தான்,நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெட புழுதியில் எறிவதுண்டோ என்று பாரதியார் பாடியிருக்கிறார். உனக்கு படிப்பு ஏறாத முட்டாள் என்றால் என் பிள்ளைக்கு இருக்கும் திறன் அவ்வளவுதான் என விட்டு விடுவேன். வேறு வகையில் உன் வாழ்க்கை அமைய என்ன செய்யவேண்டுமோ அதற்கான முயற்சி செய்வேன். அபாரமான உன் திறமையை நீயே வீணாக்கிக் கொள்ளும் பொழுது மனம் பாரமா கிறது. அப்புறம் சின்ன சின்ன பாராட்டுக்கள் மிக முக்கியம். ஊக்கம்தரும் அந்த வார்த்தைகள் செடிக்கு உரம் போல. பசங்க படத்தில் ஒரு காட்சி. சைக்கிள் ஓட்டப் போட்டியில் தன் பெற்றோர் தன் கூட கைதட்டி வரவேண்டும் என அன்பரசு கேட்பான். சரிப்பா!! என்று மொத்தக் குடும்பமும் கைதட்டி உடன் வரும். எதிர்வீட்டு ஆசிரியர், பையனை போட்டியில் கலந்து கொள்ளச் சொன்னா மொத்த குடும்பமும் கூட ஓடுது என புகழ் வார்த்தை உற்சாகத்தால் ஜெயித்தது பெற்றோரின் ஊக்கத்தோடு பங்கு பெற்ற அன்பரசு தான்.

தூக்கமருந்தை போன்றவை பெற்றவர் கூறும் புகழுறைகள் என்று பாடியிருக்கிறார்கள். அளவுக்கு அதிகமாகிப் போனால் நிஜமாகவே அவர்களுக்கு ஊக்கம் தரும் விதத்தில் பாராட்டுக்கள் அவசியம். சின்ன ட்ரீட் கொடுக்கலாம்.

**உடன்பிறப்புக்களுடனான உறவுமுறை:**

நண்பர்களுடன் தினம் விளையாடினாலும் ஆஷிஷ் அம்ருதா இருவர் மட்டும் சில சமயம் தனியாக விளையாடவேண்டும் என சொல்லியிருக்கிறேன். காரணம் அண்ணன் தங்கையின் உறவு பலப்படும். வயது ஏற ஏற உடன் பிறந்தவர்களுடன் உறவில் கொஞ்சம் விரிசல் விழும். அதிலும் அதிக வயது வித்தியாசம் இருந்தால் ரொம்ப கஷ்டம். ஒருவருக்கு மட்டும் அதிக அன்பு கிடைப்பதாக மற்ற பிள்ளை நினைப்பது, அவர்களுக்குள் அடிக்கடி நடக்கும் சண்டைகள், பொறாமை ஆகியவை இடைவெளியை கொடுக்கிறது. பெற்றோர்கள் இருவரிடம் எப்படி நடக்கிறார்கள் என்பதை பொறுத்தும் இது அமையும். ஆண் குழந்தைதான் பெரிது என கொஞ்சம் இழிவாக நடத்தப்படும் பெண்குழந்தை, அல்லது அடுத்தவர் வீட்டுக்கு போய்விடுவாள் என்பதற்காக அன்பை அள்ளிக்கொட்டி வளர்க்கப்படும் பெண்குழந்தை இருக்கும் வீட்டில் அன்புக்கு ஏங்கும் ஆண்மகன் இவர்கள் மனதில் இருக்கும் வடுக்கள் அவர்களின் முதுமை காலத்திலும் கூட ஆறாத வடுக்கள். இது குழந்தைக்கு தன் மீதே வெறுப்பு வர வைக்கும். இதனாலேயே தன் உடன் பிறந்தவரைவிட தன் நட்புடன் காலத்தை கழிக்க விரும்புவார்கள். நல்லதொரு குடும்பத்தை பிள்ளைக்கு அளித்து நல்லவிதமாக வாழ வழி செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மில்லட்ஸ்

# முதுமைக்கேற்ற உணவு

முதுமையில் நலமுடன் வாழ, தவறாமல் செய்யும் உடற்பயிற்சியும், சத்தான உணவும் மிகவும் அவசியம். அரிசி, கோதுமையை தவிர முதியோர் நலம் பேண வேறு ஏதாவது உணவு உண்டா? ஆம், சமீப காலமாக நமது உணவுப் பழக்கத்தில் பழைமையை நோக்கிப் புறப்பட வேண்டியதாயிற்று. அதுதான் மில்லட்ஸ் என்னும் சிறுதானியங்கள் அடங்கிய உணவுகள்.
நம் நாட்டில் எட்டுவகையான மில்லட் என்னும் தானியங்கள் உள்ளன. உதாரணம் :– கொள்ளு, ராகி, சோளம், கம்பு, தினை போன்றவை. தற்பொழுது அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவுகள்தான் மக்களுக்கு மிகவும் தெரிந்த உணவாக உள்ளன. அரிசி, அரிசி என மூன்று வேளையும் அதே உணவை உட்கொண்டு உடல் பருமனாகி தீராத நீரிழிவு நோய்க்கு ஆட்பட்டு அல்லற்படுகிறார்கள். சீக்கிர உணவு போன்ற எண்ணெய், கொழுப்பு மற்றும் உப்பு மிகுந்த உணவை உட்கொண்டு, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு அவதிப் படுகிறார்கள். வாய்க்கு ருசியானவை எல்லாம் உடலுக்கு தீங்கானவை என்பதை மக்கள் உணருவதில்லை. மேலும் மக்கள் ஆற அமர அமர்ந்து மெதுவாக மென்று தின்னும், உணவு உண்ணும் முறையை அடியோடு மறந்துவிட்டு, அவசர அவசரமாக நின்று கொண்டோ அல்லது சிறு நடை பயின்று பேசிக்கொண்டோ தின்னும் பழக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.




## கொள்ளு

கொழுத்தவனுக்கு கொள்ளு என்றொரு சொல்வடை உண்டு. உடற் பருமனை குறைக்க இது ஒரு சிறந்த உணவு. குதிரைக்கு பிரியமானதும் கொள்ளுதான். அதில் நார்ச் சத்து மிக அதிகம். 100கிராம் கொள்ளில் 5.3 கிராம் நார்ச்சத்துண்டு. நார்ச்சத்து மலச்சிக்கல் வராமல் பாதுகாப்பது மட்டுமல்லாமல் குடலில் புற்றுநோய் வருவதையும் குறைக்கிறது. மேலும் இரத்தத்தில் சீனியின் அளவு மற்றும் கொழுப்பின் அளவையும் குறைக்கிறது. கல்லீரலில் கற்கள் படிய விடாமல் பாதுகாக்கிறது. மனிதர்களின் உடலிலுள்ள கொழுப்பை நீக் கித் திடமாக வைத்திருக்கும் ஓர் அற்புதமான தானியம் கொள்ளு. கொள்ளைவேக வைத்து, சுண்டல் செய்து மாலையில் சிற்றுண்டி போல் சாப்பிடலாம், மற்றும் கொள்ளை சூப்பாகக்கூட வைத்து சாப்பிடலாம்.



## சோளம்

இதில் கலோரி அதிகமுள்ளதால் உடம்புக்கு அதிக சக்தி கொடுக்கவல்லது. இதில் பொஸ்பரஸ்சத்து அதிகமுள்ளது. பொஸ்பரஸ் சத்து பல் மற்றும் எலும்புகளுக்கு மிகவும் தேவையானது.
தற்பொழுது கடற்கரைகளிலும், பொது இடங்களிலும் சோளக்கதிர், சோளப்பொரி போன்றவைகள் விற்பதையும், அதை ஆர்வத்துடன் பெரியவர்களும், குழந்தைகளும் விரும்பி வாங்கிச் சாப்பிடுவதையும் பார்க்க முடிகிறது.
இதில் விற்றமின் பி 1, பி 5 மற்றும் சி உள்ளன. நார்ச்சத்து அதிகமுள்ளது. இது மூளையை நன்றாக செயற்பட உதவுவதால் மன உளைச்சலைக் குறைக்கிறது. இதில் ஹோமாசிஸ்டின் அளவைக்குறைக்கும் திறன் உள்ளதால் மாரடைப்பு வருவதை வெகுவாகக் குறைக்கிறது. சோளத்தை தொடர்ந்து சாப்பிடுவதால் நீரிழிவுநோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் வருவதைத் தடுக்க முடிகிறது. சோளத்தை சோளப்பொரி, சோள எண்ணெய், சோள ரொட்டி என பலவகைகளில் சமைத்து உபயோகப்படுத்தலாம்.




## கேழ்வரகு

கேழ்வரகுக்கு ராகி என்ற இன்னொரு பெயரும் உண்டு. ராகி எளிய முறையில் பயிர் செய்யக் கூடிய ஒரு தானியம். அதை யாரும் விரும்பி உண்ணாததனால் இந்தத் தானியம் கடையில் கிடைப்பதுகூட மிகவும் அரிதாகிவிட்டது. இதில் நிறையக் கலோரிகள் உள்ளன. சுண்ணாம்புச் சத்தும் கேழ்வரகில் அதிகம். உதாரணமாக 100 கிராம் கேழ்வரகில் 344 மில்லி கிராம் சுண்ணாம்புச் சத்துள்ளது. கேழ்வரகு எளிதில் செரிக்கக் கூடியது. விலையும் மலிவு.
இதில் கல்சியம் அதிகம் இருப்பதால் மாதவிடாய் அடைந்த பெண்களுக்கு எலும்புப் பலவீனத்தைத் தடுக்க ராகி ஒரு சிறந்த உணவாகும். நீரிழிவு மற்றும் உடற்பருமனைக் குறைக்கும். ராகி செரிமானத்துக்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வதால் அதிக நேரம் வயிறு நிரம்பியது போலவே இருக்கும். இதில் நார்ச்சத்து அதிக முள்ளதால் மலச்சிக்கலைப் போக்கும். ராகியில் கொழுப்புச் சத்து மிகவும் குறைவு. ராகியை தோசை, இட்லி, ரொட்டி, கஞ்சி, களி போல செய்து சாப்பிடலாம். தற்பொழுது ராகி பிஸ்கட் வடிவத்திலும் கிடைக்கிறது.

## தினை

பண்டைக்காலத்தில் தேனும் தினை மாவும் ஒரு முக்கிய உணவாக இருந்ததை நாம் நூல்களில் படித்துத் தெரிந்து கொண்டுள்ளோம். ஆனால் தற்பொழுது மனிதர்கள் அதை உணவாக எடுத்துக் கொள்வது இல்லை. அதற்கு மாறாக வீட்டிலுள்ள செல்லப் பிராணிகளுக்கு (கோழி, லவ்பேர்ட்ஸ்) உணவாகக் கொடுப்பதை நாம் காண முடிகிறது. மற்ற தானியங்களைப் போலவே தினையிலும் சுண்ணாம்புச் சத்து, நார்ச்சத்து மற்றும் கலோரிச் சத்து அதிகம் உள்ளது.





## கம்பு

கம்பு மிகவும் சுவை மிகுந்தது. சமைத்த பின்பு அதன் அளவு மூன்று மடங்கு அதிகரிக்கும் தன்மையுள்ளது. இதில் விற்றமின்கள், தாது பொருள்கள் நிறைய உள்ளன. இதில் மாச்சத்து அதிகமுள்ளதால் அதிக சக்தி கொடுக்க வல்லது. கம்பில் புரதச்சத்தும் நார்ச் சத்தும் அதிகமுள்ளது.
இதைத் தொடர்ந்து சாப்பிடுவதால் மலச்சிக்கல் மற்றும்வயிற்றுப்புண் வராமல் தவிர்க்கலாம். மேலும் இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோல் அதிகரிக்காமல் தடுக்க முடியும். சில புற்று நோய்களையும் வராமல் தடுக்க முடியும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்பு. நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைக்க உதவும். கம்பு சாப்பிட்ட பின்பு வயிறு நிரம்பியதுபோல் தோன்றுவதால் மேலும் அதிகமாக உணவு உண்ண முடியாது. இதன் மூலம் உடல்பருமனாக உள்ளவர்களுக்கு எடை குறை வாய்ப்புண்டு. கம்பு மாவை இரவில் நீரில் கலந்து கொதிக்க வைத்துவிட்டு, காலையில் கம்புடன் தயிர் அல்லது மோர் கலந்து கஞ்சி அல்லது கூழ் போல் அருந்துவது உடலுக்கு மிகவும் நல்லது. முக்கியமாக கோடை காலத்தில் மிகுந்த சக்தியையும் குளிர்ச்சியையும் தரும். கம்பை களி, கஞ்சி, ரொட்டி, தோசை, பிஸ்கட் போலவும் செய்து சாப்பிடலாம்.

## சிறுதானியங்களின் மருத்துவப் பயன்கள்

நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கலை தடுக்கின்றன.
சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ளதால் பல்லையும் எலும்பையும் உறுதிப்படுத்துகின்றன.
அதிகமாக உள்ள கலோரிச் சத்தினால் இவ்வுணவை உண்டபின் உடலுக்கு சத்து உடனே கிடைக்கிறது.
குடலில் இருந்து சீனி மெதுவாக உறுஞ்சப்படுவதால் இரத்தத்தில் சீனியின் அளவு குறைகிறது.
இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்துக் குறைகிறது.
ஒரு சில புற்றுநோய்களை வராமல் தடுக்கின்றன. (உதாரணம்:– குடல் புற்று நோய்)
சில தானிய வகைகள் மனநலத்துக்கு உகந்தவை.
அஜீரணத்தை ஏற்படுத்தாது மற்றும் எந்தவிதமான ஒவ்வாமையையும் உண்டாக்காது.
கம்பு,ராகி போன்றவைகளின் கஞ்சி, கோடையில் வெப்பத்தைக் குறைக்க உதவுகிறது.
உணவு உண்ட பின்பு, வயிறு நிரம்பியது போல மனம் திருப்தி அடையும்.
மூன்று வேளையும் அரிசி உணவு. உடற்பயிற்சி இல்லை. எப்பொழுதும் தொலைக்காட்சியே கதி என்று கிடப்பது. விளைவு:– உடற்பருமன், நீரிழிவு நோய். மருத்துவமனைகளில் நோயாளிகளின் கூட்டம் அலைமோதுகிறது. இதைத் தவிர்க்க சிறந்தவழி, சிறு தானிய உணவு முறைகளுக்கு நமது உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொள்வதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org